# ஆவிக்குரிய அறுவடைக்கான உபாயங்கள்

**சர்வதேச அறுவடைநேர நிறுவனம்**

இப்பாடமானது **சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின்** செயல்திட்டங்களில் ஒரு பகுதியாக இருக்கின்றது. இத்திட்டம் விசுவாசிகள் தாக்கமுள்ள ஆவிக்குரிய அறுவடையை செய்யும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், வரிவசூலிப்பவர்கள் போன்றோருக்கு இயேசு கற்பித்து, அவர்களை மீள உருவாக்கும் கிறிஸ்தவர்களாக்கி, அவர்கள் வாழ்ந்த உலகத்தை சுவிஷேசத்தை ஆளுமையின் வல்லமையால் மாற்றியமைத்ததைப்போன்று உங்களுக்கும் கற்பிப்பதே இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

பாடத்திட்டத்திலுள்ள பல பாடங்களில் இக்கையேடும் ஒன்றாகும். சுவிஷேச மயமாகுக்கும் இலக்கை நிறைவேற்ற, விசுவாசிகள் பெருக, பிரதிநிதிகளாக செயல்பட, ஆயத்தம் செய்யப்படவும் இப்பாடம் உதவும்.

© Harvestime International Institute

# பொருளடக்கம்


இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு? . . . . . . 3
குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள் . . . . . . 4
பாடத்தின் அறிமுகம் . . . . . . . . 5
பாடத்தின் நோக்கங்கள் . . . . . . . . 6

## பாகம் ஒன்று: காணுதல் (காட்சிப்படுத்தல்)

1. தரிசனத்தின் பிறப்பு . . . . . . . . 7
2. தரிசனம் . . . . . . . . . 18
3. அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக்கின்றது. . . 27

## பாகம் இரண்டு: கொள்கை

4. வசனத்திலுள்ள உலகம் . . . . . . . 33

## பாகம் மூன்று: பொருளாக்கம்

5. துருபிடித்த அரிவாளும், காலியான வயல்களும் . . . . 41
6. ஆவிக்குரிய அறுவடைக்கான உபாயங்கள் - பகுதி 1 . . . 61
7. ஆவிக்குரிய அறுவடைக்கான உபாயங்கள் - பகுதி 2 . . . 73
8. வெளிப்படுத்தல் மூலமான அறுவடை . . . . . 82

## பாகம் நான்கு: எதிர்பார்ப்பு

9. நுகத்தை உடைத்தல் . . . . . . . . 98
10. ஜாதிகளை ஆசீர்வதித்தல் . . . . . . . 108
11. தரிசனம் உண்மையாக மாறுதல் . . . . . . 120

சுய பரீட்சைக்கான விடைகள் . . . . . . . 127

# இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு?

### கையேட்டின் வடிவமைப்பு

ஒவ்வொரு பாடத்திலும் அடங்குபவை:

**குறிக்கோள்கள்:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இலக்கை நிறைவேற்ற முற்படுவீர்கள். பாடத்தை ஆரம்பிக்க முன்னர் அவைகளை வாசியுங்கள்.

**திறவுகோல் வசனம்:** அதிகாரத்தின் முக்கிய விடயத்தை இவ்வசனம் பிரபலிக்கும். மனனம் செய்யுங்கள்.

**அதிகாரத்தின் பொருளடக்கம்:** ஒவ்வொரு பகுதியையும் கற்கவும். வேதாகமத்தை பாவித்து கையேட்டில் இல்லாத வசனங்களையும் கவனிக்கவும்.

**சுயபரீட்சை:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இப்பரீட்சையை செய்யவும். வேதாகமத்தையும் கையேட்டையும் பாராமல் வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள். விடையளித்து முடிந்ததும் இப்புத்தகத்தின் கடைசி பக்கத்திலுள்ள விடைகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்.

**மேலதிக படிப்பினைக்கு:** தேவனுடைய வசனத்தை தொடந்தேர்ச்சியாக கற்றுக்கொள்ளவும், கற்றல் திறனை அபிவிருத்தி செய்யவும், உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும், கற்றதை பிரயோகிக்கவும் இப்பகுதி உதவும்.

**இறுதி பரீட்சை:** நீங்கள் மதிப்பெண்களை பெறும்படியாக இப்பாடத்தை பதிவு செய்து கற்பீர்கள் என்றால் இப்பாடத்தின் இறுதியில் பரீட்சை எழுத வேண்டும். பரீட்சையை செய்து முடித்த பின்னர் மதிப்பெண்ணை பெற பரிசோதனைக்காக விடைத்தாளை திருப்பி அனுப்பி வைக்கவும்.

மேலதிகமாக தேவைப்படுபவை

King James வேதாகமம் மேலதிகமாக தேவைப்படும்.

# குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள்

### முதல் கூடுகையில்

**ஆரம்பம்:** ஜெபத்தோடும் அறிமுகத்தோடும் ஆரம்பியுங்கள். நன்கு அறிமுகமாகி மாணவர்களை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தொடர்ந்து செயலாற்றகூடிய குழுவை நியமியுங்கள்:** கூட்டத்தை வழிநடத்துவது யார், நேரம், இடம், திகதி என்பற்றை முடிவு செய்யுங்கள்.

**துதியும் ஆராதனையும்:** உங்கள் பயிற்சியின் வேளையில் பரிசுத்த ஆவியானவர் பிரசன்னமாயிருக்க அவரை அழையுங்கள்.

**கையேடுகளை மாணவருக்கு பகிர்ந்தளித்தல்:** கையேட்டின் தலைப்பையும், முதல் நான்கைந்து பக்கங்களிலுள்ள குறிக்கோள்களையும், அறிமுகப்படுத்துங்கள்.

**முதலாவது ஒப்படை:** மாணவர்கள் இப்பாடத்தை ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட முறையில் வாசிக்கவும், அடுத்த கூடுகைக்கு முன்னால் சுயமாக பரீட்சை செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழு கூடுகையின் போது அதிகாரங்களை முடிக்கும் எண்ணிக்கையானது அதிகாரத்தின் நீளத்திலும், உள்ளடக் கத்திலும், குழுவின் இயலுமையிலும் தங்கியிருக்கும்.

### இரண்டாவதும் தொடரும் கூட்டங்களும்

**ஆரம்பம்:** ஜெபியுங்கள். வரவேற்ற பின்னர் புதிதாக வந்த மாணவர்களை பதிவு செய்த பின் கையேட்டை வழங்குங்கள். வரவை பதிவு செய்யுங்கள். துதி ஆராதனையை நடத்துங்கள்.

**மீட்டல்:** கடந்த வகுப்பில் கற்றவற்றை சுருக்கமாக முன் வையுங்கள்.

**பாடம்:** அதிகாரத்திலுள்ள தடித்த எழுத்துகளிலுள்ள தலைப்புகளின் சகல பகுதிகளையும் கலந்து ரையாடுங்கள். மாணவருக்கு தாங்கள் கற்றுக்கொண்ட பகுதிகளில் கேள்விகள் அல்லது விமர்சனங்கள் இருப்பின் கூறச் சொல்லவும். ஜீவியத்திலும், ஊழியத்திலும் கற்றவற்றை பிரயோகிக்கும்படி மாணவரை கேட்டுக் கொள்ளுங்கள்.

**சுயபரீட்சை:** சுய பரீட்சையை செய்திருப்பின் மீட்டல் செய்யுங்கள். (சுய பரீட்சைக்கான பதில்கள் கையேட்டில் இருக்க வேண்டியதில்லை என நீங்கள் தீர்மானித்தால் கடைசி பக்கங்களிலுள்ள அவற்றை அகற்றிவிடலாம்.)

**மேலதிக படிப்பினைக்கு:** இத்திட்டத்தை குழுவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ செய்யலாம்.

**இறுதிப்பரீட்சை:** உங்கள் குழுவினர் மதிப்பெண்களை பெறுவதற்காக கற்பார்களாயின், இப்பாடத் திற்கான கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். அதை பிரதிபண்ணி, மாணவரிடம் பரீட்சை எழுத கொடுத்து கண்காணிக்கவும்.

**தொகுதி: காணுதல் (காட்சிபடுத்தல்)**
**பாடத்திட்டம்: ஆவிக்குரிய அறுவடைக்கான உபாயங்கள்**

# பாடத்தின் அறிமுகம்

நீதிமொழிகள் 29:18 ஆம் வசனத்தில் "தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்" என வேதாகமம் கூறுகின்றது.

உலகமெங்கிலுமுள்ள மறுபிறப்படைந்த விசுவாசிகளும் கூட சீர்கெட்டுப்போய் கொண்டிருக்கின்றார்கள்.

இல்லை.. அவர்கள் பாவத்தினால் சீர்கெட்டுப்போகவில்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவினூடாக இரட்சிப்பை பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் சபையின் ஆராதனைகளில் பங்குபற்றுகிறார்கள், வேதம் வாசிக்கிறார்கள், அநேகர் சபையின் தலைவர்களாகவும் இருக்கக்கூடும்.

ஆனாலும் ஆவியில் மரித்துபோகின்றார்கள். விசுவாசிகள் தங்கள் உயிர்களைக் கொடுக்கின்றனர். அவர்கள் ஆவிக்குரிய உற்சாகத்தை இழந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு குறிக்கோளும் நோக்கமும் இருப்பதில்லை. அவர்களுக்கு தரிசனமும் கிடையாது.

இங்கே தரிசனம் என நாம் குறிப்பிடுவது வெளிப்படையாகத் தெரியும் காட்சிகளையல்ல. அது கண்ணுக்கு புலப்படும் காட்சியல்ல. அது ஆவிக்குரிய தரிசனம்.

-நீங்கள் ஆவிக்குரிய வெறுமையை உணருகிறீர்கள்...
-நீங்கள் தேவனால் பயன்படுத்தப்படுகின்றீர்கள், ஆனால் அவரது திட்டத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை...
-கிறிஸ்தவத்தில் ஏதோவொன்று இருக்கின்றது, ஆனாலும் வாழ்கையில் அது இழக்கப்பட்டு விழுந்து போயிருக்கின்றது.

தரிசனமே இதற்கான பதில் ஆகும்!

தேவன் ஆவியில் மரித்துபோயுள்ள மனிதர்களை ஆவிக்குரிய ரீதியில் உயிரடையச் செய்கின்றார். இத்தரிசனம் நீங்கள் வாழ்வதற்கான புதிய அர்த்தத்தையும் வழிகாட்டலையும் தரும். இது உங்களை கிறிஸ்துவின் சரீரத்துடனும் உண்மையான சபையுடனும் இணைத்து, பொதுவான நோக்கத்தை தரும். தரிசத்தைக் கொண்ட இப்பாடத்தின் பெயர் "ஆவிக்குரிய அறுவடைக்கான உபாயங்கள்" என்பதாகும். இப்பாடம் உங்களை நான்கு படிகள் மூலம் நிச்சயமான நோக்கத்தை அடைவதற்கு உதவி செய்யும்.

-**தரிசனம் காணுதல்:** தரிசனத்தை அடையாளம் காணுதல்.

-**எண்ணக்கருவை காணுதல்:** தரிசனத்திற்கு பின்னாலுள்ள எண்ணக்கருவையும் நோக்கத்தையும் கற்றுக் கொள்ளுதல்.

-**நோக்கங்களை காணுதல்:** தரிசனத்தை நிறைவேற்ற நோக்கங்களை கற்றுக் கொள்ளுதல்.

-**எதிர்பார்ப்பை இனங்காணுதல்:** எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வது உங்கள் தரிசனத்தின் பகுதியாக மாற்றமடையும்.

# பாடத்தின் நோக்கங்கள்

இப்பாடத்திட்டத்தை நீங்கள் கற்று முடிக்கின்றபோது உங்களால்:

- இயற்கையான அறுவடையின் தரிசனத்தை ஆவிக்குரிய சமாந்தரமாக விளங்கிக்கொள்ளவும்,
- உங்களுடைய வாழ்விலும் ஊழியத்திலும் ஆவிக்குரிய அறுவடைக்கான உபாயத்தை பயன்படுத்தவும்,
- ஆவிக்குரிய அறுவடையை தடுக்கும் காரணிகளை கண்டறியவும்,
- உலகத்தை தேவன் பார்ப்பதுபோல் பார்க்கவும்,
- வெளிப்படுத்தப்பட்ட அறுவடையை அறுக்கவும் முடியும்.

**பாகம் ஒன்று: கானுதல் (காட்சிப்படுத்தல்)**
**தரிசனத்தை அடையாளம் கானுதல்**

## அதிகாரம் ஒன்று

# தரிசனத்தின் பிறப்பு

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

☐ "ஆவிக்குரிய தரிசனத்தை" விளங்கப்படுத்தவும்,

☐ ஆவிக்குரிய தரிசனத்தின் பிறப்பின் செயல்முறையை விளக்கவும்,

☐ இயற்கையான பிறப்பையும், தரிசனத்தின் ஆவிக்குரிய பிறப்பையும் ஒப்பிடவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

**தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள். (நீதிமொழிகள் 29:18)**

## அறிமுகம்

நீதிமொழிகள் 29:18 ஆம் வசனத்தில் "தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்" என வேதாகமம் கூறுகின்றது. இவ்வசனம் ஆவிக்குரிய தரிசனம்பற்றியே குறிப்பிடுகின்றது.

ஆவிக்குரிய தரிசனம் வழிகாட்டலை வழங்குகின்றது. அது வாழ்வின் சவால்களை சந்திப்பதற்கான அமைப்பை வழங்குகின்றது. அது இல்லாவிட்டால் மக்கள் ஆவிக்குரிய மரணமடைவர். ஆவிக்குரிய தரிசனத்தை அங்கிகரித்து நடைமுறைப்படுத்தும்போது தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கி-றதற்கான நோக்கத்தை கொண்டிருப்பீர்கள். இந்த அதிகாரத்தில் இந்த வளர்ச்சியை நாம் "தரிசனத்தின் பிறப்பு" என அழைப்போம்.

## ஏன் ஆவிக்குரிய தரிசனம்?

ஆவிக்குரிய தரிசனம் ஏன் அவசியம்? அது இல்லையென்றால் ஏன் மக்கள் சீர்கெட்டுப் போவார்கள்?

ஆவிக்குரிய தரிசனத்தை பற்றியதான பல வேதாகம உதாரணங்கள் இருக்கின்றபோதும், அதிலொன்றிலிருந்து இதற்கான பதிலை பெற்றுக்கொள்வோம். தீர்க்கதரிசியான எலிசா மற்றும் அவனது வேலைக்காரனான கேயாசியினதும் கதையை 2 இராஜாக்கள் 6:15-17 வரையும் வாசியுங்கள்.

தேவனுடைய மக்களான இஸ்ரவேலர் எதிரிகளான சிரிய நாட்டினரால் சுற்றிவளைக்கப்பட்டு இருந்தனர். அவர்களிடம் ஏராளமான வீரர்களும், குதிரைகளும், போர் ரதங்களுமிருந்தன. எலிசாவின் வேலைக்

காரனான கேயாசி இப்பெரும் எதிரிப்படையைக் கண்டு பயப்பட்டான். அவன் எலிசாவிடம் வந்து "நாம் என்ன சேய்யப்போகிறோம்?" என கூக்குரலிட்டான். எலிசாவோ:

> **பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். (2 இராஜாக்கள் 6:16)**

அப்பொழுது எலிசா, ஆவிக்குரிய உலகத்தை கேயாசி பார்க்கும்படிக்கு அவனது கண்களைத்திறக்கும்படியாக தேவனிடத்தில் ஜெபித்தான். அவனது விண்ணப்பம் கேட்கப்பட்டது, கேயாசி ஆவிக்குரிய தேவ-சேனைகள் இஸ்ரவேலரைச் சுற்றிலும் இருப்பதைக் கண்டான்.

இந்த உதாரணத்தில் கேயாசி இயற்கையான கண்களால் ஆவிக்குரிய தரிசனத்தை பார்க்கும்படிக்கு தேவன் மெய்யாகவே அனுமதியளித்தார். ஆனாலும் மிக முக்கியமாக தேவனுடைய மக்களுக்கு ஆவிக்குரிய தரிசனமில்லாமல் அவர்களுடைய வாழ்க்கையில் இயற்கைளான சூழ்நிலைகளை காண முடியாது.

கேயாசியைப்போலவே, தம்மைச் சுற்றிலுமிருக்கின்ற பௌதீக உலகத்தின் எதிரியின் வல்லமைகளை தோற்கடிக்க முடியாதிருக்கின்றார்கள். அவர்களுடைய கவனம் அவர்களது பிரச்சனைகளை நோக்கிப் பார்ப்பதோடு, "நாம் என்ன செய்யப்போகின்றோம்" எனவும் கதறுகின்றார்கள். ஆவிக்குரிய தரிசனம் இல்லாமல் தேவனுடைய திட்டத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியாது.

## ஆவிக்குரிய பார்வையை வளர செய்தல்

நீங்கள் மறுபடியும் பிறக்கும் முன்னர் பாவத்தினால் குருடராயிருந்தீர்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்-தின் மூலமாக இரட்சிக்கப்பட்டீர்கள், அடிப்படையில் குருட்டாட்டத்திலிருந்து குணமானீர்கள். இதனால் ஆவிக்குரிய தரிசனத்தில் வளரவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்.

இதற்கிணையான ஓர் உண்மைச்சம்பவம் இயேசுவின் ஊழியத்தில் நடைபெற்றது.

> **பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார். அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டு வந்து, அவனைத் தொடும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள்.**
>
> **அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்மேல் கைகளை வைத்து: எதையா-கிலும் காண்கிறாயா என்று கேட்டார்.**
>
> **அவன் ஏறிட்டுப் பார்த்து: நடக்கிற மனுஷரை மரங்களைப்போலக் காண்கிறேன் என்றான்.**
>
> **பின்பு அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்து, அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார். அப்பொழுது அவன் சொஸ்தமடைந்து, யாவரையும் தெளிவாய்க் கண்டான். (மாற்கு 8:22-25)**

இந்த அற்புதம் இயேசுகிறிஸ்துவினால், அவர் பூமியில் ஊழியம் செய்து வருகின்றபோது உண்மையாகவே நடைபெற்ற சரீரகுணமாக்கலாகும்.

இயேசுவின் முதல் தொடுகையிலேயே அவன் ஏன் பூரணமாய் குணமடையவில்லை? இயேசுவிற்கு வல்லமை இருக்கவில்லையா? அவர் ஜீவனுள்ள தேவனின் குமாரனாக இருக்கவில்லையா? ஆவிக்குரிய சத்தியத்தை விளங்கப்படுத்துவதற்கு பௌதீக உதாரணத்தை இயேசு வழங்கினார். இந்த பௌதிக குணமாக்குதலைப் போன்று ஆவிக்குரிய ரீதியில் இயேசு உன்னை தொட விரும்புகின்றார். முதலாவதாக உங்கள் வாழ்விலுள்ள அடிப்படை குருட்டுத்தன்மையை குணமாக்க விரும்புகிறார். பின்னர் அவர் ஆவிக்குரிய தரிசனத்தை வளரச் செய்ய விரும்புகிறார்.

## ஆவிக்குரிய தரிசனம் என்றால் என்ன?

ஆவிக்குரிய தரிசனம் பௌதீக உலகைத்தாண்டி ஆவிக்குரிய உலகத்தை பார்ப்பதைக் கொண்டிருக்கும். அது உங்களது வாழ்வில் தேவனுடைய தெய்வீக நோக்கத்தை புரிந்துகொள்ள உதவிசெய்யும்.

விசுவாசிகள் ஆவிக்குரிய ரீதியில் பின்வரும் வகையில் "சீர்கெட்டு" போகின்றார்கள்:

-அவர்களுக்கு ஆவிக்குரிய தரிசனம் கிடையாது.

-அவர்கள் ஆவிக்குரிய தரிசனத்தை பெற்றுள்ளார்கள், ஆனால் அதற்கு கீழ்ப்படிவதில்லை.

-அவர்களுக்கு தரிசனமுண்டு, ஆனால் அதை எப்படி நிறைவேற்றுவது என தெரியாது. அவர்கள் முயற்சித்தும் தோல்வியடைந்துள்ளனர், அல்லது அவர்கள் ஒருபோதும் முயற்சிக்கவில்லை.

ஆவிக்குரிய தரிசனம் பெற நீங்கள் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகின்ற காரியத்தைக் குறித்த தெளிவான தோற்றத்தை வழங்கிய பின்னர், கிறிஸ்தவ வாழ்க்கையின் படியை நோக்கிய இலக்கை அடைவதற்கு வழிநடத்துகின்றது.

## பவுலின் தரிசனம்

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஓர் தரிசனமிருந்தது. அவர் கூறினார்:

> **நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்படியாதவனாயிருக்கவில்லை. (அப்போஸ்தலர் 26:19)**

பரலோக (ஆவிக்குரிய) தரிசனம் பவுலின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமையாக அமைந்தது. அத்தரிசனம் மாத்திரம் போதும் என எண்ணவில்லை. அத்தரிசனத்தை நிறைவேற்ற கிரியைச் செய்யப்பட வேண்டும்

தரிசனம் ஓர் "தொலைநோக்குதலை" உருவாக்கும். நீங்கள் கிரியைச் செய்யாவிட்டால் இத்தரிசனம் உண்மையானதாக மாறாது. தேவன் ஒரு தரிசனத்தை கொடுப்பாரேயானால் அதை நிறைவேற்றுவதற்கான ஆவிக்குரிய மற்றும் நடைமுறை உபாயங்களையும் கொடுப்பார்.

தேவன் பவுலுக்கு ஆவிக்குரிய தரிசனத்தைக் கொடுத்தபோது, அதை அவர் நிறைவேற்றும்படியாகவும் விஷேசித்த காரியங்களையும் கொடுத்தார்.

**இப்பொழுது நீ எழுந்து, காலூன்றிநில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன்.**

**உன் சுயஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலை யாக்கி,**

**அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்ட வர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். (அப்போஸ்தலர் 26:16-18)**

ஊழியம் செய்யவும் அவருக்கு சாட்சியாக இருக்கவும் தேவன் பவுலுக்கு ஆவிக்குரிய தரிசனத்தை கொடுத்தார்.

புறஜாதிகளிடத்திலேயே அவரது ஊழியம் இருந்தது. புறஜாதிகள் என்னும்போது அவர்கள் யூதர்கள் அல்லாதோராக மாத்திரமல்ல, உலகிலுள்ள சகல ஜாதிகளையும் அது குறிக்கும்.

தரிசனத்தை கண்டடைய தேவன் பவுலுக்கு நோக்கங்களை (திட்டத்தை) கொடுத்தார். பவுல்:

-அவர்களுடைய கண்களை இருளிலிருந்து ஒளியைகாணும்படியாக திறத்தல் வேண்டும்.
-அவர்களை சாத்தானின் வல்லமையிலிருந்து தேவனிடத்திற்கு திருப்புதல் வேண்டும்.
-அவர்களை பாவமன்னிப்புக்கு நேராய் வழிநடத்துதல் வேண்டும்.
-அவர்களை ஆவிக்குரிய உரிமைகளை விசுவாசத்தின் மூலம் சாத்தியமாக்குதல்.

## தரிசனத்தினுடைய பிறப்பு

தேவன் பவுலுக்கு கொடுத்ததுபோலவே தேவன் ஒரு ஆவிக்குரிய தரிசனத்தை உங்களுக்கு கொடுத்துள்ளார். நீங்கள் நிறைவேற்றக்கூடிய நோக்கத்தையும் தரிசனத்தையும் உங்களுக்கு தேவன் வெளிப் படுத்துகின்றார்.

நீங்கள் "தரிசனத்தின் பிறப்பை" அனுபவித்தீர்களானால், அவரது தெய்வீக திட்டத்தின் பங்குதாரர்களாக மாறுவீர்கள்.

இயற்கையான பிறப்பின் செயற்பாட்டின்போது மனித குழந்தையானது இவ்வுலகத்திற்கு கொண்டு-வரப்படும் போன்ற செயற்பாடுதான் ஆவிக்குரிய உலகில் தரிசனத்தின் பிறப்பின்போதான செயற்பாடு ஆகும். நீங்கள் ஆவிக்குரிய தரிசனத்தில் பிறப்படையும் போது கீழ்கண்ட படிமுறைகளை அனுபவிக் கின்றீர்கள்.

### கருத்து:

"கருத்தின்" அர்த்தம் உருவாக்கப்பட வேண்டியது என்பதாகும். தேவனால் உங்கள் ஆவியில் ஆவிக்குரிய

தரிசனம் உருவாக்கப்பட்டிருக்கும்.

தேவன் பவுலுக்கு ஆவிக்குரிய தரிசனத்தை கொடுக்கும்போது அவர் ஆதாரத்தை அடையாளம் காட்டினார். அவர் கூறினார், “இயேசு நானே” (அப்போஸ்தலர் 26:15). தேவன் பவுலுடைய தரிசனத்தை திட்டமிட்டார்.

**வளர்ச்சி:**

நீங்கள் முதன்முறையாக ஆவிக்குரிய தரிசனத்தை பெறும்போது, அது “கரு” நிலையில் இருக்கும். கருவானது ஜீவியத்தின் ஓர் அடிப்படை அணுவாகும். மனித கருவின் வளர்ச்சியை போல், நீங்கள் தேவனுக்குள் வளரும்போது, அவர் உங்களுடைய ஆவிக்குரிய தரிசனத்தை வளர செய்கின்றார்.

மனித குழந்தையின் ஜீவியத்தின் அடிப்படை அணு கருவாகும், அதிலிருந்தே மனிதனுடைய மேலதிகமானவைகள் வளர்ச்சியடைகின்றன. நீங்கள் கருவை மாற்ற முனைந்தால், அவலட்சணம் அல்லது மரணம் குழந்தைக்கு ஏற்படலாம்.

தேவன் அடிப்படை ஆவிக்குரிய தரிசனத்தை உங்களுக்குள் திட்டமிடுகின்றார். தரிசனம் கருவை போன்றதாகும், அதிலிருந்தே மற்ற காரியங்கள் வளர்ச்சி பெறுகின்றன. நீங்கள் தரிசனத்தை மாற்ற நினைத்தால், தேவனுடைய சரியான திட்டத்திலிருந்து அது உருமாற்றமடையும் அல்லது அது சிதைந்துவிடும்.

ஆவியில் வளரும்போது தரிசனம் வளர்ந்து அபிவிருத்தியாகும். அதன் இயல்புகள் நேற்றையதைபோல, கடைசி வாரத்தைபோல, கடைசி மாதத்தைபோல ஒரேவிதமாய் இராது. ஆனால் அநாதி திட்டத்தின்படி அழைக்கப்பட்ட நீங்கள் அடிப்படை தரிசனத்தை ஒருபோதும் மறத்தல் கூடாது.

இயற்கையான உலகத்தில் ஒரு தாயின் உடம்பினுள் இருப்பதைபோன்று விரிவாக்கப்படும் அனுபவமே இந்த தரிசனத்தின் அபிவிருத்தியாகும். தரிசனம் உங்களில் அபிவிருத்தியடையாதுபோனால் அது இறந்துவிடும்.

ஒரு தாய் தனது குழந்தையை தன் சரீரத்தில் சுமப்பதுபோல, நீங்கள் இந்த தரிசனத்தை உங்களில் பெற்றால் அது உங்களில் எப்பொழுதும் இருக்கும். அது உங்களுடைய வாழ்க்கை பகுதியில் இன்றியமையாதமாக மாறும். அது உங்களுடைய சொந்த வாழ்க்கைக்கேற்றாற்போல் மாறுவதோடு அது பெற்ற தெய்வீக ஆதாரத்திற்கேற்ப மாறும்.

ஓர் குழந்தை வளரும்போது, கர்ப்பிணித்தாய் சில காரியங்களை தனக்குத்தானே மறுப்பாள். உங்களுடைய ஆவிக்குரிய தரிசனம் அபிவிருத்தியடையும்போது, நீங்கள் இதையும் செய்ய வேண்டும். நீங்கள் உங்களுடைய சொந்த திட்டங்களையும், குறிக்கோள்களையும் உங்களுக்குள் மறுக்க வேண்டும். நீங்கள் உலக பொக்கிஷங்களை ஒருபக்கத்திற்கு போட வேண்டும். நீங்கள் உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் உங்களுடைய நேரத்தை தியாகம் செய்ய வேண்டும்.

**பிரயாசை:**

பிரசங்கி 5:3 குறிப்பிடுகின்றது:

**தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கிறது. (பிரசங்கி 5:3)**

“திரட்சி” என்னும் வார்த்தைக்கு அர்த்தம் அதிகம் என்பதாகும். “தொல்லை” என்பதற்கு எபிரெய மொழியின்படியான அர்த்தம், (கடினமான) பிரயாசம் ஆகும். ஆகவே சொப்பனம் அல்லது தரிசனம் “கடின பிரயாச”யத்திற்கூடாக வரும்.

இயற்கையான பிறப்பில் பிரயாசத்தை குறித்தான காரணிகள் தரிசனத்தை பிறப்பிற்கும் ஆவிக்குரிய பிரயாசத்திற்கு சமாந்திரமாகும். இயற்கையான பிரயாசம் குழந்தை பிறப்பிற்கான கவனிக்கப்பட்ட முயற்சியின் கடினமான நேரமாகும். இந்த தருணத்தில் பிரயாசத்தை வேதனை எனவும் அழைக்கலாம்.

குழந்தை பிறக்கும்போது, ஆவிக்குரிய தரிசனமானது கடுமையாக மனதில், பௌதீக, ஆவிக்குரிய நோக்கத்துடன் பிறக்கும். இந்த பாடத்தை படிக்கும்போது, தேவன் உங்கள் ஆவியில் எதை பிறப்பிக்க வேண்டும் என்பதை குறித்து கவனம் செலுத்துங்கள்.

இயற்கையான உலகில் வேதனையின்போது (பிரயாசம்), ஒருவர் கொடுக்கும் பிறப்பை இயற்கையான வல்லமைகள் கட்டுப்படுத்தலாம். பௌதீகமாக குழந்தையை பிறப்பதற்கு முன் பிறப்பின் பாதையில் தள்ளுதல் குழந்தைக்கு மரணத்தை கொடுக்கலாம்.

ஆவிக்குரிய உலகத்திலும் இதே காரியம் உண்மையானது. தேவன் உங்கள் வாழ்க்கையை கட்டுப்பாட்டில் எடுக்கட்டும். நீங்கள் தரிசனத்தை உங்கள் சொந்த பலத்தினால் பிறப்பிக்க முயற்சிப்பீர்களாயின் அது தேவனுடைய திட்டத்தை சிதைத்துவிடும்.

உங்களிலுள்ள அனைத்தும் வெளியேற்றுவதற்கு முயற்சிப்பதோடு, ஆவிக்குரிய தரிசனத்தை இயற்கையான முயற்சிகளினால் கொண்டுவரும். ஆனால் சுயமுயற்சியால் நீங்கள் தரிசனத்தை அழிக்கலாம்.

கிறிஸ்து தன்னை அழைத்து செய்யும்படியான காரியங்களை பேதுரு உணர்ந்தபோது, அவன் கிறிஸ்துவை நோக்கி “ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப்போகவேண்டும்” என கதறினான் (லூக்கா 5:8). அவன் இயற்கையான பலன்களையும், இயலுமைகளையும் கொண்டு தரிசனத்தை நிறைவேற்றுவது மிகப்பெரிதான காரியம் என அறிந்திருந்தான்.

பிரயாசத்தில் உள்ள ஓர் தாய் பகிரங்கமாக இருப்பதை தவிர்த்துக்கொள்வாள், அதேபோல் ஆவிக்குரிய பிரயாசத்தில் இருக்கும்போது தேவனுடன் தனியாக இருத்தல் வேண்டியது அவசியமாகும்.

## மாற்றத்திற்கான நேரம்

இயற்கையான பிறப்பின் செயற்பாட்டில் “மாற்றம்” என்பதற்கான காரணத்தை பிரசவிப்பவர் அறிந்திருப்பார். ஒரு குழந்தை பிறப்பதற்கு முன், பிள்ளையை பிறக்க அனுமதிக்கும் கால்வாய திறந்து பிரசவ வேதனைபடும் நேரம் கடினமான காலமாகும்.

ஆவிக்குரிய உலகிலும் பிறப்பைக்குறித்த தரிசனம் சமாந்தரமாகவே உள்ளது. தேவன் ஆவிக்குரிய தரிசனத்தை உங்களில் பிறப்பிக்கின்றபோது அந்த மாற்றும் முறையை நீங்கள் அனுபவிக்க வேண்டி-வரும்.

தேவன் இந்த ஆவிக்குரிய தரிசனத்தை கொடுக்கின்றபோது உங்கள் வாழ்க்கை மாற்றமடைவது அவசியமாகின்றது. அது புதிய அர்ப்பணிப்பு மற்றும் ஒப்புக்கொடுத்தல் என அழைக்கப்படுகின்றது.

நீங்கள் உங்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அழுத்தத்தை உணரலாம். உங்களிலுள்ள யாவும் ஆவிக்குரிய பிறப்பின்போது வேதனையடையும் வேளையில் வேதனையிலிருந்து நிவாரணம் பெற தேவனிடம் கதறலாம்.

அவ்வேளையிலேயே அநேகர் தரிசனத்தைப் பெற தவறுகின்றனர். எனவே அவர் தனது தரிசனத்தை அவர்களிடம் பிறப்பிப்பதற்காக மீண்டும் மீண்டும் மாற்றத்தை கொண்டு வருகின்றார்.

இந்த மாற்றம் கடினமாக இருக்கின்றமையால் அநேகர் பின்மாற்றமடைகின்றனர். இந்த கடினமான வேளையை அழுத்தம் காரணமாக திரும்பப் பெற அவர்கள் விரும்புவதில்லை.

அவர்களின் சிந்தனை முறைகள் மற்றும் வாழ்க்கை முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ள அவர்கள் தயாராக வேண்டும். அவர்களால் சுயமுயற்சியையும் பாரம்பரியத்தையும் கைவிட முடிவதில்லை. தங்களுடைய குறிக்கோள்கள் மற்றும் ஆசைகளை ஒதுக்கி வைத்துவிட்டு தேவனுடைய திட்டத்திற்கு இசைய முடியவில்லை. இதுவே இஸ்ரவேலருக்குள்ளும் இடம் பெற்றது.

> **கர்த்தாவே, பேறுகாலம் சமீபித்திருக்கையில் வேதனைப்பட்டு, தன் அம்பாயத்தில் கூப்பிடுகிற கர்ப்பவதியைப்போல, உமக்கு முன்பாக இருக்கிறோம்.**
>
> **நாங்கள் கர்ப்பமாயிருந்து வேதனைப்பட்டு, காற்றைப் பெற்றவர்களைப்போல் இருக்கிறோம். தேசத்தில் ஒரு இரட்சிப்பையும் செய்யமாட்டாதிருக்கிறோம். பூச்சக்கரத்துக்குடிகள் விழுகிறதுமில்லை. (ஏசாயா 26:17-18)**

மிக கடினமான உழைப்பு துன்பத்தை தருகின்றபோதும், பிறப்பு மகிழ்ச்சியைக் கொண்டு வருகின்றது.

> **ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள். பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள். (யோவான் 16:21)**

ஏசாயா 53:11 ல் இயேசுகிறிஸ்துவின் பாடுகளின் பலனைக்குறித்து தேவன் திருப்தியடைவதின் சாட்சியத்தை நாம் வாசிக்கின்றோம். மனிதன் பாவத்தில் வீழ்ந்தபோது வாக்குப்பண்ணப்பட்ட தரிசனம் கல்வாரியில் நிறைவேறியது.. (ஆதியாகமம் 3:15) வருத்தத்தின் மூலமாகவே பாவத்திலிருந்து மீட்கப்படும் தரிசனம் சாத்தியமானது.

வேதனையானது கடினமான உழைப்பின் அனுபவமாகும், எனினும் வேதனையின் வழியாக மாத்திரமே தரிசனம் பிறக்கின்றது:

> **சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது. பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் இருப்பேனோ என்று கர்த்தர் சொல்லுகிறார். பிரசவிக்கப்பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ என்று உன் தேவன் சொல்லுகிறார். (ஏசாயா 66:8-9)**

**பிறப்பு:**

ஆவிக்குரிய தரிசனத்தின் வளர்ச்சி இறுதியில் ஒரு மனித கருவை எதிர்நோக்கியதாக இருக்கின்றது. அந்த இறுதி பிறப்பாகும். பௌதீக பிறப்பின் செயற்பாட்டிலும், ஆவிக்குரிய தரிசன பிறப்பிலும் ஆகிய இரண்டிலும் குறைபிரசவ பிறப்பும், பிறப்பின் தாமதமும் மரணத்தை கொண்டுவரலாம்,

பிறப்பின் பின்பு பௌதீக உலகத்திலே குழந்தையானது வளரவும், அபிவிருத்தியடையவும் தொடங்கிவிடும். இந்த ஆவிக்குரிய தரிசனத்தின் பிறப்பின்பின் இது வளரவும், அபிவிருத்தியடையவும் தொடங்கும். அது புதிய அமைப்புக்களையும் மாதிரிகளை கொண்டிருக்கும், ஆனால் அவையெல்லாம் ஆவிக்குரிய வாழ்வின் அடிப்படை அணுவாகிய தரிசனத்திலிருந்தே அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

## ஆபிரகாமின் தரிசனம்

இஸ்மவேலை பெற்று, ஆபிரகாம் தனது சுய முயற்சியின் மூலமாக தேவன் கொடுத்த தரிசனத்தை நிறைவேற்ற முற்பட்டார். தேவன் அவரை பெரிய ஜாதியாக்குவார் என்பதையும் அவர் அறிந்திருந்த போதும், அவரது மனைவி சாராள் மூலமாக ஒரு வாரிசு வராது என் எண்ணினார்.

அதனால் ஏதோ ஒரு காரியத்தை செய்தபடியால் இஸ்மவேல் பிறந்தான். ஆனால் இஸ்மவேலின் பின்னால் இருந்தது தேவனது வல்லமையா? அல்லது அவனது வல்லமையா? தரிசனம் நிறைவேறியது இஸ்மவேல் என்ற மனிதனாலா? தேவனாலா?

நீங்கள் உங்கள் சொந்த முயற்சிகளினால் இஸ்மவேலைப்போன்ற காட்சியை கொண்டுவர முடியும். இஸ்மவேல் உங்கள் சொந்த முயற்சி மற்றும் சொந்த மாதிரிகள் அல்லது இயற்கையான திறமைகள் மூலம் தேவனுடைய சித்தத்தை செய்ய முயற்சிப்பதை காண்பிக்கின்றது. ஆனால் பரலோக தரிசனத்தின்படி தேவனால் பிறப்பதை ஈசாக்கு பிரதிநிதித்துவப்படுத்துகின்றான்.

ஆவிக்குரிய தரிசனத்தின் மூலம் யார்?

“நாங்கள் என்ன செய்ய முடியும், தேவனுடைய கிரியைகளை எம்மால் செய்ய முடியுமா?” என்று கேட்டால் “இது தேவனுடைய வேலை” எனவும் இதுவே மூலாதாரம் எனவும் இயேசு பதிலளிப்பார். (யோவான் 6:28-29)

பரலோகத்தின் தரிசனத்திற்கு மூல ஆதாரமாக ஆபிரகாம் இருப்பதை தேவன் விரும்பவில்லை, மனிதனால் அல்லது ஓர் அமைப்பினால் அவரது தரிசனங்கள் நாம் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் விரும்புகிறார்.

ஆவிக்குரிய தரிசனத்திற்கு தேவனே ஆதாரமாக இருக்கின்றார். இத்தரிசனத்தையும் தேவனது திட்டத்தையும் நீங்கள் இப்பாடத்தினால் பெற்றுக்கொள்வீர்கள். இது மனிதனின், நிறுவனத்தின், ஒரு அமைப்பினது திட்டமல்ல.

இஸ்மவேல் பிறந்து பதின் மூன்று வருடங்களுக்கு பின்னதாக தேவன் ஆபிரகாமுடன் பேசியதைக்

குறித்ததான பதிவுகள் வேதாகமத்தில் கிடையாது. மனுஷீகத்தால் ஒரு குழந்தையை பெறுவது சாத்தியமற்ற காரியம் என்ற நிலை வரும்வரை இருந்த தேவன் மீண்டும் தரிசனத்தை அவனுக்குள் வைத்தார். சுய முயற்சிக்கு அவர் மரிக்க வேண்டியதாயிருந்தது.

தரிசனம் பிறந்த பின்னர், தேவனுடைய நேரத்தில் அதிசயமாக ஈசாக்கு பிறந்தான். தேவனது திட்டப்படி பிறந்தவுடன் (ஈசாக்கு), இஸ்மவேல் (சுயமுயற்சியில் பிறந்தவன்) துரத்தப்பட்டான்.

இது உங்களது ஈசாக்கு (தேவனது திட்டம்) உங்கள் ஆவியில் பிறக்கின்றது. இது திட்டமிட்டபடி பிறக்கின்றபோது இஸ்மவேல் துரத்தப்படுவான்.

சுய முயற்சியாகிய உங்கள் திட்டங்கள், லட்சியங்கள், பாரம்பரியங்கள், அமைப்பின் நிகழ்ச்சி நிரல்கள் என்பனவற்றை துரத்துவிடுவது வேதனையான அனுபவம்தான்.

ஆனால் ஆபிரகாம் செய்தமைக்கு தேவன் உங்களுக்கு கூறுவதாவது, “இஸ்மவேலுக்காக வேதனைப்படாதே (சுய முயற்சிக்காக), ஈசாக்கே உனது வித்து என அழைக்கப்படுவான்” ஈசாக்கே தேவனது தரிசனத்தின் மூலாதாரமாக இருந்தான்.

## நீங்கள் ஆயத்தமா?

பிறப்பிற்கு மாற்றம் தேவை. பௌதீக உலகில் குழந்தை கருவரையில் பாதுகாக்கப்பட்டு வெளியேற வேண்டும்.

நீங்கள் மறுபடியும் பிறந்தபோது பழைய பாவவாழ்க்கையை விட்டு வெளியேறினீர்கள். இயேசு உங்களது எண்ணங்களையும் வாழ்வின் நடவடிக்கைகளையும் மாற்றினார்.

ஆவிக்குரிய தரிசனமும் மாற்றத்தை பிறக்கச் செய்கின்றது. அது அறிந்தவற்றிலிருந்து அறியப்படா-தவற்றிற்கு செல்ல உற்சாகப்படுத்துகிறது.

நீங்கள் அந்த ஆவிக்குரிய தரிசனத்தை பெற ஆயத்தமா? நீங்கள் உங்கள் கிறிஸ்தவ வாழ்வில் புதிய காரியத்தை பிறப்பிக்கும்பொருட்டு ஆவிக்குரிய வருத்தத்தின் பலனை அனுபவிக்க ஆயத்தமாயிருக் கின்றீர்களா? அப்படி நீங்கள் ஆயத்தமாக இல்லாதபட்சத்தில், கற்றுக் கொள்வதை இத்துடன் நிறுத்தி விட்டு, தரிசனத்தை பகிர்ந்து கொள்ள சிறந்த முறையை கையாளுங்கள் இல்லையென்றால் மீண்டும் உங்கள் வாழ்க்கை இருந்தவண்ணமே இருக்கும்.

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. ஆவிக்குரிய தரிசனத்தின் வரைவிலக்கணத்தை எழுதுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. பட்டியல் ஒன்றிலுள்ள பெயர்களை கவனிக்கவும், இரண்டாவது பட்டியலையும் வாசிக்கவும். இரண்டாம் பட்டியலிலுள்ள சரியான இலக்கத்தை சரியான நபருக்கு முன்னாலுள்ள கோட்டிட்ட இடத்தில் எழுதுவும். முதலாவது உதாரணமாக தரப்படுகின்றது.

| முதலாவது பட்டியல் | இரண்டாவது பட்டியல் |
|---|---|
| ………**2**…….. பவுல் | 1. இஸ்மவேல் மூலம் தரிசனம் நிறைவேற முயற்சித்தார். |
| ……………....யேயாசி | 2. “நான் பரமதரிசனத்திற்கு கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை.” |
| ……………....ஆபிரகாம் | 3. “நாம் என்ன செய்ய வேண்டும்?” |
| ……………....தேவன் | 4. “பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் இருப்பேனோ?” |
| ……………....இயேசு | 5. “என்னை விட்டு அகற்றுபோம் நான் பாவியான மனுஷன்.” |
| ……………....பேதுரு | 6. அவரது வேதனையில் திருப்தியடைந்ததாக தேவன் சாட்சியமளித்தார். |

4. இரண்டாம் பட்டியலை வாசிக்கவும். முதலாம் பட்டியலுக்குரிய வரைவிலக்கணம் கூறும் வசனத்தின் இலக்கத்தை முதலாம் பட்டியலுக்கு முன்னுள்ள கோட்டில் எழுதவும்.

| முதலாவது பட்டியல் | இரண்டாவது பட்டியல் |
|---|---|
| ……………....கருத்தரித்தல். | 1. ஆவிக்குரிய தரிசனம் உங்களில் வளரும் நேரம். |
| ……………....வளர்ச்சி | 2. பிறப்பிற்கு முன்னானது. தரிசனத்தை தேவன் கொண்டு வருவதற்கு முன்னர், இயற்கையாகவே நீங்கள் சுய முயற்சியை நிறுத்த வேண்டிய கடினமான நேரம். |
| ……………....கர்ப்பவேதனை. | 3. உங்கள் ஆவியில் தேவனால் தரிசனம் நாட்டப்படுகின்ற நேரம். |
| ……………....மாற்றம் | 4. ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஆவிக்குரிய வேதனை பிறக்கும் ஓர் காலம். |

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. பின்வரும் வேதவாக்கியங்களை வாசிப்பதன் மூலம் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்:

   யோவான் 16:21: இது துன்பத்தை கொண்டுவந்தாலும், பிறப்பின் பின் அது மகிழ்ச்சியை தருகின்றது.
   1 தெசலோனிக்கேயர் 2:9: பௌதீக உலகிலும் ஆவிக்குரிய உலகிலும் தொழிலாளர் உண்டு.
   கலாத்தியர் 4:19: உன்னில் உருவாகினாலும் கிறிஸ்துவினால் பலன் கொடுக்கின்றது.
   ரோமர் 8:22-25: இது நம்பிக்கையை கொண்டு வரும்.
   ஏசாயா 66:7-9: ஆவிக்குரிய வேதனையின் பலன் பிறப்பாகும் இதுவே தேவனுடைய வாஞ்சை. (ஆவிக்குரிய மீள் உற்பத்தி)

2. இக்கூற்றுக்களை பற்றி யோசிக்கவும்:

   "ஒரு தரிசனம் இல்லாத பணி லட்சியமற்ற தரிசனம்.
   ஒரு தரிசனமற்ற பணி வேலைப்பளுவாகும்.
   ஒரு தரிசனத்துடன் கூடிய பணி அருட்பணியை உருவாக்கும்."

3. துன்மார்க்கமான மனிதன் தீய திட்டங்களை பெற்றெடுக்கின்றான்:

   **இதோ, அவன் அக்கிரமத்தைப்பெறக் கர்ப்பவேதனைப்படுகிறான். தீவினையைக் கர்ப்பந்தரித்து, பொய்யைப் பெறுகிறான். (சங்கீதம் 7:14)**

4. பௌதீக உலகில் "மலடி" என்பது உங்களால் பிள்ளைகளை பெற்றெடுக்க முடியவில்லை என்ற அர்த்தத்தை தரும். நீங்கள் ஆவிக்குரிய மலட்டுத்தன்மையுடன் காணப்படுகின்றீர்களா?

   வேதாகமத்தில் பல ஆண்டுகாலமாக பிள்ளைகளற்றிருந்த பெண்கள் தேவனுடைய தொடுதலின் பின்னர் விஷேசித்த குழந்தைகளை பெற்றெடுத்தனர்.

   - சாராள் ஈசாக்கை பெற்றாள்.
   - ராகேல் யோசேப்பை பெற்றாள்.
   - மனோவா சிம்சோனை பெற்றான்.
   - அன்னாள் சாமுவேலை பெற்றாள்.
   - ரூத் ஓபேத்தை பெற்றாள்.
   - எலிசபெத் யோவானை பெற்றாள்.

## அதிகாரம் இரண்டு

# தரிசனம்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ "இயற்கைக்கு இணையான ஆவிக்குரிய சத்தியத்தின்" அர்த்தத்தை விபரிக்கவும்,
- ☐ இயற்கையான அறுவடையின் உதாரணத்தை உங்கள் ஆவியில் பிறக்க வேண்டும் என தேவன் விரும்புகின்ற ஆவிக்குரிய அறுவடையோடு ஒப்பிடவும்,
- ☐ தரிசனத்தை பெற வழிவகுக்கும் படிமுறைகளை விளக்கவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

> **அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிற தில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். (யோவான் 4:35)**

## அறிமுகம்

கடைசி அதிகாரம் ஆவிக்குரிய தரிசனத்தின் வளர்ச்சியின் செயல்முறையை விபரித்தது. இவ்வதிகாரம் உங்கள் ஆவியில் பிறக்கவிருக்கின்ற இயேசு விரும்புகின்ற தரிசனத்தை பெறுவது எவ்வாறு என்பதை அடையாளம் காணுவீர்கள்.

இத்தரிசனத்தைக் குறித்து அவர், அவரது சீடர்களுக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பதாகவே சவாலிட்டார். தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் தரிசனத்தைக் குறித்ததான கொள்கையையும் அர்த்தத்தையும் புரிந்து கொள்வது அவசியமாகும். இக்கொள்கை இயற்கையோடு சமாந்தரமாக ஆவிக்குரிய சத்தியத்தை ஒப்பிடுவதாக இருக்கின்றது.

இந்த அத்தியாயம் தேவனது தரிசனத்தின் இக்கொள்கையை நீங்கள் அவதானிக்கும்படியாக வரையறுத்துக் கூறுகின்றது.

## இயற்கை மற்றும் ஆவிக்குரிய சத்தியங்கள்

எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமமானது மக்கள், வாக்குத்தத்தங்கள், தீர்க்கதரிச னங்கள் மற்றும் கொள்கைகள் என்பனவற்றில் கவனம் செலுத்துகின்றது.

வேதாகமத்தில் அநேக மனிதர்களைப்பற்றிய பதிவுண்டு, தேவன் அவர்களுடன் எவ்வாறு இடைபட்டார் என்பதையும் அதற்கு அவர்கள் காண்பித்த பிரதிபலன் என்ன என்பதையும் பற்றி அவை கூறுகின்றது. அவ்வண்ணமாகவே வேதாகமத்தில் முக்கிய பகுதிகளில் எதிர்கால நிகழ்வுகள் பற்றிய தீர்க்கதரிசன

வனங்களும், தேவனுடைய மக்களுக்கு அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேவன் தனது வார்த்தைக்கூடாக உங்களுக்கு என்ன கூறுகின்றார் என்பதையும், அதன் முக்கிய கொள்கைகளை புரிந்து கொள்ள வேண்டிய பகுதிகளையும் வேதாகமம் கொண்டிருக்கின்றது. இப் பெரிதான கொள்கைகள் இயற்கையோடு சமாந்தரமாக ஆவிக்குரிய சத்தியத்தை கொண்டுள்ளது. “சமாந்தரம்” என்னும் சொல்லின் அர்த்தம் ஒரு பொருளோடு இணையானதாக இருப்பதாகும். “இயற் கையானது ஆவிக்குரிய சத்தியத்திற்கு இணையானது” என்னும்போது தேவன் ஆவிக்குரிய சத்தியத்-தின் பொருளை விளங்கப்படுத்த இயற்கையான உதாரணங்களை பாவிக்கின்றார் என்பதாகும்.

ஆவிக்குரிய சத்தியத்திற்காக இயேசு உவமைகளை இயற்கையான உதாரணங்களாக பாவித்தார். இயற்கையாக அவர் பாவித்த உவமைகளில் ஒன்றாக ஒரு பெண் சிறிய அளவாக பாவித்த புளித்த மாவைப்பற்றியதாக இருக்கின்றது. புளிப்பானது ரொட்டி முழுவதும் பரவுவதை அவர் தேவனுடைய இராஜ்ஜியம் உலகமெங்கும் பரவி வளர்ச்சியடைவதோடு விளக்கப்பட்டுள்ளது.

இதைப்போன்றே ஆவிக்குரிய சத்தியங்களை விளங்கப்படுத்தும்படியாக அவர் இதுபோன்ற அநேக இயற்கை உதாரணங்களை அவர் பயன்படுத்தியுள்ளார்.

இயற்கை மற்றும் ஆவிக்குரிய இந்த கொள்கைகள் சமாந்தரமாக முதலாம் கொரிந்தியரில் விளங்கப் படுத்தப்பட்டுள்ளது:

> **......ஜென்மசரீரமுமுண்டு, அவிக்குரிய சரீரமுமுண்டு.**
>
> **அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்.**
>
> **ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது. ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. (1 கொரிந்தியர் 15:44-46)**

இது இயற்கைக்கு இணையான ஆவிக்குரிய சத்தியத்திற்கு ஓர் சிறந்த உதாரணமாகும். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட முதலாவது மனிதன் இயற்கை மனிதனாக இருந்தான். அவனது பெயர் ஆதாம். இயேசு கிறிஸ்து கடைசியான ஆதாமை ஆவிக்குரிய மனிதன் என்கின்றார்.

ஆதாம் இயற்கையான உதாரணமாக இருக்கின்றான், தேவனால் ஆவிக்குரிய சத்தியம் இயேசு கிறிஸ்து விற்கூடாக வெளிப்படுகின்றது. இயற்கையான மனிதன் மூலம் பாவமும் மரணமும் வந்தது. ஆவிக்குரிய மனிதனால் இரட்சிப்பும் ஜீவனும் வந்தது.

இயற்கையை நீங்கள் உங்கள் புலன்களினால் அவதானிக்க முடியும். உங்களால் பார்க்கவும், கேட்கவும், தொடவும் முடியும். ஆவிக்குரியவற்றை ஆவிக்குரிய தன்மையினால் மட்டுமே அவதானிக்க முடியும்.

இயற்கை உதாரணங்களை சரீர புலன்களினால் அடையாளங்காண முடியும், ஆனால் ஆவிக்குரி யவற்றை பரிசுத்தாவியானவரின் வெளிப்படுத்தல் மூலமே அடையாளங்காண முடியும்.

இயற்கைக்கு இணையான ஆவிக்குரிய சத்தியங்களின் கொள்கைகளை விளங்கிக் கொள்ள தேவனுடைய வார்த்தையை புரிந்து கொள்வதை நீங்கள் அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

## அறுவடை:

இயற்கைக்கு இணையான ஆவிக்குரிய சத்தியம் உங்கள் ஆவியில் பிறக்க வேண்டும், இதை வாஞ்சித்த

இயேசு தனது சீடர்களுக்கு இதைக்குறித்து சவாலிட்டார்.

இயேசு தம்முடைய சீஷரை நோக்கி:

> **அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். (யோவான் 4:35)**

இயேசு கிறிஸ்து அவர்களுக்கு முன்பிருந்த வயலிலுள்ள இயற்கையான அறுவடையைக் குறித்து பேசாமல், ஆவிக்குரிய அறுவடையைக் குறித்தே பேசினார்.

இயற்கையான அறுவடையை குறித்த தரிசனத்தை தனது சீடர்களுக்கு உதாரணமாக கொடுக்கின்ற போது அவர்களின் வாழ்க்கையை ஆவிக்குரிய பக்கமாக திருப்ப பாவிக்கின்றார்.

## அதன் அர்த்தம் என்ன?

இயற்கையான அறுவடை உதாரணத்தின் ஆவிக்குரிய உலகின் அர்த்தம் என்ன?

யோவான் 4:3-35 வரையும் வாசிக்கவும். அவர் யூதேயா செல்லும் வழியில் சமாரியாவை கடந்து செல்கின்றார். அவருடைய சீடர்கள் உணவை தேடிக் கொண்டிருக்கும்போது அவர் கிணற்றண்டையில் உட்கார்ந்தார். அப்போது சமாரியப் பெண்ணொருத்தி தண்ணீர்மொள்ள கிணற்றண்டை வந்தபோது அவர் அவளுடன் சுவிஷேசத்தை பகிர்ந்து கொண்டார்.

சீஷர்கள் உணவோடு திரும்பி வந்தபோது இயேசு அவர்களிடம் கூறினதாவது:

> **நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு... நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4:32,34)**

வாழ்க்கையின் முக்கிய தேவையாக உணவு இருந்தாலும்கூட, தேவனுடைய சித்தத்தை செய்து முடிப்பதே இயேசுவின் முக்கிய வேலையாக இருந்தது.

இதனாலேயே இவ்வேளையில் அவர் இயற்கையின் அறுவடையைக் குறித்து உரையாடினார். அவர் தன்னுடைய சீடர்களுக்கு விளக்கும்படியாக இதை உபயோகித்தார். தேவனது சித்தத்தை செய்வதும் அவரது வேலையை செய்து முடிப்பதுவுமே வாழ்க்கையில் மிக முக்கியமானதாக இருக்கின்றது.

## தேவனது சித்தமும் அவரது வேலையும்

தேவனது சித்தம் என்ன? அவரது வேலை என்ன? அது அறுவடையின் தரிசனத்தை வெளிப்படுத்து கின்றது.

இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களிடம், கண்களை ஏறெடுத்து இயற்கையான வயலில் தானியம் அறுவடைக்கு ஏற்றதாய் விளைந்திருப்பதை பார்க்கும்படி கூறினார். இயேசு இந்த வயலின் உதாரணத்தை பாவித்து உலகமெங்கிலும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கென அறுவடைக்கு தயாராக இருக்கின்ற திரளான மனுஷரை பற்றி பேசினார்.

இந்த பெரிதான ஆவிக்குரிய அறுவடையின் காரணமாகவே அவர் அந்த சமாரியப் பெண்ணுடனும்

பேசினார். அவன் சந்தோஷத்துடனே சுவிஷேசத்தை ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தாள். இந்த ஒரு பெண்ணை அறுவடை செய்ததின் மூலமாக முழு நகரத்தாரும் இயேசுவை அறிந்தனர்.

> **நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்.**
>
> **அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே, கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள். (யோவான் 4:39,42)**

## இன்றைய தரிசனம்

கண்ணுக்கு புலப்படும் அறுவடை அண்டையில் நின்றபோது சீடர்கள் ஆவிக்குரிய தரிசனத்தின் பிறப்பை அனுபவித்தார்கள்.

அதே தரிசனம் உங்கள் ஆவியில் பிறக்க வேண்டும் என இயேசு விரும்புகின்றார். உலகத்தில் ஆவிக்குரிய வயலின் அறுவடை தரிசனத்தை அவர் உனக்கு தருவதற்கு காரணம் அவரது இராஜ்ஜி யத்திற்கான அறுவடை ஆயத்தமாக இருக்கின்றது. தரிசனத்தின் யதார்த்தத்தை நீங்கள் உணர்ந்து உங்கள் உத்தரவாதத்தை புரிந்து கொண்டு நிறைவேற்றும்போது உங்கள் வாழ்க்கை மீண்டும் அவ் விதமாக இருக்காது.

இயேசு தெளிவாக கூறினார்:

> **நிலமே உலகம்... (மத்தேயு 13:38)**

ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, கடலிலுள்ள தீவுகள்... என்பன தேவ இராஜ்ஜியத்தின் நற்செய்தியை கேட்கவேண்டியதாக இருக்கின்றது, இங்கே திராளனவர்களை அறுவடை செய்ய வேண்டியதாக இருக்கின்றது.

தரிசனம் மாறவில்லை. இயேசு அவரது சீடர்களிடத்தில் பிறப்பித்தது இன்றும் மாறிப்போகவில்லை. தேவனுடைய சித்தம் அதுவாகவே இருக்கின்றது ஏனென்றால் தேவனுடைய கிரியைகள் முடிந்து போகவில்லை.

சொல்லப்படாத ஆயிரக்கணக்கான இடங்களுண்டு. உலகில் அறுவடையின் நிலங்களைக் குறித்த தரிசனமும் உண்டு.

## அறுவடை ஏன்?

இயேசு ஏன் தன்னை பின்பற்றியோருக்கு ஆவிக்குரிய தரிசனத்தை விளக்க அறுவடையின் உதாரணத்தை பாவித்தார்? இன்னும் அநேக இயற்கையான உவமைகள் பயன்படுத்தும்படியாக இருந்தன. இருந்தும் அவர் ஏன் அறுவடையை தேர்ந்தெடுத்தார்?

அவருடைய சீஷர்களுடன் எளிதில் தொடர்புபடுத்தக்கூடிய உதாரணமாக அறுவடையே இருந்தது. தேவனுடைய பிள்ளைகளின் வரலாறு, இஸ்ரவேல், இதற்கு முன்னர் ஆதாமை பார்த்தாலும் நிலத்தை பயன்படுத்தினவர்களே அதிகம். மோசேயின் காலம் வரைக்கும்கூட விவசாயமே அடிப்படை பொருளா- தார வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது.

கிறிஸ்துவின் ஊழியக்காலத்திலும் இஸ்ரவேலரின் பொருளாதார சுழற்சிக்கு விவசாயமே மையமாக இருந்தது. வருடமுழுவதும் அறுவடையே தொடர்ச்சியான செயல்பாடாக இருந்தது. வாற்கோதுமையும், சணலும் சித்திரை வைகாசி மாதங்களில் அறுவடை செய்யப்பட்டது. கோதுமையின் அறுவடை ஆறு மாதங்கள் கழித்து ஆனி- ஆடி மாதங்களில் இடம் பெறும். ஆப்பில்கள், அத்திபழங்கள், பாதாம் மற்றும் முதல் திராட்சை ஆனி மாதத்தில் சேகரிக்கப்படும். ஒலிவவிதை, பேரீச்சை, கோடை அத்திப்பழங்கள் என்பன ஆவணி மற்றும் புரட்டாதி மாதங்களிலும், மாதுளை மற்றும் மொச்சைகொட்டை என்பன ஐப்பசியிலும் அறுவடை செய்யப்படும். வடகலிலேயாவில் குளிர்கால அத்திபழங்கள் கார்த்திகையில் சேர்க்கப்படும்.

அறுவடை பொருளாதாரத்தை மட்டும் மையமாக கொண்டிராமல் இஸ்ரவேலருடைய சமயசடங்காச் சாரத்தின் இதயமாகவும் இருந்தது. அறுவடைத்தொடர்பான மூன்று மாதவிழாக்களையும் தேவன் அவர்கள் மத்தியில் ஏற்படுத்தினார். பஸ்காபண்டிகை வாற்கோதுமை அறுவடை காலத்தில் நடைபெறும். (யாத்திராகமம் 23:16) ஏழுவாரங்களின் பின்னர் கோதுமை அறுவடை காலத்திலேயே பெந்தகொஸ்தே பண்டிகை வரும். (யாத்திராகமம் 34:22) கூடாரப்பண்டிகை ஏழாம் மாதத்தில் பழங்களின் அறுவடை காலத்தில் அனுகரிக்கப்பட்டது. (யாத்திராகமம் 34:22)

கால அட்டவணை, பொருளாதாரம், மத அமைப்பு என்பனவெல்லாம் அறுவடையை சுற்றியிருந்தமை யால் சீடர்களால் எளிதாக இயேசுவின் உதாரணத்தை புரிந்து கொள்ள கூடியதாக இருந்தது.

ஆனாலும் இன்னும் முக்கியமானது என்னவென்றால், விதைப்பது மற்றும் அறுவடை செய்வதைக் குறித்து சில வழிகாட்டுதல்கள் உண்டு, இது இயற்கையான அறுவடையில் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த இயற்கையான விதிகள் ஆவிக்குரிய அறுவடையிலும் பயன்படும். இயேசு கிறிஸ்துவின் சீடர்களால் எளிதாக ஆவிக்குரிய அறுவடையின் கொள்கைகளை பயன்படுத்த முடியும் ஏனென்றால் இயற்கை உலகில் அவைகள் பிரபல்யமாக இருந்தது. இந்த இயற்கை கொள்கைகளை ஆவிக்குரிய அறுவடைக்கும் பயன்படுத்த முடியும். இக்கொள்கைகளை நாம் இப்பாடத்தில் பின்னர் கற்றுக் கொள்வோம்.

மிக முக்கியமாக சீடர்கள் இந்த இயற்கையான அறுவடையின் உதாரணத்தை சீக்கிரத்திலேயே விளங்கிக்கொண்டார்கள். பயிர் முற்றியிருக்கும்போதே உடனடியாகவே அறுவடை செய்ய வேண்டும் இல்லாவிட்டால் பயிர் அழிந்துவிடும். அறுவடையா அழிவா என்பதே முக்கிய விடயம்.

அறுவடை அநேகமாக இருந்தபோதிலும் அறுவடையின்போது தொழிலாளர்கள் சொற்பமாக இருந்தால், பயிர் அழிந்துவிடும். இந்த இயற்கையான பிரச்சனையை ஆவிக்குரியத்திற்கு இணையாக இயேசு கூறினார்.

**அறுப்பு மிகுதி.. வேலையாட்களோ கொஞ்சம்.. (மத்தேயு 9:37)**

## தரிசனத்தை பெறுதல்

இயேசுகிறிஸ்து அறுவடையின் தரிசனத்தைக் குறித்து தனது சீடர்களிடம் பேசியபோது, அவர்கள் தரிசனத்தை பெற்று செயல்படுத்தும்படியான ஐந்து படிகளை குறித்தும் பேசினார்:

**(1) நீங்கள் சொல்லுகிறீர்கள் (2) அறுவடைக்கு இன்னும் நான்கு மாதங்கள் இருக்கின்றதல்லவா? (3) நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். (4) கண்களை ஏறெடுங்கள் (5) வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது. (யோவான் 4:35)**

**முதலாம்படி : 'நீங்கள் சொல்வதில்லையா....?'**

பலவிசுவாசிகள் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் அறுவடையைக் குறித்து பேசிக்கோண்டே

இருக்கின்றார்கள். தொழிலாளர் குழுவினரைப்போல கொட்டகையில் உட்கார்ந்து அறுவடையை சேகரிக்க மாத்திரம் முயற்சி செய்கின்றனர். அவர்கள் கொட்டகைக்கு (ஆலயத்திற்கு) ஒவ்வொரு ஞாயிறு காலை யிலும் செல்கின்றனர், விவசாயத்தின் பெரிதான சிறந்த முறைகளை குறித்து கற்கின்றனர். (ஆவிக்குரிய அறுவடை) தங்களுடைய அறுவடையின் அரிவாளை கூர்மைப்படுத்திவிட்டு வீடுகளுக்குச் செல்கின்றனர்.

அவர்கள் திரும்பவும் இரவில் ஆலயத்திற்கு செல்கின்றனர், விவசாயத்தின் பெரிதான சிறந்த முறை-களை குறித்து கற்கின்றனர். தங்களுடைய அறுவடையின் அரிவாளை கூர்மைப்படுத்திவிட்டு மீண்டும் வீடுகளுக்குச் செல்கின்றனர். அவர்கள் திரும்பவும் வாரமத்திய வேதபடிப்பிற்கு செல்கின்றனர், விவசா யத்தின் பெரிதான சிறந்த முறைகளை குறித்து கற்கின்றனர். தங்களுடைய அறுவடையின் அரிவாளை கூர்மைப்படுத்திவிட்டு வீடுகளுக்குச் செல்கின்றனர். ஒவ்வொரு வாரமும் இதையே மீண்டும் மீண்டும் செய்கின்றனர், வாரம் மாதங்களாகின்றது, மாதங்கள் வருடங்களாகின்றது, ஆனாலும் ஒருவரும் அறுவடையை சேர்க்க வயலண்டைக்கு செல்வதில்லை.

“நீங்கள் சொல்வதில்லையா?” என இயேசு கூறியபோது, அவர் ஆவிக்குரிய அறுவடை போதுமானதாக இல்லை என்பதை அர்த்தப்படுத்தியே பேசினார். நீங்கள் உண்மையான அறுவடையில் ஈடுபட வேண்டும். யாவரும் தமது வேலைகளைவிட்டுவிட்டு வரவேண்டும் பொருளாதார உதவியை சபையில் எதிர்பார்க்க வேண்டும், மற்ற தேசங்களுக்கு சென்று சுவிஷேசத்தை பிரசங்கிக்க வேண்டும் என்பதும் இதன் அர்த்த மல்ல, ஆனாலும் சகல விசுவாசிகளும் அறுவடையில் பங்கு கொள்ள வேண்டும். சிலவேளைகளில் அவர்களது நிலம் அவர்களது வீட்டுக்குமுன் அல்லது தேவாலயத்திற்கு முன் இருக்கலாம். அவர்களது பாடசாலையில் வேலைத்தளங்களில், அவர்களது சமுதாயத்தில் அல்லது கிராமத்தில் இருக்கலாம். சிலருக்கு வெளிநாடுகளில் இருக்கலாம். ஒவ்வொரு விசுவாசியும் இதைக் குறித்து பேசிக்கொண்டிரா-மல் அறுவடையில் பங்கு கொள்ள் வேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

## இரண்டாம் படி: ‘இன்னும் நான்கு மாதங்கள்....’

அறுவடை நேரத்தின் தரிசனம் உன்னால் தாமதமடையக் கூடாது. எதிர்காலத்தில் ஈடுபடலாம் எனவும் காத்திருக்க உன்னால் கூடாது. பாவத்தினால் ஆத்துமாக்கள் மரிக்கின்றன. நாளை என்பது அநே-கருக்கு தாமதமாகலாம்.

> **பயிர் முதிர்ந்தது, அரிவாளை நீட்டி அறுங்கள், வந்து இறங்குங்கள். ஆலை நிரம்பியி-ருக்கிறது, ஆலையின் தொட்டிகள் வழிந்தோடுகிறது. அவர்களுடைய பாதகம்பெரியது.**
>
> **நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே ஜனங்கள் திரள்திரளாய் இருக்கிறார்கள். நியாயத்-தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது. (யோவேல் 3:13-14)**

## மூன்றாம்படி: ‘நான் உங்களுக்குச் சொல்கிறேன்...’

தேவனது வழிகள் மனிதருடைய வழிகளையும் பார்க்க வேறுபடுகின்றது:

> **என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல வென்று கர்த்தர் சொல்லுகிறார்.**
>
> **பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. (ஏசாயா 55:8-9)**

மனிதர்கள் ஆவிக்குரிய அறுவடையைபற்றி பேசுகின்றார்கள். ஆனாலும் தாமதிக்கின்றார்கள். மனி-தர்கள் சொல்வதையும் பார்க்க தேவன் சொல்வது வித்தியாசமானது. அவர் சொல்கிறார்.....

**நான்காம் படி: 'உங்கள் கண்களை ஏறெடுத்து....'**

சீடர்களின் கண்கள் திசைதிருப்பப்பட்டிருந்தது. அவர்களது அவதானம் ஆவிக்குரிய அறுவடையின் மேலிருக்கவில்லை.

இந்த ஆவிக்குரிய தரிசனத்தை பெற நீங்கள் தனிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நீங்கள் உங்களது ஆவிக்குரிய கண்களை இவ்வுலக கவனச்சிதறல்களிலிருந்து அகற்றி ஏறெடுக்க வேண்டும். உங்களது தனிப்பட்ட பிரச்சனைகள், அதைரியங்கள், உலக கவலைகள் என்பவற்றிருந்து கண்களை உயர்த்தி ஏறெடுக்க வேண்டும்.

உங்கள் வாழ்வில் சூழ்நிலைகளிலிருந்தும் உங்கள் கண்களை உயர்த்த வேண்டும்...

**படி ஐந்து: 'அறுவடையை நோக்கிபார்....'**

கவனச்சிதறல்களிலிருந்து கண்களை திருப்பி அறுவடை நிலத்தை பார்ப்பது மாத்திரம்போதாது. உண்மையாகவே நீங்கள் அறுவடையை நோக்கி பார்க்க வேண்டும். தேவனுடைய கண்கள் மூலமாக உலகத்தை பார்க்க வேண்டும்.

அநேகருக்கு ஆவிக்குரிய தரிசனம் இல்லாபடியால் அவர்கள் உண்மையாகவே பார்ப்பது கிடையாது. அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட உத்தரவாதத்தையும் உணருவதில்லை. எமது உலகத்தின் அறுவடைக்கான நிலைமைகளையும் அவதானிப்பதில்லை.

## தரிசனத்தை பெற்றுக்கொள்ள....

- அதை மட்டும் பேசிக்கொண்டே இருக்க வேண்டாம்.

- தாமதிக்க வேண்டாம்.

- “யாரை நான் அனுப்புவேன் எனக்காக யார் போவார்கள்?” என அவரது சவால் நிறைந்த தேவ-னது கதறலை கேளுங்கள். (ஏசாயா 6:8)

- உலகத்தின் கவனச் சிதறல்களிலிருந்து விலகி உங்கள் கண்களை ஏறெடுத்து அறுவடையை பாருங்கள்.

- அறுவடை பூமியை தேவன் பார்ப்பதுபோல அவரது கண்களால் பாருங்கள்.

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக:

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. “இயற்கைக்கு சமாந்தரமான ஆவிக்குரிய சத்தியம்” என்பதன் அர்த்தம் என்ன?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இயற்கை உதாரணத்திற்கூடாக ஆவிக்குரிய தரிசனத்தை தனது சீடர்களுக்கு விளக்கும்படியாக இயேசு ------------------------------------ என்ற உதாரணத்தை பாவித்தார்.

4. அறுவடையின் உதாரணமானது------------------------------------

5. தன்னை பின்பற்றியோருக்கு ஆவிக்குரிய தரிசனத்தை கொடுக்கும்படி இயேசு இயற்கை உதாரணத்தை தேர்ந்தெடுத்ததற்கான மூன்று காரணங்களையும் பட்டியலிடுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. ஆவிக்குரிய தரிசனத்தை பெறுவதற்கு யோவான் 4:35ல் தரப்பட்டுள்ள ஐந்து படிகளையும் பட்டியலிடுக.

------------------------------------------------------------------------- -------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------- -------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இந்த அத்தியாயம் அறுவடையின் தரிசனத்தின் தனிப்பட்ட ஈடுபாட்டை வலியுறுத்தும்.

லூக்கா 10:25-35 வரையிலுமுள்ள "நல்ல சமாரியனின்" உவமையை வாசிக்கவும். இந்த உவமை மனிதனுடைய தேவையை சந்திப்பதிலுள்ள எமது அணுகுமுறையை விளக்குகின்றது. ஆவிக்குரிய அறுவடைக்கான தரிசனத்தில் விசுவாசிகளின் பல்வேறுபட்ட மனப்பாங்கை விளக்கும் உதாரணமே இது.

திருடனினதும், ஆசாரியனினதும், லேவியனினதும், சத்திரக்காரனினதும், சமாரியனினதும் மனப் பாங்கை கவனிக்கவும். இயேசு கூறின உவமைக்கூடாக கேள்விகேட்ட நியாயாதிபதியின் மனப்பாங்கையும் அவதானிக்கவும்,

| **குணாதிசயம்** | **மனப்பாங்கு** |
|---|---|
| நியாயாதிபதி | விவாதத்திற்காக ஒரு கேள்வியை கண்டு பிடித்தார். |
| திருடன் | ஒரு நபரிடமுள்ளதை சுரண்ட பார்த்தான். |
| ஆசாரியனும் லேவியனும் | பிரச்சனையை தவிர்க்க மற்றும் புறக்கணிக்க பார்த்தனர். |
| சத்திரக்காரன் | ஊதியத்திற்காக பணியாற்றினான். வாடிக்கையாளரை பார்த்தால் "எனக்கு என்ன கிடைக்கும்?" என பார்த்தான். |
| சமாரியன் | ஒருவன் சாகக் கிடக்கின்றான், அவனது தேவையை சந்திக்க தனிப்பட்ட ஈடுபாட்டை காண்பித்தான். |

### அதிகாரம் மூன்று

# அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக்கின்றது

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ தேவனுடைய கண்கள் மூலம் உலகத்தை பார்த்தல் என்பதின் அர்த்தத்தை விபரிக்கவும்,
- ☐ உலகத்தின் ஆவிக்குரிய அறுவடையின் தற்போதைய நிலையை புரிந்து கொள்ளவும்,
- ☐ உலகம் முழுவதற்குமாக தேவனால் எழுப்பப்பட்ட சர்வதேச அறுவடையாளர்களுடன் தனிப்பட்ட அர்ப்பணிப்பை செய்யவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

**அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக்கிறது (சங்கீதம் 66:7)**

## அறிமுகம்

கடந்த அத்தியாயத்தில் உங்கள் ஆவிக்குரிய கண்களை ஏறெடுத்து உலக அறுவடை நிலங்களை பார்க்கும் முக்கியத்துவத்தைப்பற்றி கற்றீர்கள்.

இயேசு கிறிஸ்துவுக்கு இருந்த அதே தரிசனம் சீடர்களிடத்தில் இருக்கவில்லை. அதனாலேயே அவர் கண்களை ஏறெடுத்து மிகப்பெரிய தேவை பார்க்கும்படி வலியுறுத்தினார்.

தேவன் பார்ப்பதைப்போன்று நீங்கள் உலகை பார்க்க வேண்டும். நீங்கள் ஆவிக்குரிய தரிசனத்தில் வளர இது அவசியம்.

உலகத்தின் அறுவடை நிலங்களைக் குறித்து இந்த அத்தியாயம் கவனம் செலுத்தும். வேதாகமம் "அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக்கிறது" எனக் கூறுகின்றது. உலகத்தின் அறுவடை நிலங்களைக் குறித்து தேவன் எவ்விதமாக பார்க்கின்றார்?

## துருபிடித்த அரிவாளும், காலியான நிலங்களும்

தேவனுடைய பார்வையில் உலகமே அறுவடைக்கான நிலம்:

**உலகமே நிலம்... (மத்தேயு 13:38)**

உலக மக்களின் கதறல் தேவனுடைய காதுகளுக்கு வருகின்றது:

**அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை. (எரேமியா 8:20)**

உலகத்தின் ஆவிக்குரிய அறுவடை நிலங்கள் இயற்றை அறுவடை நிலங்களுக்கு ஒத்திருக்கின்றன என யோவேல் தீர்க்கதரிசி புலம்புகின்றார்:

> **பயிரிடுங் குடிகளே, வெட்கப்படுங்கள். கோதுமையும் வாற்கோதுமையும் இல்லாமற் போயிற்று. திராட்சரசத்தோட்டக்காரரே, அலறுங்கள். வயல்வெளியின் அறுப்பு அழிந்து போயிற்று. (யோவேல் 1:11)**

தேவனுடைய பார்வையில் உலகநாடுகளை காணும்போது, அவர் அறுவடையாளர்களின் பற்றாக் குறையினால் பயிர்கள் நாசமடைகின்றது என்று காண்கின்றார். இயேசு கிறிஸ்து விதைபவர்கள் குறைவாக இருக்கின்றார்கள் என ஒருபோதும் கூறவில்லை. அவர் ஆவிக்குரிய அறுவடையை சேர்ப்ப-தற்கு தொழிலாளர்கள் குறைவு என்றே கூறினார்.

> **அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் (மத்தேயு 9:37)**

தற்போது வட அமெரிக்காவில் ஜனத்தொகையில் 94 வீதமானவர்கள் உலக அமைச்சுகளிலும் 6 வீதமானோர் ஊழியங்களிலும் ஈடுபடுகின்றனர். இதன் அர்த்தம் என்னவென்றால் இந்த 6 வீதமானோர், 94 வீதமானவர்களை ஆதாயப்படுத்த வேண்டும், உலகில் சகல ஜனத்தொகையின் நிலமையும் இதுவே.

கலாச்சார ரீதியாக 3 பில்லியன் மக்களில், 16,000 தனித்துவமான மக்கள் குழுக்களுண்டு, இவர்கள் யாவருக்கும் இன்னும் நற்செய்தி சென்றடையவில்லை. 2,000 அதிகமான மொழிகளிலே வேதாகமம் இன்னும் மொழிபெயர்க்கப்படவுமில்லை.

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு 10.000 கிராமங்களிலும் 9,950 கிராமங்களில் கிறிஸ்தவ சாட்சிகாரர்கள் இல்லை. ஜப்பானில் உள்ளவர்களில் ஒரு சதவீதத்தினரே கிறிஸ்தவர்கள்.

லத்தீன் அமெரிக்காவில், காட்டின் தாழ்நிலங்களில் குறைந்தது ஐந்து மில்லியன் மக்களை இன்றும் நற்செய்தி சென்றடையவில்லை. ஏறத்தாழ 750 மில்லியன் முஸ்லிம்கள் உள்ள இடத்தில் 500 அருட்பணியாளர்களே, அருட்பணியாற்றுகின்றனர்.

உதாரணமாக ஆபிரிக்கா, ஆசியா, தென் அமெரிக்கா, மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் தேவைகளுண்டு.

இவ்விதமாகமே தேவன் உலகத்தின் தேசங்களைக் குறித்து பார்க்கின்றார்.

## இடைவெளி

வேதாகமம் கூறுகின்றது:

> **தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. (1தீமோத்தேயு 2:5)**

ஏற்றுக் கொள்ள முடியாத இருவரிடையே உள்ள இடைவெளியை நீக்க மத்தியஸ்தராக ஒருவர் தேவை.

தேவன் உலகத்தை பார்க்கும்போது அவர் திரளான ஜனங்கள் ஆவிக்குரிய இடைவெளியில் நிற்பதையே பார்க்கிறார். இடைவெளிக்கான காரணம் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள பாவமாகும்.

பாவமுள்ள மனிதனுக்கும் நீதிபரரான தேவனுக்கும் இடையேயுள்ள மத்தியஸ்தராக இயேசுகிறிஸ்துவே இருக்கின்றார். பிற மத்தியஸ்தர்களை ஏற்றுக்கொள்ள முடியாது. மனிதனை பாவத்திலிருந்து மீட்டு நீதிபரராகிய தேவன் ஏற்றுக்கொள்ளும் நிலையை இயேசுவே சாத்தியமாக்கினார்.

தம்மையும் தேவனையும் ஒன்றிணைக்கும் மத்தியஸ்தா் பற்றிய செய்திக்காக இன்னும் திரளான மக்கள் காத்திருக்கின்றார்கள். இயேசு கிறிஸ்து தம்மை பின்பற்றியோருக்கு இடைவெளியில் பிரவேசிக்கும் மாபெரும் உத்தரவாதத்தை கொடுத்துள்ளார். அவர் எருசலேமிற்கும், யூதேயாவிற்கும், சமாரியாவிற்கும் பூமியின் கடைசிபரியந்தமும் செல்லும்படி கூறினார்.

அவர்கள், தாங்கள் இருக்கின்ற எருசலேமிலேயே நற்செய்தி பணியை ஆரம்பிக்க வேண்டியதாக இருந்தது. யூதேயாவிற்கும் சமாரியாவிற்கும் பல்லிண கலாச்சார சுவிஷேசம் தேவைப்படும். சமாரியா எருசலேமைப்பாக்கிலும் இறையியலிலும், பண்பாட்டிலும் வேறுபட்ட பிரதேசம். தூரமான பிரதேசங்கள் கூட பெரிதான சவால் நிறைந்தவைதான். ஆனாலும் ஒவ்வொரு பகுதியிலும் இடைவெளிகள் உண்டு.

முதலாவது கிறிஸ்துவின் சீடர்கள்கூட யூதருக்கும் புறஜாதியாருக்கும் இடையேயிருந்த கலாச்சார இறையியல் கோட்பாடுகளின் வித்தியாசம் காரணமாக தயங்கினார்கள். ஆனால் உபத்திரவம் ஏற்பட்ட-போது அவர்கள் எருசலேமிற்கு வெளியெ சென்று நற்செய்தி அறிவித்தார்கள். (அப்போஸ்தலர் 8:4)

நீங்களும் பெரிதான உத்தரவாதத்தை நிறைவேற்றி அறுவடை செய்ய வேண்டுமானால், இறையியல் கலாச்சார ஸ்தாபன ரீதியான பாதைகளிலிருந்து புறப்பாக வேண்டும். உங்களது புவியில் சார்பான இடத்தைகூட விட வேண்டியதாக இருக்கும். நீங்கள் இடைவெளிக்குள் சென்று, நற்செய்தியை பகிர்ந்து கொண்டு தேவனுக்கும் மனிதனுக்குமிடையிலான மத்தியஸ்தராகுங்கள்

## மற்றொரு இடைவெளி

மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே இருக்கின்ற பாவம் இன்னுமொரு கூடுதலான ஆவிக்குரிய இடை-வெளியாக இருக்கின்றது. இந்த இடைவெளியைக் குறித்தே இயேசு நற்செய்தியை அறிவித்து உலகை வெற்றிக்கொள்ளும் சவாலை முன்வைத்தார், எனினும் அவரது மக்கள் இச்சவாலை நிறைவேற்றாமல் தோல்வியடைந்து இருக்கின்றனர்.

நீங்கள் ஆவிக்குரிய அறுவடையின் நிலத்தைக் குறித்த தரிசனத்தை முழுமையாக பெறாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கான உங்களது பங்கை உங்களால் புரிந்து கொள்ள முடியாது. அதுவே கிறிஸ்தவ வாழ்வின் நோக்கத்தையும் வழிகாட்டலையும் தரும். ஆவிக்குரிய அறுவடையின் தரிசனம் உங்கள் வாழ்வின் மையமாக இருக்க வேண்டும். இதில் பலர் சிறிதளவே அக்கறை கொள்கின்றனர்.

நாம் விரும்புகின்ற விடயங்களை பேச முனைகின்றோம். நாம் எனது மனைவி அல்லது கணவருடன் விளையாட்டு, பொழுதுபோக்கும் அம்சங்களைக் குறித்து பேசுவோம். அரசியல், பொருளாதாரம், வியா-பாரத்தைக் குறித்தும் அவதானம் செலுத்தி பேசுவோம். ஆனால் இழந்துபோன ஆத்துமாக்களை பற்றி பேசுகின்றோமா? ஒவ்வொரு நாளும் திரளானவர்கள் இடைவெளியில் நின்று கொண்டிருப்பதைக் குறித்-தும் அறுவடை அழிந்துபோவதைக் குறித்தும் அவதானிக்கிறோமா?

பவுல், நாம் சாப்பிடுவது, குடிப்பது போன்ற வழிமையான நடவடிக்கைகளை பயன்படுத்தி மிக மகிமையான காரியங்களைக் குறித்து பேசுகின்றார். (1 கொரிந்தியர் 10:31) உங்கள் வாழ்க்கையின் சகல நடவடிக்கைகளும் ஆவிக்குரிய அறுவடையை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும். இவ்வாறு இருக்கின்றபோது புதிய சவால்களும், நோக்கமும், வழிகாட்டலும் விசுவாசி என்ற வகையில் உங்களுக்கு கிடைக்கும். ஒவ்வொருநாளும் தரிசனத்தின் ஒரு பகுதியை நிறைவேற்ற அற்புதமான தருணங்கள் எதிர்-பாருங்கள்.

நீங்கள் உங்களது தனிப்பட்ட உத்தரவாதத்தை உணரும்போது இடைவெளியில் இருக்கின்ற அநேகரை அறுவடையின் தரிசனத்தில் இணைக்கும் குழுவில் ஒரு கருவியாக மாறுவீர்கள். பல தேசங்களிலிருக்கும் விசுவாசிகளடங்கிய இக்குழுவின் இணைப்பானது தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதோடு, அவர் பார்க்கின்றவண்ணமாய் உலகை பார்த்து சுவிஷேசத்தை பகிர்ந்தளிக்கும்.

சமீப காலமாக இவ்வியக்கம் “உலக கிறிஸ்தவர்கள்” என்று குறிப்பிடப்படுகின்றது. அவர்கள் ஒவ்வொரு நாளின் முடிவிலும் முழுநிச்சயத்தோடு சொல்லுவதாவது:

> “விஷேடமாக சுவிஷேசத்தை பகிர்ந்து கொள்ளுவதற்கு இந்த நாள் என் வாழ்க்கையில், கிறிஸ்துவினுடைய உலகளாவிய நலனுக்காக கணக்கிடப்படுகின்றது”

இது ஆவிக்குரிய அறுவடைக்கான சவாலாக இருக்கின்றது. இது தேவனுடைய கண்கள் மூலம் உலகை பார்க்கின்றது.

## திறந்த கதவுகள்

மனிதர்களின் பார்வையில் சில நாடுகள் நற்செய்திக்காக மூடப்பட்டுள்ளது. ஒரு தேசம் “மூடப்பட்டுள்ளது” என குறிப்பிடப்படும்போது, அந்த நாடு கிறிஸ்தவ அருட்பணியாளர்களை மற்றும் அவர்கள் சுவிஷே சத்தை அறிவிப்பதை ஏற்க மறுக்கும் அரசை கொண்டது, எனினும் அதன் எல்லைக்குள் சுவிஷேசம் பரவுவதை தடுக்க முற்படுகின்றது.

ஆனால் தேவனது பார்வையில் வரம்புகள் கிடையாது. அவர் “மூடப்பட்ட” நாடுகளையும் காண்கின்றார். உண்மைதான் சில தேசங்களில் பாரம்பரிய அருட்பணியாளர்கள் செல்வதற்கு அல்லது நுழைவதற்கும் தடை செய்யப்பட்டு விசா மறுக்கப்பட்டுள்ளது, அவர்களால் அங்கு சென்று நற்செய்தியை போதிக்கவும் முடியாதிருக்கின்றது.

ஆனால் சில தேசங்களில் “முன்கதவு” மூடப்பட்டு இருக்கின்றபோதும் பின்கதவுகள் எப்போதும் திறந்திருக்கின்றன. மூடப்பட்ட தேசங்களுக்குள், பாடசாலைகளை நிறுவவும், மருத்துவமனைகளை கட்டவும், விவசாய திட்டங்களை செயல்படுத்தவும், உழைப்பாளிகள் நுழைந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். அங்கே அவர்கள் நற்செய்தியை பகிர்ந்து கொள்கின்றார்கள்.

சில விசுவாசிகள் ஆசிரியர்களாக, மருத்துவ ஊழியர்களாக, கல்வியறிவு பயிற்றுனர்களாக அந் நாடுகளுக்குள் பிரவேசித்துள்ளனர். நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மூடிய எல்லைகளுக் கப்பால் நற்செய்தியை கொண்டு செல்கின்றன. சர்வதேச பரிந்து மன்றாட்ட ஜெபக்குழுவினர் உலக மெங்கும் ஊடுருவி ஜெபிக்கின்றனர்.

“மூடப்பட்ட” தேசங்களுக்குள் ஜீவிக்கின்ற விசுவாசிகள் இரகசிய சுவிஷேச வலையமைப்புகள் மூலம் தமது சொந்த தேசங்களில் நற்செய்திகளை பரப்பும் உத்தரவாதத்தை ஏற்று செயல்படுகின்றனர். எனவே “மூடப்பட்ட” நாடுகள் என அழைக்கப்படுகின்ற நாடுகள் எனக் கூறி உங்கள் உத்தரவாதத்தை புறக்கணிக்க முடியாது. அறுவடையை அரசாங்கங்கள் நிறுத்தலாம். அரசியல் தலைவர்கள் உங்கள் எதிரிகளல்ல.

இவைகளுக்கு பின்னாலுள்ள அதிகாரங்களையும் துரைத்தனங்களையும் நீங்கள் அவதானிக்க வேண்டும்.

தேவனது உலகளாவிய நோக்கம்:

> **ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12)**

வரம்பற்ற உலகத்திற்காக தரிசனத்தை பெற்றுக் கொள்ளுங்கள். அறுவடை நிலங்களை பாருங்கள். நகரங்களுக்காக இயேசு அழுததுபோல அழுங்கள். தேவன் பார்க்கின்றவண்ணம் உலகத்தை பாருங்கள். அவரது தரிசனம் உலகம், அவரது நோக்கம் உலகம் உணர்வதற்கு முன்னே அத்திபாரமிடப்பட்டது.

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. தோராயமாக உலகத்திலுள்ள மக்களில் எத்தனைபேருக்கு சுவிஷேசம் சென்றடைந்துள்ளது?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இன்னும் தங்கள் தாய்மொழியில் வேதாகமம் மொழிபெயர்க்கப்படாதிருக்கின்ற மக்கள் குழுக்கள் தோராயமாக எத்தனை ? --------------------------------------------------------------------------------

4. “தேவனுடைய கண்கள் மூலம் உலகை பார்த்தல்” என்பதன் அர்த்தம் என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிலுள்ள இடைவெளிக்கு இயேசு கிறிஸ்து மத்தியஸ்தராக இருக்க தேவைப்படுவதின் காரணம் யாது? --------------------------------------------------------------------------------

6. உண்மையாயின் “உ” எனவும், பொய்யாயின் “பொ” எனவும் கூற்றுகளுக்கு முன்னாலுள்ள இடை வெளியில் எழுதவும்.

அ. ------------------------- அடைக்கப்பட்ட நாடுகள் சுவிஷேசத்தால் சந்திக்கப்பட முடியாதவையாகும்.

ஆ. ------------------------- நாம் போராட வேண்டிய முக்கியமான எதிரி தமது கட்டுப்பாட்டுக்குள் தேசத்தை வைத்திருக்கின்ற அரசாங்கமாகும்.

இ. ------------------------- ஆவிக்குரிய வயல் நிலங்களில் அறுவடையாளர்கள் குறைவாக இருப்பதாக இயேசு சொன்னார்.

7. உலக கிறிஸ்தவர்கள் என்பதன் அர்த்தம் என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

ஏசாயா 6:1-9ல் பதியப்பட்டுள்ள ஏசாயாவின் தரிசனத்தை வாசிக்கவும்.

**அது...**

- மேல்நோக்கிய தரிசனம் (உயரம்): அவர் தேவனை கண்டார்.
- உள்நோக்கிய தரிசனம் (ஆழம்): அவர் தன்னையும் அவரது ஆவிக்குரிய நிலையையும் கண்டார்.
- வெளிநோக்கிய தரிசனம் (அகலம்): அவர் உலகைக் கண்டார்.

**அந்த தரிசனமானது....**

- பரிசுத்தம்: தேவனது
- பரிசுத்தமில்லை: "நான் அதமானேன்" (அசுத்தம்)
- நம்பிக்கையின்மை: "யார் நமது காரியமாய்ப் போவான்?"

**இந்த முக்கிய சொற்களை கவனியுங்கள்**

ஐயோ : அறிக்கையிடும் ஓர் சொல் (வசனம் 5).
இதோ : சுத்தப்படுத்தும் ஒரு வார்த்தை (வசனம் 7).
போ : பொறுப்பளிப்பும் ஒரு வார்த்தை (வசனம் 9).

## அதிகாரம் நான்கு

# வசனத்திலுள்ள உலகம்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

☐ உலகிலுள்ள தேசங்களைக்குறித்து தேவனுக்கு ஆரம்பத்திலிருந்த திட்டத்தையும் நோக்கத்தையும் விபரிக்கவும்,

☐ இத்தரிசனம் வேதாகமத்தின் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதை தெரிவிக்கவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

> **காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று,**
>
> **தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1:9-10)**

## அறிமுகம்

“ஆவிக்குரிய அறுவடையின் உபாயங்கள்” பற்றி இப்பாடத்தின் முதலாம் பாகம் வழங்குகிறது. அது “காட்சியாக்கம்” கொண்டு தரிசனத்தை அடையாளங்காணும். இந்த அதிகாரங்கள் மூலம் தரிசனத்தின் பிறப்பு, தரிசனத்தின் அடையாளம் என்பனவற்றை தேவனின் கண்கள் மூலம் பார்க்கப்படும்.

இந்த அதிகாரம் “நடைமுறைகள்” பற்றியும், இரண்டாவது படியாக “ஆவிக்குரிய அறுவடையின் உபாயங்கள்” பற்றியும் கவனம் செலுத்தும். அறுவடையின் தரிசனத்தின் பின்புலம் பற்றியும் நோக்கம் பற்றியும் இது முன்வைக்கும். தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் அவரின் உலகளாவிய நோக்கத்தை ஒருங்கிணைக்கும் நோக்கத்தை வெளிப்படுத்தும்.

## தேவனுடைய நோக்கம்

ஆரம்ப காலந்தொட்டே தேவன் தனது வாக்குறுதிகள் மற்றும் தீர்க்கதரிசனங்களில் அவரது மனித குலத்துடனான உறவுசார்ந்த தெய்வீக நோக்கமிருந்தது.

தேவன் தனது நோக்கத்தை விசுவாசிகளுக்கு வெளிப்படுத்தினார்:

**காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று,**

**தமக்குள்ளே தீர்மானித்திருந்ததம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1:9-10)**

ஆரம்ப காலத்திலிருந்தே தேவனது தெய்வீக நோக்கம் வானத்தையும் பூமியையும் இயேசு கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்படுத்தி வருகின்றது. அவரது தரிசனம் உலகலாவியது....

**கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமை யுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:9)**

உலகின் இரட்சிப்பே தேவனுடைய நோக்கமாகும். ஏனென்றால் அவரது உலகளாவிய நோக்கம், எமது நோக்கமாக மாற வேண்டும். அவரது நோக்கம் எம்மில் முன்னுரிமை பெற வேண்டும்.

பசி, வறுமை, நோய் மற்றும் சமூக அநீதிகள் உட்பட உலகில் பல தேவைகள் இருக்கின்றன. வேதாகமத்தின் படிப்பினையில் நாம் கற்றுக் கொள்கின்றபடி பாரம்பரிய ஊழியங்கள் இவ்வனைத்து பகுதியிலும் ஈடுபட்டுள்ளது.

ஆனால் அறுவடை நிலத்தில், தேவனுடைய இராஜ்ஜியத்தின் அறுவடையாளர்களான மனுஷர்கள் திரும்பவும் இத்துறைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

சமூகங்களின் பிற தேவைகள் சந்திக்கப்படுவதின் உத்தரவாதம் விசுவாசிகளால் நிறுவப்பட வேண்டும். மனிதனுடைய சகல மட்டங்களிலும், தேவைகளுக்குள்ளும் திருப்பணி ஈடுபட்டபோதும், இயேசு கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை அறுவடை செய்வதில் தேவனது நோக்கத்திற்கு முன்னுரிமை கொடுக்கவில்லை.

## பழைய ஏற்பாடு

தேவனது நோக்கத்தை ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையும் அறிய முடியும். அவர் தனது நோக்கத்தை நிறைவேற்ற தேசங்களுக்களையும் தனிநபர்களையும் பாவித்தார் என்பதைக் குறித்த வரலாற்றை தேவவசனம் கொண்டுள்ளது.

ஆதாம் ஏவாளுக்கே முதலாவது பெரிய உத்தரவாதம் வழங்கப்பட்டது...

**நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி... (ஆதியாகமம் 1:28)**

தேவனுடன் உறவு கொள்ள ஜீவாத்துமாக்களாகவும், தேவனுடைய சாயலாகவும் படைக்கப்பட்ட, ஆதாமும் ஏவாளும் அவர்கள் ஜீவித்த பூமியில் அவர்களது சந்ததியை பெருக்கி வேண்டியவர்களாக இருந்தனர். சரீரப்பிரகாரமாக அவர்கள் பிள்ளைகளை பெற வேண்டும். ஆவிக்குரிய ரீதியில் அவர்கள் விசுவாசிகளை உற்பவிக்க வேண்டும்.

கடைசியாக தேவன் தனது நித்திய உடன்படிக்கையை ஆபிரகாமுடன் ஏற்படுத்தினார். அந்த உடன்படிக்கையில் உலகமும் இயற்கையுமிருந்தது, தேவன் ஆபிரகாமை நோக்கி:

**உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதியாகமம் 22:18)**
**உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். (ஆதியாகமம் 28:14)**

ஆபிரகாம் இஸ்ரவேல் தேசத்திலிருந்து வந்தான். சுற்றிலுமிருந்த தேசங்களுக்கு சாட்சியாக இஸ்ரவேலை தேவன் பாவித்தார். பூமியிலுள்ள ஜாதிகள் இஸ்ரவேலால் ஆசீர்வதிப்படும் என்பதையும் தேவன் வெளிப்படுத்தினார்.

எகிப்தில் வாதைகள் இருந்த நேரத்தில், தேவன் பார்வோனிடம் தன்னைப்போலொருவர் உலகத்தில் இல்லை என்பதை காட்டும்படிக்கு நியாயத்தீர்ப்பை அனுப்புவேன் என்றார்:

> **பூமியெங்கும் என்னைப்போல வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இந்தமுறை நான் சகலவித வாதைகளையும் உன் இருதயத்திலும், உன் ஊழியக்காரர் மேலும் உன் ஜனங்கள்மேலும் அனுப்புவேன் (யாத்திராகமம் 9:14)**

இஸ்ரவேலர் முகங்கொடுத்த யோர்தானின் தண்ணீரை வற்றிப்போகப்பண்ணி, அவரது கரத்தின் வல்லமையை அம்மக்கள் காணும்படி செய்தார்:

> **பூமியின் சகல ஜனங்களும் கர்த்தருடைய கரம் பலத்ததென்று அறியும்படிக்கு, நீங்கள் சகல நாளும் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படும்படிக்கும், (யோசுவா 4:23)**

தாவீது கோலியாத்தை போர்களத்தில் சந்தித்தபோது, தேவன் அவனுக்கு ஜெயத்தைக் கொடுத்து, முழு உலகத்திற்கும் அவரே தேவன் என தெரியப்படுத்தினார்.

> **இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார். நான் உன்னைக் கொன்று,**
>
> **உன் தலையை உன்னை விட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டுமிருகங்களுக்கும் கொடுப்பேன். அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள். (1 சாமுவேல் 17:46)**

இஸ்ரவேலில் இராஜ்ஜியம் நிறுவப்பட்டபிறகு, தேவனுடைய உலகளாவிய தரிசனத்தை சாலமோன் பிடித்துக் கொண்டு, அவரது வாஞ்சையை தெரிவித்தார்.

> **பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப்போல உமக்குப் பயப்படும்படிக்கும், நான் கட்டின இந்த ஆலயத்துக்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்ட-தென்று அறியும்படிக்கும், உம்முடைய நாமத்தை அறியத்தக்கதாக.. (1 இராஜாக்கள் 8:43)**

தாவீது அறுவடை நிலங்களுக்காக அறைகூவல் விடுத்தார்:

> **ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்.**
> **கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார்... என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள்.**
> **(சங்கீதம் 96: 3,10)**

தானியேலும், யோனாவும் பல்லின கலாச்சார மக்களிடையெ பணிவிடை செய்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளாவர். தங்களுடைய சொந்த ஜனத்தார் தவிர்ந்த பிறஜாதிகளிடத்தில் சுவிஷேசத்தை கொண்டு சென்றனர் என்பதே இதன் அர்த்தம்.

பாபிலோனிலே ஒரு அதிகாரியாக பணியாற்றும்போது தானியேல் ஓர் அதிகாரியாக தேவனுக்கு சாட்சியாக இருந்தான். யோனா நினிவேக்கான திருப்பணியாளனாக இருந்தான்.

ஏசாயா இஸ்ரவேல் பிற நாடுகளின் மத்தியில் சாட்சியாக இருக்கின்றது என அறிவித்தார்:

> **சகல ஜாதிகளும் ஏகமாய்ச்சேர்ந்துகொண்டு, சகல ஜனங்களும் கூடிவரட்டும். இதை அறிவித்து, முந்தி சம்பவிப்பவைகளை நமக்குத் தெரிவிக்கிறவன் யார்? கேட்டு மெய்யென்று சொல்லக்கூடும்படிக்கு, அவர்கள் தங்கள் சாட்சிகளைக் கொண்டுவந்து யதார்த்தவான் களாய் விளங்கட்டும்.**
>
> **நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்க-ளும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை, எனக்குப்பின் இருப்பதும் இல்லை.**
>
> **நான், நானே கர்த்தர், என்னையல்லாமல் ரட்சகர் இல்லை.**
>
> **நானே அறிவித்து, இரட்சித்து, விளங்கப்பண்ணினேன். உங்களில் இப்படிச் செய்யத்தக்க அந்நிய தேவன் இல்லை. நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 43:9-12)**

பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள முழு வரலாறிலும் இஸ்ரவேலை தேவன் உலக ஜாதிகளின் மத்தியில் சாட்சியாக பாவித்தமையை காணலாம்.

தேவன் தனி நபர்களும் தேசங்களும் தேவனைபற்றி அறிந்து கொள்ளுகின்ற தேவனது தெய்வீக நோக்கத்தை பழைய ஏற்பாடு பிரதிபலிக்கின்றது.

## புதிய ஏற்பாடு

பழைய ஏற்பாடு தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வழி இயேசு கிறிஸ்துவின் வருகையுடன் தயாராக்கியது தேவனது சித்தத்தையும் நோக்கத்தையும் இயேசு கிறிஸ்து தனது ஊழியத்தில் நிறைவேற்றியதை புதிய ஏற்பாடு பதிவு செய்துள்ளது. அறுவடையின் தரிசனத்தைக் குறித்து இயேசு தனது சீடர்களுக்கு சவால்விடுத்து கூறியதாவது:

> **நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4:34)**

இயேசுவின் வாழ்க்கை முழுவதும் தேவனுக்காக மக்களை அறுவடை செய்வதற்கு அர்ப்பணிக்கப் பட்டிருந்தது. அவரது வாழ்வின் நோக்கம் உலகத்தை ஆதாயப்படுத்துவதாக இருந்தது:

> **அவரோ அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார். (லூக்கா 4:43)**

அவர் பரலோகத்திற்கு செல்லுமுன், அவரது மாபெரிய கட்டளையை எமக்கு விட்டுச் சென்றார், இது அவிக்குரிய அறுவடைக்கு பின்னாலுள்ள தரிசனமாகும். அது புதிய ஏற்பாட்டில் வித்தியாசமான ஐந்து இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது:

**அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.**

**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**

**நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். (மத்தேயு 28:18-20)**

**பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.**

**விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.**

**விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.**

**சர்ப்பங்களை எடுப்பார்கள், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற்கு 16:15-18)**

**அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி:**

**எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது, அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.**

**என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24:45-49)**

**பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, (யோவான் 20:21)**

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிக-ளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

விசுவாசிகள் என்றவகையில் நாம் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும்படி உலகமெங்கும் சாட்சியிடுவது எமது உத்தரவாதமாகும்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் சபையின் ஆரம்பகாலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. "நீங்கள் எனக்கு சாட்சியாயிருப்பீர்கள்" (அப்போஸ்தலர் 1:8) என்பதே அதன் மையக்கருத்தின் சுருக்கமாகும். இந்த விரிவடையும் சாட்சியின் மாதிரி அப்போஸ்தலரின் புத்தகம் முழுவதிலும் பரவிக்கிடக்கின்றது:

யூதருக்கு சாட்சி: அப்போஸ்தலர் 1:1-8:3
யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் சாட்சி: அப்போஸ்தலர் 8:1-12:25
புறஜாதிகளுக்கு சாட்சி: அப்போஸ்தலர் 13:1-28:31

ஆரம்ப சபையானது பெரிதான வல்லமையினால் ஆரம்பமானதாக அப்போஸ்தலர் 2ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. உலக நாடுகளில் அவரது சாட்சி கடந்தோட வேண்டும் என்பதற்காக ஒரு புதிய சரீரத்தின் உருவாக்கம் ஆரம்பமானது:

> **தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே,**
>
> **உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, (எபேசியர் 3:9-10)**

இயேசு கிறிஸ்துவினால் வருகின்ற மீட்பு, திருச்சபையின் மூலமாக உலகம் முழுவதும் அறிவிக்கப்பட வேண்டும் என்பதே தேவனது திட்டமாகும்.

புதிய ஏற்பாட்டின் நிருபங்கள் திருச்சபை அங்கத்தவர்களின் தகுதிகள், சலுகைகள், உத்தரவாதங்கள், என்பனவற்றை விளக்குகின்றன. நன்கு ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபையானது போதனைகளில் மாத்திர-மல்ல, தேவனுடைய வல்லமையினால் அறுவடையாளர்களைக் கொண்டு உலகத்தில் வசனங்களை விதைத்து அறுவடையிலும் ஈடுபடும்.

முதலாம் நூற்றாண்டின் கடைசியில் இருந்த ஏழுசபைகளின் வாழ்க்கையைபற்றி வெளிப்படுத்தல் 1-3ஆம் அதிகாரங்களில் யோவான் பதிவு செய்து வைத்துள்ளார். இப்பதிவினூடாக பெந்தகொஸ்தே நாளுக்கு பின்னரான இரண்டு தலைமுறைகளின் நிலையை காண்கின்றோம்.

சில திருச்சபைகள் அவர்களது நோக்கத்தை மறந்துவிட்டன. சில சபைகள் வல்லமையற்று ஆவிக்கு-ரிய ரீதியில் குளிர்ந்துவிட்டன. திருச்சபையின் நிலையை இந்த அத்தியாயங்கள் பிரதிபலிக்கின்ற போதும் தேவனுடைய தெய்வீக நோக்கம் மாற்றமடையவில்லை.

> **இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். (வெளிப்படுத்தல் 3:20)**

எத்தேசத்தவருக்கும், கோத்திரத்தாருக்கும், பல பாஷைபேசுவோருக்கும், தன்னை வெளிப்படுத்த வேண்டும் என்பதே தேவனது வாஞ்சையாக இருக்கின்றது. ஆரம்ப முதலே தேவனுடைய திட்டம் மாற்றமடையவில்லை.

---

சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் "வேதாகமத்தின் உலக கண்ணோட்டம்" என்ற பாடவிதானத்தில் தேசங்களைக் குறித்த தேவனது நோக்கம் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. உண்மையாயின் "உ" எனவும், பொய்யாயின் "பொ" எனவும் கூற்றுக்கு முன்னாலுள்ள கோடிட்ட இடத்தில எழுதவும்.

அ. ------------------------- தேவன் தனது தெய்வீக நோக்கத்தை மனிதனுக்கு வெளிப்படுத்தவில்லை.

ஆ. ------------------------- தேவனது திட்டம் யாவும் இயேசு கிறிஸ்துவுக்குள் ஐக்கியமாகிறது.

இ. ------------------------- உலகிலுள்ள தேசங்களுக்கு சாட்சியாக இருக்கும்படி இஸ்ரவேல் தேவனால் பயன்படுத்தப்பட்டதாக பழைய ஏற்பாடு கூறுகின்றது.

ஈ. ------------------------- புதிய ஏற்பாட்டு திருச்சபையின் சரீரமாகிய மக்கள் மூலம் உலகெங்கிலும் சுவிஷேசம் அறிவிக்கப்பட வேண்டும்

3. தேவனுடைய தெய்வீக நோக்கம் என்ன? உங்களின் பதிலுக்கு ஆதாரவான ஒரு வேதாகம வசனத்தையாவது தருக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------- வசனம்: ------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட செய்தியை வெளிப்படுத்தல் 1-3 அதிகாரங்களில் படிக்கவும்.

   தேவனால் கூறப்பட்ட இந்த சபைகளின் தராதரத்தை பட்டியலிடுக. இக்குணங்கள் அங்குள்ள அவர்களின் சபைகளில், நற்செய்தி விரிவாக்கம் செய்ய எவ்விதம் உதவியது?

   இந்த சபைகளில் தேவனால் அடையாளங்காணப்பட்ட பிரச்சனைகளின் பட்டியலை தயார் செய்க. இப்பிரச்சனைகள் எவ்வாறு உலகத்தின் தேசங்களுக்கு நற்செய்தி பரவவிடாமல் சபையை தடை செய்கின்றது?

2. உலகத்தைபற்றி வசனத்திலுள்ளவற்றை தொடர்ந்து ஆராய்க. அடுத்த ஆண்டு முழுவதும் உலக நலனுக்கான தேவனது சித்தத்தை வேதாகமத்தில் படிக்கவும்.

   உலக ஜாதிகளிடத்தில் தேவனுடைய இடைபடுதலைக் குறித்த சகலவசனங்களை அடையாளங்காணவும். உங்களுடைய வேதாகமத்திலுள்ள இந்த வசனங்களை சிவப்புநிற பேனா அல்லது பென்சிலால் அடிக்கோடிடவும்.

   கீழே பட்டியலிடப்பட்டுள்ள சில வசனங்களை நீங்கள் கவனித்தால் அது அடையாளங்காண உதவும்.

   - பூமி
   - உலகம்
   - தேசம் அல்லது ஜாதிகள்
   - புறஜாதிகள் (இஸ்ரவேலைத்தவிர்ந்த ஏனைய நாடுகள் என்பதே இதன் அர்த்தம்)
   - புறஜாதிகள்.

## அதிகாரம் ஐந்து

# துருபிடித்த அரிவாளும், காலியான வயல்களும்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

☐ பௌதீக உலகில் அறுவடையை தடை செய்யும் விடயங்களை அடையாளங்காணவும்,

☐ இந்த இயற்கை கொள்கைகளை ஆவிக்குரிய அறுவடையில் பிரயோகிக்கவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

**மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.**

**தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான். (கலாத்தியர் 6:7-8)**

## அறிமுகம்

இப்பாடத்தின் முதலாம் பகுதி அறுவடையின் தரிசனத்தை அறிமுகப்படுத்தியது. பாகம் இரண்டு தரிசனத்திற்கு பின்னுள்ள நோக்கத்தை அறிமுகப்படுத்தியது. இந்த பகுதி “பொருளாக்கத்தைப்பற்றி” இடைபடும். தரிசனத்தை நிறைவேற்றவுள்ள “எதிர்பார்ப்பின்” திட்டத்திற்கு நேராக வழிநடத்தும்.

பரிதாகரமான அறுவடைக்கான காரணங்களை இந்த அத்தியாயம் ஆராயும். அதன் முக்கியத்துவத்தை ஆராய்வதோடு, செய்ய கூடாதவற்றையும் செய்யக் கூடியவற்றையும் தெரியப்படுத்தும்.

அமெரிக்காவின் பிரபலமான கண்டுபிடிப்பாளரான தோமஸ் எடிசன், மின்சாரத்தை கண்டு பிடிப்பதற்கு முன்னர் 1,500 பரிசோதனைகளை மேற்கோண்டு தோல்வியடைந்தார். அப்பரிசோதனைகள் பற்றி கேட்ட போது, “பரிசோதனைகள் முக்கியமானவை ஏனென்றால் 1,500 தடவைகளும் நான் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாது என்பதைக் கற்றுக் கொண்டேன்” என்றார். அவர் எதிர்காலத்தில் நேரத்தையும் முயற்சியையும் வீண் விரயம் செய்யவில்லை.

நீங்கள் ஆவிக்குரிய அறுவடையைக் குறித்து பரிசோதனை செய்யவில்லை. இந்த பரிதாபகரமான அறுவடைக்கான காரணத்தை தேவன் வசனத்தில் கொண்டுள்ளார். ஆவிக்குரிய ரீதியில் செய்யப்பட்ட முயற்சி வீணடிக்கவில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமானது. இதுவே

இப்பாடத்தின் விடயங்களாகும்.

அடுத்த இரண்டு அதிகாரங்களும் ஆவிக்குரிய அறுவடைக்கான பலனையும் அதன் தாக்கத்தையும் “ஆவிக்குரிய அறுவடையின் உபாயங்கள்” என்ற கொள்கையின் அடிப்படையில் அவதானிக்கும். “அறுவடையின் முடிவுகள்” ஆவிக்குரிய அறுவடையின் முறைகளையும், ஆயுதங்களையும் அடையாளற் காண்பிக்கும்.

## “ஆனால் - ஏனென்றால்” கொள்கை

தேவனுடைய வார்த்தையில் “ஆனால் - ஏனென்றால்” என்றழைக்கப்படுகின்ற கொள்கை முக்கியமானது. தேவன் தன்னுடைய மக்களுக்கு “ஆனால் - ஏனென்றால்” கொள்கையின் அடிப்படையிலேயே பல வாக்குத்தத்தங்களைக் கொடுத்துள்ளார். இக்கொள்கைக்கு நல்லதொரு உதாரணம் உபாகமம் 28ஆம் அதிகாரமாகும். தேவன் வாக்குப்பண்ணினார்:

> **இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படி-யெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவி கொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார். (உபாகமம் 28:1)**

இந்த அதிகாரத்தின்படி தேவனுடைய மக்கள் அவருடைய ஆசீர்வாதங்களை அனுபவிக்க வேண்டுமானால் அவர்கள் அவரை சேவிக்க வேண்டும். பௌதீக உலகத்திலும் ஏராளமான அறுவடைக்கும் இதுவே சத்தியமாக இருக்கின்றது.

> **நீ பட்டணத்திலும், வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.**
>
> **உன் நிலத்தின் கனியும், ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். (உபாகமம் 28:3-4)**

15ஆம் வசனம் எச்சரிக்கின்றது:

> **இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின் படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும். (உபாகமம் 28:15)**

கர்த்தருடைய வழியிலிருந்து திரும்பும்போது சாபமம் வருவதால் பௌதீக உலகில் பரிதாபகரமான அறுவடை ஏற்படுகின்றது:

> **நீ பட்டணத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய், வெளியிலும் சபிக்கப்பட்டிருப்பாய்.**
>
> **உன் நிலத்தின் கனியையும், உன் பிரயாசத்தின் பலனையும் நீ அறியாத ஜனங்கள் புசிப்பார்கள். நீ சகல நாளும் ஒடுக்கப்பட்டும் நொறுக்கப்பட்டும் இருப்பாய்.**

**ஒலிவமரங்கள் உன் எல்லைகளிலெங்கும் இருக்கும், ஆனாலும் அதின் எண்ணெயை நீ பூசிக்கொள்வதில்லை. உன் ஒலிவமரத்தின் பிஞ்சுகள் உதிர்ந்துபோம்.**

**உன் மரங்களெல்லாவற்றையும் உன் நிலத்தின் கனிகளையும் விட்டில் பட்சித்துப்போடும். (உபாகமம் 28:16,18, 32-42)**

இந்த உபாகமத்தின் அதிகாரம் “ஆனால் - ஏனென்றால்” கொள்கையை விளக்குகின்றது. தேவனது வாக்குத்தத்தங்கள் எங்களது பிரதியுத்தரத்திற்கேற்ப நிபந்தனைக்குட்பட்டவை.

## இயற்கை மற்றும் ஆவிக்குரிய சமாந்தரங்கள்

வேதாகமம் வெளிப்படுத்தும் கொள்கைகள் பௌதீக உலகிலுள்ள அறுவடையின் பலனை காண்பிக் கின்றது. அந்த கொள்கைகளை பின்பற்றாவிட்டால் பயிர்கள் நாசமடைந்து பரிதாபகரமான அறுவடை ஏற்படும் என எச்சரிக்கின்றது.

பெரிதான ஆவிக்குரிய சத்தியத்தைக்கு சமாந்தரமான இந்த கொள்கைகன் விதைப்பு மற்றும் அறுப்பில் பிரயோகிக்க வேண்டியவையாகும்.

இந்த கொள்கைகளை புரிந்து கொண்டால் நற்செய்தியால் உலகை ஆதாயப்படுத்தி நல்ல அறுவடை-யை ஏற்படுத்தலாம். வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் இக்கொள்கைகளை பிரயோகித்தால், தேவன் எம்மை பொருளாதாரம், ஆவி, ஆத்தும சரீரத்துக்குரிய ஆசீர்வாதங்களால் நிரப்புவார்.

## அறுவடையில் சாத்தானின் அக்கறை

ஆவிக்குரிய அறவடையில் சாத்தான் அக்கறை கொண்டுள்ளான். இயேசு பேதுருவிடம் கூறினார்:

**இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். (லூக்கா 22:31)**

சாத்தானவன் மட்டுமே உங்கள் வாழ்கையிலிருக்கின்ற அனைத்து நல்லனவற்றையும் எடுத்துப்போட நினைக்கின்றான். ஆவிக்குரிய அறுவடையை நீங்கள் செய்வதற்கு அவன் விரும்பில்லை.

தேவன் எச்சரித்துள்ளதான ஆவிக்குரிய அறுவடையை தடுப்பதற்கும், உங்களுடைய வாழ்க்கையிலிருந்து அவற்றை பிரிப்பதற்கும் வடிவமைக்கப்பட்ட சாத்தானுடைய உபாயங்களை அடையாளம் காண்பது உங்களுக்கு உதவும்,

பயனுள்ள அறுவடை உபாயங்களை, அறுவடையில் முதலாவதாக பயன்படுத்த வேண்டும், உங்கள் வாழ்க்கையில் இருந்து அவற்றை அகற்றுவதையும் தடுக்க வேண்டும்.

நீங்கள் இந்த எதிர்மறையான காரியங்களை சமாளிக்க வேண்டும். பௌதீக உலகில் விதைப்புக்காக நிலத்தை பண்படுத்துவதற்கு இது ஒப்பானது. விதைக்கும் முன்னதாக கற்பாறைகள் நொறுக்கி உடைக்கப்பட்டு, முள்ளுகளும் அகற்றப்பட்டு நிலம் தயாராக்கப்பட வேண்டும்.

## பலனற்ற அறுவடைக்கான காரணிகள்

பின்வருவன பலனற்ற அறுவடைக்கான காரணிகள்:

### தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமை:

பலனற்ற அறுவடைக்கான காரணத்தை முன்னர் நாம் வாசித்த உபாகமம் 28 அதிகாரம் விளக்குகின்றது, இது தேவனது வார்த்தைக்கு கீழ்ப்படியாமையால் ஏற்படுகின்றது. அறுவடையில் தேவன் வாக்குப் பண்ணியுள்ளவற்றை கவனித்து, அவரது கட்டளைகளுக்கு கீழ்படிவீர்களானால், ஆசீர்வதிக்கப்படுவீர்கள். அப்படியில்லாவிட்டால் அறுவடை அழிந்துவிடும்.

ஏசாயா ஐந்தாம் அதிகாரத்தில் இஸ்ரவேலின் திராட்சைதோட்டத்தைக் குறித்து தேவன் பேசுகின்றார். அவருடைய வாத்தைக்கு கீழ்படியாவிட்டமையால் (13,20) கனி கொடுக்கப்படவில்லை நீங்களும் தேவ-னுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாவிட்டால் ஆவிக்குரிய பஞ்சம் ஏற்படும்.

> **இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்ஞூ ஆகாரக் குறை வினால் உண்டாகிய பஞ்மல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தரு டைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.**
>
> **அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத் தேட ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசை தொடங்கிக் கீழ்த்திசைமட்டும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற் போவார்கள். (ஆமோஸ் 8:11-12)**

### தேவனை மறத்தல்

உங்களுடைய வாழ்க்கையில் அவரை வைக்க வேண்டிய இடத்தில் வைக்காதிருத்தல் அவரை மறந்து விடுவது பயனற்ற அறுவடைக்கு மற்றொரு காரணமாகும்:

> **உன் பெலமாகிய கன்மலையை நீ நினையாமல், உன் இரட்சிப்பாகிய தேவனை மறந்தாய். ஆதலால் நீ நேர்த்தியான நாற்றுகளை நட்டாலும், அந்நிய தேசத்துக் கன்று-களை வைத்தாலும்,**
>
> **பகற்காலத்திலே உன் நாற்றைவளரவும், விடியற்காலத்திலே உன் விதையை முளைக்கவும் பண்ணினாலும், பலனைச் சேர்க்கும் நாளிலே துக்கமும் கடும்வேதனையுமே உங்கள் அறுப்பாயிருக்கும். (ஏசாயா 17:10-11)**

நீங்கள் தேவனைக் குறித்து போதுமானளவு அறிந்து கொள்ளாதிருந்தால் அவரைக் குறித்து அறிந்து கொள்ளுங்கள். அவரது இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள், அவரை உங்களது தேவன் என ஏற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் அவரை சரியானபடி ஏற்றுக் கொள்ளவில்லையானால், இரவும் பகலும் வேலை செய்தாலும் சிறப்பான அறுவடையை பெற முடியாது. தேவனை மறந்தமைக்கு இஸ்ரவேலா் சிறந்த உதாரணமாக இருக்கின்றனா்.

**ஆனாலும் சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள், அவருடைய ஆலோசனைக்கு அவர்கள் காத்திராமல்,**

**எகிப்திலே பெரிய கிரியைகளையும், காமின் தேசத்திலே அதிசயங்களையும், சிவந்த சமுத்திரத்தண்டையிலே பயங்கரமானவைகளையும் செய்தவராகிய, தங்கள் இரட்சகரான தேவனை மறந்தார்கள். (சங்கீதம் 106:13,21)**

இதன் காரணமாகவே இஸ்ரவேலர் பௌதீக மற்றும் ஆவிக்குரிய அறுவடையில் வேதனைப்பட்டனர்.

பலனற்ற அறுவடையை அறுப்பதற்கான காரணத்தை இஸ்ரவேல் அடையாளங்காணவில்லை. ஏராளமானோர் தேவனை மறந்தார்கள்.

**அவர்கள் உன் விளைச்சலையும், உன் அப்பத்தையும் சாப்பிட்டு, உன் திராட்சப்பழங்களையும் உன் அத்திப்பழங்களையும் சாப்பிட்டு..... எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இவைகளையெல்லாம் எதினிமித்தம் செய்தார் என்று நீங்கள் கேட்டால், அப்பொழுது நீ அவர்களைப் பார்த்து: நீங்கள் என்னைவிட்டு, உங்களுடைய தேசத்திலே அந்நிய தேவர்களைச் சேவித்ததுபோல, உங்களுடையதல்லாத தேசத்திலே அந்நியர்களைச் சேவிப்பீர்களென்று சொல்வாயாக. (எரேமியா 5:17-19)**

பலனற்ற அறுவடைக்கான காரணங்களை ஆமோஸ் 4ஆம், 5ஆம் அதிகாரங்களில் தெளிவாக விபரிக்கின்றார்:

**இதுவுமல்லாமல், அறுப்புக்காலம் வர இன்னும் மூன்றுமாதம் இருக்கும்போதே மழையை நான் தடுத்தேன், ஒரு பட்டணத்தின்மேல் மழைபெய்யவும் ஒரு பட்டணத்தின்மேல் மழை பெய்யாமலிருக்கவும் பண்ணினேன். ஒரு வயலின்மேல் மழைபெய்தது, மழைபெய்யாத மற்ற வயல் காய்ந்துபோயிற்று.**

**கருக்காயினாலும் விஷப்பனியினாலும் உங்களை தண்டித்தேன். உங்கள் சோலைகளிலும் திராட்சத்தோட்டங்களிலும் அத்திமரங்களிலும் ஒலிவமரங்களிலும் மிகுதியானதைப் பச்சைப்புழு அரித்துப்போட்டது. ஆகிலும் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஆமோஸ் 4:7,9)**

பிரச்சனைகளுக்கான தீர்வை அடையாளங்கண்டு ஆமோஸ் கொடுக்கின்ற தீர்வு:

**என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள். (ஆமோஸ் 5:4)**

## முறையற்ற விதைப்பு:

தேவன் தமது மக்களை எச்சரித்தார்.

**உன் திராட்சத்தோட்டத்திலே பற்பலவிதமான விதையை விதைக்காயாக இப்படிச் செய்தால் நீ விதைத்தவைகளின் பயிரையும், திராட்சத்தோட்டத்தின் பலனையும் தீட்டுப்படுத்துவாய். (உபாகமம் 22:9)**

**உன் பெலமாகிய கன்மலையை நீ நினையாமல், உன் இரட்சிப்பாகிய தேவனை மறந்தாய், ஆதலால் நீ நேர்த்தியான நாற்றுகளை நட்டாலும், அந்நிய தேசத்துக் கன்றுகளை வைத்தாலும்,**

**பகற்காலத்திலே உன் நாற்றைவளரவும், விடியற்காலத்திலே உன் விதையை முளைக்கவும் பண்ணினாலும், பலனைச் சேர்க்கும் நாளிலே துக்கமும் கடும்வேதனையுமே உங்கள் அறுப்பாயிருக்கும். (ஏசாயா 17:10-11)**

இந்த வசனங்களில் தேவன் "பற்பல விதைகள்" மற்றும் "நாற்கள்" (சிறிய தாவரங்கள் அல்லது நாற்றுக்கள்) குறித்தும் பேசுகின்றார். அவைகள் நாட்டப்பட்டு வளருகின்றபோதும் அறுவடை சபிக்கப்பட்டிருப்பதாக தேவன் கூறினார்.

புதிய ஏற்பாட்டில் "விதை" என அழைக்கப்படுவது தேவனுடைய வார்த்தையையாகும். உங்கள் வாழ்க்கையில் எதை விதைக்கின்றீர்களோ, அது உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை பாதிக்கின்றது. நீங்கள் அவருடைய வார்த்தையை விதைத்தால் ஏராளமான அறுவடை கிடைக்கும்.

நீங்கள் சடங்காச்சார மனிதனை, நிறுவனத்தை அல்லது சமயப்பிரிவுகளை, தேவனுடைய வார்த்தைக்கு சமமாக்குவீர்களாயின், அது விதையை கலப்பதற்கு சமமானதாக இருக்கும். ஏராளமான சபை பிரிவுகள் ஆரோக்கியமான ஆவிக்குரிய தாவரங்களை கொண்டுள்ளன போன்று காட்சியளிக்கின்றன. அவர்களுக்கு பெரிய சபைகளும் கூட்டங்களை நடத்த அழகிய கட்டிடங்களும் இருக்கின்றன. ஆனாலும் அவர்கள் தங்களது சொந்த வெளிப்பாடுகளை அல்லது சடங்காச்சார மரபுகளையும் தேவ வசனத்தோடு கலந்தவர்களாக இருக்கின்றனர். அவர்களுடைய ஆவிக்குரிய அறுவடை சபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறே பிழையான உபதேசங்கள் ஆரம்பித்தன. அவர்கள் தேவனுடைய வார்த்தையில் தங்களுடைய கருத்துக்களை "கலந்தனர்" இந்த அறுவடையின் முடிவு துக்ககரமானது.

தேவனுடைய வார்த்தை அழிவில்லாதது, அது புதிய பிறப்பையும், சிறப்பான அறுவடையையும் மக்கள் வாழ்வில் கொண்டுவரும்.

**அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. (1 பேதுரு 1:23)**

## அக்கறையின்மை:

நீதிமொழிகள் அறுவடையின்போது தூங்குகிற மகனைப்பற்றி பேசுகிறது

**அறுப்புக்காலத்தில் தூங்குகிறவனோ இலச்சையை உண்டாக்குகிற மகன். (நீதிமொழிகள் 10:5)**

அறுவடைகாலம் வேலைப்பளுவுள்ள நேரம். இது மிக முக்கியமான நேரம், விரைவாக அதை சேர்க்கா விட்டால், வயலிலேயே அது வாடிவிடும்.

பௌதீக உலகில் வேதாக காலத்தில் குமும்பத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களும், அறுவடை யின்போது உதவி செய்வார்கள். இக்காலத்தில் ஒரு மகன் நித்திரையாக இருப்பானேயானால் அது அவனது குடும்பத்திற்கு அவமானமாக இருக்கும்.

நாம் ஆவிக்குரிய அறுவடையினதும், இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போகின்ற முக்கியமான நேரத்தில் இருக்கின்றோம். அநேக தேவனுடைய பிள்ளைகள் நித்திரையாக இருக்கின்றார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அறுவடையில் இணைந்து கொள்ளவில்லை. அவர்களுடைய அரிவாள் துருப்பிடித்துள்ளது, வயல்கள் வெறுமையாக இருக்கின்றது.

நீதிமொழிகள் அக்கறையின்மையின் முடிவைப்பற்றி பேசுகின்றது.

> **சோம்பேறியின் வயலையும், மதியீனனுடைய திராட்சத்தோட்டத்தையும் கடந்துபோனேன்.**
>
> **இதோ, அதெல்லாம் முள்ளுக்காடாயிருந்தது, நிலத்தின் முகத்தைக் காஞ்சொறி மூடினது, அதின் கற்சுவர் இடிந்து கிடந்தது.**
>
> **அதைக் கண்டு சிந்தனைபண்ணினேன், அதை நோக்கிப் புத்தியடைந்தேன்.**
>
> **இன்னுங்கொஞ்சம் உறங்கட்டும், இன்னுங்கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ?**
>
> **உன் தரித்திரம் வழிப்போக்கனைப்போலும் உன் வறுமை ஆயுதமணிந்தவனைப்போலும் வரும். (நீதிமொழிகள் 24:30-34)**

அக்கறையற்ற தன்மையின் முடிவு பலனற்ற தன்மையாகும்.

எரேமியா அறுவடையில் அக்கறையற்றிருக்கின்ற தலைவர்களைக் குறித்து பேசுகிறார்:

> **அநேக மேய்ப்பர்கள் என் திராட்சத்தோட்டத்தை அழித்து, என்பங்கைக் காலால் மிதித்து, என் பிரியமான பங்கைப் பாழான வனாந்தரமாக்கினார்கள். அதைப் பாழாக்கிவிட்டார்கள். பாழாய்க் கிடக்கிற அது என்னைநோக்கிப் புலம்புகிறது, தேசமெல்லாம் பாழாயிற்று. ஒருவனும் அதை மனதிலே வைக்கிறதில்லை. (எரேமியா 12:10-11)**

அக்கறையற்ற தலைவர்களால் அக்கறையற்ற சீடர்களே உருவாவார்கள். அறுவடையின் தரிசனம் எமது ஆவிக்குரிய தலைவர்களால் தொடர்பாடல் செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது தனித்துவிடப்பட்டதாக இருக்கும். இதை “ஒருவனும் மனதிலே வைக்கிறதில்லை”

### சுய முயற்சி:

சுய முயற்சியினால் ஆவிக்குரிய அறுவடையை முன்வைக்க உங்களால் முடியாது. பின்வரும் வசனத்தில் சுய முயற்சியின் முடிவை அவதானியுங்கள்:

**பகற்காலத்திலே உன் நாற்றைவளரவும், விடியற்காலத்திலே உன் விதையை முளைக்கவும் பண்ணினாலும், பலனைச் சேர்க்கும் நாளிலே துக்கமும் கடும்வேதனையுமே உங்கள் அறுப்பாயிருக்கும். (ஏசாயா 17:11)**

சுய முயற்சியினால் தேவனது வாஞ்சையான தரிசனத்தை முன்கொணர முடியாது என முதலாம் அதிகாரம் கூறி ஆரம்பிக்கின்றது. அறுவடைக்காக தேவன் கொடுத்த உபாயங்களை பிரயோகித்து ஆவிக்குரிய அறுவடையை தடுக்கும் காரியங்களை நீக்குவதே ஒரே வழியாக இருக்க வேண்டும்.

சுய முயற்சியினால் வரும் அறுவடையின் பலனைக் குறித்து ஆமோஸ் பேசுகிறார். இஸ்ரவேல் தமது சொந்த வழிகளையும் தமது பராக்கிரமசாலிகளையும் நம்பினார்கள். (ஓசியா 10:13) நீங்கள் உங்களது சொந்த வழிகளையும், வழிமுறைகளையும், உங்களது "பராக்கிரமசாலிகளையும்" நம்பி சார்ந்தால் ஆவிக்குரிய அறுவடையில் தோல்வியடைவீர்கள். நீங்கள் தேவனுடைய வழிகளில், அவருடைய வேலையை செய்ய வேண்டும்.

## சபிக்கப்பட்ட இனப்பெருக்க முறை:

மனிதன் பாவம் செய்து விழுந்துபோனபோது பௌதீக உலகத்தின் இனப்பெருக்க முறையை சபித்தார். பெண்கள் வேதனையோடே பிள்ளை பெறுவார்கள். பூமி முற்களையும் குறுக்களையும் பிறப்பிக்கும், பலன் பெற காலமெடுக்கும். (ஆதியாகமம் 3:16-19) இனப்பெருக்க முறைக்கான சாபங்கள் பாவத்தின் விளைவினால் ஏற்பட்டது.

ஆவிக்குரிய உலகில் நீங்கள் பாவத்தில் வாழும்போது வாழ்க்கை செயல் முறையான ஆவிக்குரிய இனப்பெருக்கத்திலும் சாபம் ஏற்படும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் மாத்திரமே பாவத்திலிருந்து மீட்புண்டு, அப்போது சாபம் அகற்றப்படும். பாவத்தின் கீழ் சாபத்துடன் வாழும்போது உங்களால் ஆவிக்குரிய அறுவடையில் ஆசீர்வாதத்தை உரிமையாக்கிக் கொள்ள முடியாது

## சூழ்நிலைகள்:

வாழ்வின் சூழ்நிலைகளும் ஆவிக்குரிய அறுவடையை தடுக்கக்கூடும்:

**சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான், அறுப்பிலே பிச்சைகேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது. (நீதிமொழிகள் 20:4)**

**காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான், மேகங்களை நோக்குகிறவன் அறுக்க மாட்டான். (பிரசங்கி 11:4)**

பௌதீக உலகில் விவசாயி விதைப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் சரியான சூழ்நிலைவரும்வரை காத்திருப்பான். காற்று மேகம் அல்லது குளிர் என்பனவற்றை பொருட்படுத்தாமல் வயலில் இருப்பான்.

நீங்கள் எப்போதும் சென்றிராத ஆவிக்குரிய அறுவடையிலும் சரியான சூழ்நிலை அமையும்வரை காத்திருக்க வேண்டும். வாழ்வின் சூழ்நிலைகள், உங்கள் பிரச்சனைகள், உங்கள் பொருளாதார நிலைமைகள், கல்வியறிவு பற்றாக்குறை என்பனவற்றால் நீங்கள் புறக்கணிக்கப்படலாம்.

## நற்செயல்களின் முயற்சி:

நீங்கள் தேவனுடைய வேலையை செய்யாமல் சுறுசுறுப்பாக நற்செயல்கள் செய்து வாழ்கையை கழிப்பவராக இருக்கலாம். இதையே நாம் நற்செயல்களின் ஆவிக்குரிய முயற்சி என்கின்றோம்.

> **அவர்கள் காற்றை விதைத்து, சூறைக்காற்றை அறுப்பார்கள். விளைச்சல் அவர்களுக்கு இல்லை, கதிர் மாவைக் கொடுக்கமாட்டாது. கொடுத்தாலும் அந்நியர் அதை விழுங்குவார்கள். (ஓசியா 8:7)**

வாழ்க்கைக்கு பிரயோசனமான பல நற்செயல்களுண்டு. நீங்கள் அனுமதிக்கின்றபோது மாத்திரமே மக்கள் உங்களது தாலந்துகளையும் திறமைகளையும் தவறாக பயன்படுத்தக்கூடும்.

ஆவிக்குரிய அறுவடைக்கு நற்செயல்கள் மாத்திரம் போதாது, இயேசு கூறினார்:

> **நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4:34)**

ஆவிக்குரிய அறுவடையில் முக்கியமானது சுறுசுறுப்பாக நற்செயல்களை செய்வதல்ல, தேவனுடைய வேலையைச் செய்வதே முக்கியமானது. உங்களது முயற்சிகள் ஆவிக்குரிய அறுவடையின் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும், அல்லது விதை விதைத்தும் காற்றை அறுப்பதற்கு சமமாக இருக்கும்.

## பூச்சிகளும் நோய்களும்:

பௌதீக உலகில் பூச்சிகளும் நோய்களும் தாவரங்களை தாக்கி அழிப்பதால் அறுவடை நாசமடைகின்றது. வெட்டுக்கிளிகள், வண்டுகள், களைகள் என்பன தாவரத்தின் வெளிப்புறத்தை தாக்கியழிக்கும் பூச்சிகளாகும். தாவரத்தில் ஏற்படும் நோய்கள் வேர்கள் மற்றும் வளர்ச்சியடைவதை நாசமடையச் செய்யும்.

விசுவாசிகளும் ஆவிக்குரிய உலகில் பூச்சிகள் மற்றும் வியாதிகளினால் தாக்கப்படுகின்றனர். வாழ்க்கையின் சூழ்நிலைகளையும், விருப்பங்களையும், சிந்தையையும், உணர்வுகளையும் சாத்தான் தாக்குகின்றான்.

விவசாயிகள் அதை அடையாளங்காணும்போது, கிளைகளை நறுக்கி கனிதர இடமளிக்கின்றனர். கிளைகளை திருத்தி சுத்தம் செய்து நோயின் வளர்ச்சியை தடுப்பார்கள். அவர்கள் இதைச் செய்யக் காரணம் அதிகமான கனி கொடுப்பதற்காகும்.

இது விசுவாசிகளின் வாழ்க்கைக்கும் அவசியமாகும். கனி கொடுப்பதைத்தடுக்கும் ஏராளமான காரியங்கள் அவர்களுக்கு வரலாம். (மாற்கு 7:15) தேவன் இக்காரியங்களைச் செய்து நாம் அதிக கனி கொடுக்கும்படி செய்கின்றார். யோவான் 15ஆம் அதிகாரம் இதைக்குறித்தே சொல்கின்றது.

ஆவிக்குரிய பூச்சிகள் மற்றும் நோய்கள் உண்மையில் சூழ்நிலையில் தங்கியிருப்பதில்லை, அவைகள்

மனதின் செயல் முறையிலேயே தங்கியிருக்கின்றது. இந்த பிரச்சனைகள் ஆவிக்குரிய வல்லமையை உள்ளடக்கியுள்ளது.

> **ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்ட லங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12)**

பௌதீக உலகில் சில சமயங்களில் பூச்சிகளையும் வியாதிகளையும் அழிக்க இரசாயன கலவைகள் பாவிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றன. ஆவிக்குரிய உலகில் தேவனது சர்வாயுத வர்க்கம் ஆவிக்குரிய அறுவடையையும் உனது வாழ்க்கையில் பாதுகாக்கும்.

> **ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.**
>
> **சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்,**
>
> **சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்,**
>
> **பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.**
>
> **இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். (எபேசியர் 6:13-17)**

## முறையற்ற அறுவடை:

முறையற்ற அறுவடை பயிரை அழித்துவிடுகின்றது:

> **உழுகிறவன் விதைக்கிறதற்காக நாள்தோறும் உழுகிறதுண்டோ? தன்நிலத்தைக் கொத்தி நாள்தோறும் பரம்படிக்கிறது உண்டோ?**
>
> **அவன் அதை மேலாக நிரவினபின்பு, அததற்கேற்ற இடத்தில் உளுந்தைத் தெளித்து, சீரகத்தைத் தூவி, முதல்தரமான கோதுமையையும் தெரிந்துகொண்ட வாற்கோதுமையையும் கம்பையும் விதைக்கிறான் அல்லவோ?**
>
> **அவனுடைய தேவன் அவனை நன்றாய்ப் போதித்து, அவனை உணர்த்துகிறார்.**

**உளுந்து தூலத்தாலே போ்ரடிக்கப்படுகிறதில்லை. சீரகத்தின்மேல் வண்டிலின் உருளைச் சுற்ற விடப்படுகிறதுமில்லை, உளுந்து கோலினாலும் சீரகம் மிலாற்றினாலும் அடிக்கப்படும்.**

**அப்பத்துக்குத் தானியம் இடிக்கப்படும், இடைவிடாமல் அவன் அதைப் போரடிக்கி-றதில்லை, அவன் தன் வண்டிலின் உருளையால் அதை நசுக்குகிறதுமில்லை, தன் குதிரைகளால் அதை நொறுக்குகிறதுமில்லை. (ஏசாயா 28:24-28)**

பௌதீக உலகில் விதையை நடுவதற்கு முன்னர் நிலத்தை தயார்படுத்துவதற்கு சரியான முறைகள் உள்ளன. பயிர்களை அறுவடை செய்வதற்கும் பல்வேறு முறைகளுண்டு. தடி மற்றும் கம்பி பயன் படுத்தி சீரகத்தை வேறு பிரிப்பர். சோளத்தை வேறுபிரிக்க போரடிக்கும் சக்திவாய்ந்த கருவி பயன் படுத்தப்படும்.

நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கென்று மக்களை அறுவடை செய்கின்றபோது சிலர் இலகுவாக தேவனுடைய அறிவுக்குள் வந்துவிடுவார்கள். மற்றவர்களை ஆதாயப்படுத்த பல முயற்சிகளை எடுக்க வேண்டியேற்றபடும்.

முறையற்ற அறுவடை பயிர்களை அழித்துவிடும். அதிகளவாக பாவிக்கப்படும் சக்தி தாவரங்களை நொறுக்கிவிடும். மிக சிறிதளவான முயற்சியும் அறுவடையை நாசப்படுத்திவிடும். பௌதீக அறுவடைக்கு அவசியமான ஞானத்தை கொடுக்கின்ற தேவன் ஆவிக்குரிய அறுவடைக்கான ஞானத்தையும் கொடுப்பார்.

## விவசாயம் செய்யப்படாத நிலம் (தரிசு நிலம்):

நிலத்தை ஒழுங்காக தயார்படுத்தாவிட்டால், பலனற்ற அறுவடையே கிடைக்கும். விதைக்கின்றவனின் உவமையை வாசிக்கவும். மாற்கு 4:12-20, மத்தேயு 13:1-23, லூக்கா 8:4-15. இந்த உவமைகளில் தேவ-னுடைய வசனமான விதையானது பௌதீக உலகத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளது. விதை மனிதர்களின் இருதயங்களில் விதைக்கப்படுகின்றது.

அனைத்தும் மாறுபடும் விடயங்கள் விதைக்கிறவன், விதை அல்லது முறை அல்ல. மண்ணின் நிலையே அறுவடையை பாதித்துள்ளது. சில நிலங்கள் பயிர் செய்கைபண்ணப்படாமல், ஆவிக்குரிய கற்க-ளாலும், களைகளாலும், உலக செல்வம் கவலைகளாலும், இச்சைகளாலும் நிறைந்துள்ளது. அறுவடை செய்யப்படாத இந்த ஆவிககுரிய நிலங்கள் பாழனவையாகும்.

ஆனாலும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்துள்ளன, இது ஏற்றுக் கொண்ட ஆவிக்குரிய இருதயங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இதன் விளைவு ஏராளமான அறுவடையாகும்.

**வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள். இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார். (மாற்கு 4:20)**

நல்ல விளை நிலத்தில் விதைக்கப்பட்ட விதையாகிய வார்த்தை மிகப்பெரிய அறுவடையைக் கொண்டுவரும்.

சிலர் நற்செய்தியை ஏற்றுக் கொள்கின்றனர், சிலர் எதிர்க்கின்றனர். உங்களுக்கு அறுவடை செய்ய முடியாதிருந்தால், தயார் செய்யப்படாத நிலம் பிரச்சனையாக இருக்கலாம். அது சரியாக தயார் செய்யப்பட வேண்டும். ஓசியா தீர்க்கதரிசி கட்டளையிடுவதாவது:

> **நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள், தயவுக்கொத்ததாய் அறுப்புஅறுங்கள், உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள், கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது.**
>
> **அநியாயத்தை உழுதீர்கள், தீவினையை அறுத்தீர்கள், பொய்யின் கனிகளைப் புசித்தீர்கள், உங்கள் வழியையும் உங்கள் பராக்கிரமசாலிகளின் திரளையும் நம்பினீர்கள். (ஓசியா 10:12-13)**

பயிர் விளையாத நிலம் ஆன்மீக உலகில் அநீதியான தரையை பிரதிபலிக்கின்றது. ஓசியா தேவனுடைய பிள்ளைகளிடம், ஆவிக்குரிய நிலமாகிய உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் பொல்லாப்பை விதைத்த படியால் அக்கிரமத்தை அறுத்தீர்கள் என்றார். துன்மார்க்கம் விதைக்கப்பட்டால் பொல்லாப்பே விளையும்.

**ஆகடியம்:**

> **ஒரு துன்மார்க்கன்.... ஆகடியம் பேசித்திரிகிறான்..... (நீதிமொழிகள் 6:12,14)**

**அநியாயம்:**

> **அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான். (நீதிமொழிகள் 22:8)**
>
> **நான் கண்டிருக்கிறபடி, அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள், அதையே அறுக்கிறார்கள். (யோபு 4:8)**

**மாறுபாடு:**

> **மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான். (நீதிமொழிகள் 16:28)**

**மாம்சம்:**

> **மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.**
>
> **தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான். (கலாத்தியர் 6:7-8)**
>
> **மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,**

**விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,**

**பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. (கலாத்தியர் 5:19-21)**

முறையான ஆவிக்குரிய அறுவடையை பெற்றுக்கொள்ள, நீங்கள் உங்கள் வாழ்க்கையிலுள்ள ஆவிக்குரிய தடைகளை அகற்ற வேண்டும். ஓசியா சொன்னதுபோல "கா்த்தா் வந்து உங்கள்மேல் நீ-தியை வருஷிக்கப்பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது."

## அநீதியான அத்திபாரங்கள்:

பௌதீக உலகில் பலனற்ற அறுவடை இருக்குமானால், தீர்க்கதரிசியாகிய ஆகாய் தேவனுடைய மக்களை அவா்களுடைய வழிகளை சோதித்தறியும்படி கூறுகின்றாா்:

**நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டுவருகிறீர்கள்.... உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்.... அதிகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்-தும், இதோ, கொஞ்சம் கிடைத்தது. (ஆகாய் 1:6,7,9)**

தேவனுடைய மக்கள் அநேக விதைகளை விதைத்தும் கொஞ்சமாகவே அறுவடை செய்தாா்கள். நல்ல அறுவடை வேண்டுமானால் பௌதிக மற்றும் ஆவிக்குரிய உலகை புணரமைக்க வேண்டும் என ஆகாய் அவா்களுக்கு கூறினாா்.

மீள கட்டுவது ஏன் அவசியம்?

பௌதீக உலகில் இஸ்ரவேலா் தமது சொந்த இல்லத்தை கட்டினாா்கள் தேவனுடைய இல்லத்தையோ தாமதமாகவே கட்டினாா்கள். தேவனுடைய கட்டளையை பாா்க்கிலும் தமக்குரியவற்றையே முதலின் கவனித்தனா்.

பௌதீக உலகில் அவா்களது வாழ்வின அடித்தளம் தவறானதாக இருந்தது. அவா்கள் விதைத்தாா்கள் எனினும் ஆவிக்குரிய உலகில் பரிசுத்தமற்ற கைகளினால் அறுவடை செய்தாா்கள்:

**அப்படியே இந்த ஜனங்களும் இந்த ஜாதியாரும் என் சமுகத்தில் இருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களுடைய கைகளின் எல்லாக் கிரியைகளும் அப்படியே இருக்கிறது. அவர்கள் அங்கே கொண்டுவந்து படைக்கிறதும் தீட்டுப்பட்டிருக்கிறது. (ஆகாய் 2:14)**

அசுத்தமான கரங்களினால் செய்யப்படும் வேலையோ அல்லது பலியோ ஏற்றக் கொள்ளப்படமாட்டாது. அடித்தளம் தவறானதாக இருந்தது. தேவன் அஸ்ரவேலரை நோக்கி:

**நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன். நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன? (எரேமியா 2:21)**

அவர்களுடைய தவறான ஆவிக்குரிய அடித்தளத்தினிமித்தம் தேவன் அறுவடையை சபித்தார்:

> **கருக்காயினாலும் விஷப்பனியினாலும் கல்மழையினாலும் உங்களை உங்கள் கைகளின் வேலையிலெல்லாம் அடித்தேன். ஆனாலும் நீங்கள் என்னிடத்தில் மனதைத் திருப்பா-மல்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஆகாய் 2:17)**

அநீதியின் விளைவினால் "நீ செய்வதெல்லாம் தவறானதாகும்"

தேவனுடைய பிள்ளைகள், தேவனுடைய ஆலயத்தின் அத்திபாரத்தை மீளப்போட வேண்டும் என ஆகாய் கூறினார். பௌதீக மற்றும் ஆவிக்குரிய உலகத்தை சரியாக மீளக்கட்டும்போது தேவன் ஆசீர்வதிப்பார் எனவும் கூறினார்:

> **இப்போதும் இதற்கு முந்தினகாலத்தில் நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப்-பாருங்கள். ஒன்பதாம் மாதம் இருபத்துநாலாந்தேதியாகிய இந்நாள்முதல் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்பட்ட அந்நாள்வரைக்கும் சென்ற காலத்தில் நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப்பாருங்கள். களஞ்சியத்தில் இன்னும் விதைத்தானியம் உண்டோ? திராட்சச்செடியும் அத்திமரமும் மாதளஞ்செடியும் ஒலிவமரமும் கனி கொடுக்கவில்லையே, நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லுகிறார் என்றான். (ஆகாய் 2:18-19)**

பௌதீக உலகில் இஸ்ரவேல் மக்கள் தேவாலயத்தைக் கட்ட ஆரம்பித்த நாளிலிருந்து ஆவிக்குரிய உலகின் நீதிபரராகிய தேவன் அவர்களை ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். அதன் பலனாக இரண்டு உல-கிலும் ஏராளமான அறுவடை இருந்தது.

உங்கள் வாழ்க்கையில் நீதியை அத்திபாரமாகபோடும் நாளிலிருந்து தேவன் உங்களை ஆசீர்வதிக்க ஆரம்பிப்பார். உங்கள் வாழ்க்கையின் சகல பகுதிகளிலும் ஏராளமான அறுவடையை காண்பீர்கள்.

சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் "விசுவாசத்தின் அத்திபாரங்கள்" என்ற பாடவிதானம், கிறிஸ்தவ வாழ்க்கையின் இந்த முக்கியமான ஆவிக்குரிய அத்திபாரங்களைக் குறித்த தகவல்களை வழங்குகின்றது.

இதை இந்த பாடத்தில் உள்ளடக்க முடியாதபோதும், ஆவிக்குரிய அறுவடையை பாதிக்கும் அறுவடையின் அடிப்படைக் கொள்கைகள் இணைக்கப்பட்டுள்ளது. சரியான அத்திபாரம் ஏராளமான அறுவடையைக் கொண்டு வரும்.

**கற்பாறையில் கட்டினால் அது அசையாது:**

> **ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான். பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக் கூடாமற்போயிற்று. ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. (லூக்கா 6:48)**

**இயேசுவே கற்பாறை:**

**வேறொரு கன்மலையும் இல்லையே, ஒருவனையும் அறியேன். (ஏசாயா 44:8)**

**அத்திபாரம் நீதியின் அடித்தளத்தில் உள்ளது:**

**நீதிமானோ நித்திய அஸ்திபாரமுள்ளவன். (நீதிமொழிகள் 10:25)**

**அது ஓர் சிறந்த அத்திபாரம்:**

**நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு. (1 தீமோத்தேயு 6:19)**

**அது நித்தியமானது:**

**நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு. (1 தீமொத்தேயு 6:19)**

**அது தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் உள்ளது:**

**ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது. (2 தீமோத்தேயு 2:19)**

**அத்திபாரம் இரண்டு கொள்கைகளில் நிற்கின்றது:**

**ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது. கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது. (1 தீமோத்தேயு 2:19)**

அத்திபாரம் கொண்டிருக்கும் இரண்டு கொள்கைகள்:

1. மீட்கப்பட்ட மனிதர் ------------- தேவன் தன்னுடையவர்களை அறிவார்.
2. மீட்கப்பட்ட வாழ்வை வாழ்வோர் -------- தேவனுடைய நாமத்தை தரித்தவர்கள் தமது அக்கிரமத்தை கைவிட்டு தூரமாய் நிற்க வேண்டும்.

இந்த ஆவிக்குரிய அறுவடைக்கான சரியான அத்திபாரம்.

## சொற்பமான வேலையாட்கள்:

அறுவடை நிலத்தில் வேலையாட்கள் சொற்பமாக இருந்தால் பலனற்ற அறுவடையே இருக்கும். அறுவடைக்கு முன்னர் பயிர் வாடிவிடக்கூடாது. இயேசு சொன்னார்:

**அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்,**

**ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். (லூக்கா 10:2)**

## பலாபலன்:

ஆவிக்குரிய உலகில் அறுவடையை தடுக்க பல விடயங்களுண்டு:

**வயல்வெளி பாழாயிற்று, பூமி துக்கங்கொண்டாடுகிறது, விளைச்சல் அழிக்கப்பட்டது, புது திராட்சரசம் வற்றிப்போயிற்று, எண்ணெய் மாண்டுபோயிற்று.**

**பயிரிடுங் குடிகளே, வெட்கப்படுங்கள், கோதுமையும் வாற்கோதுமையும் இல்லாமற் போயிற்று, திராட்சரசத்தோட்டக்காரரே, அலறுங்கள், வயல்வெளியின் அறுப்பு அழிந்து போயிற்று.**

**திராட்சச்செடி வதங்கி, அத்திமரம் சாரமற்றுப்போகிறது. மாதளை, பேரீச்சம், கிச்சிலி முதலிய வெளியின் செடிகள் எல்லாம் வாடிப்போயின. சந்தோஷம் மனுபுத்திரரைவிட்டு ஒழிந்துபோயிற்று. (யோவேல் 1:10-12)**

பௌதீக உலகில் பலனற்ற அறுவடையின் பலன் துக்கமாகும்....

**பயிர்வெளியிலிருந்து சந்தோஷமும் களிப்பும் அற்றுப்போயின. திராட்சத்தோட்டங்களில் பாடலுமில்லை ஆர்ப்பரிப்புமில்லை. ஆலையில் இரசத்தை மிதிக்கிறவனுமில்லை. சந்தோஷ ஆரவாரத்தை ஓயப்பண்ணினேன். (ஏசாயா 16:10)**

ஆவிக்குரிய உலகில் பலனற்ற அறவடையின் பலனான சந்தோஷமும் மகிழ்ச்சியும் இழக்கப்படும்:

**நம்முடைய கண்களைவிட்டு ஆகாரமும், நம்முடைய தேவனின் ஆலயத்தைவிட்டுச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் நீக்கப்படவில்லையோ? (யோவேல் 1:16)**

நாம் எனது வாழ்க்கையில் ஏன் சந்தோஷமற்றிருக்கிறோம் எனவும், எனது சபைகளில் எவ்வளவாய் பாடினாலும் வெற்றி மறைந்துவிட்டதே என்று கேள்விகளை கேட்டாலும், இதன்கான காரணம் பலனற்ற ஆவிக்குரிய அறுவடையேயாகும்.

## நாம் என்ன செய்ய வேண்டும்?

ஆவிக்குரிய அறுவடையை தடுக்கும் காரணிகளை அடையாளங்கண்டு கொள்ள வேண்டும். ஆவிக்குரிய மகிழ்ச்சிக்கும் வெற்றிக்கும் தடையான காரணங்களையும் அறிய வேண்டும்.

உங்களுடைய வாழ்க்கையில் ஆன்மீக விளைச்சளின் சுழற்சி தலைகீழாக மாறும்போது என்ன செய்ய வேண்டும்?

இஸ்ரவேலில் பலனற்ற அறுவடை இருந்தபோது, யோவேல் தேவனுடைய மக்களிடம் கூறினார்:

**ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள். அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். (யோவேல் 2:12-13)**

அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் ஆவிக்குரிய அறுவடையை கவனிக்காது இருந்தமைக்காக மனந்திரும்பி தேவன் பக்கமாய் திரும்ப வேண்டும். நீங்கள் கனி கொடுக்க தடையாக இருக்கின்ற ஆவிக்குரிய பூச்சிகளையும், வியாதிகளையும் நீக்கும்படி அவரிடத்தில் ஜெபிக்க வேண்டும்.

அவரது உலகளாவிய நோக்கத்தை, சுயமுயற்சியால் பூர்த்தி செய்ய முயன்ற உங்களது தவறிலிருந்து மனந்திரும்புங்கள்.

நீங்கள் சாகுபடி செய்யப்படாத நிலத்தை பண்படுத்தி, உங்கள் வாழ்வின் அத்திபாரத்தை நீதியுடன் மீளக்கட்டியெழுப்புங்கள்.

யோவேல் ஆவிக்குரிய தலைவர்களுக்கு உபவாசிக்க ஆலோசனை வழங்குகின்றார்:

**ஆசாரியர்களே, இரட்டுடுத்திப் புலம்புங்கள். பலிபீடத்தின் பணிவிடைக்காரரே, பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள். விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச் செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். (யோவேல் 1:13-14)**

நீங்கள் கிறிஸ்தவ தலைவராக இருந்தும் உங்கள் சபையில் ஆவிக்குரிய அறுவடை இல்லையென்றால் பின்வரும்படிமுறைகளை கையாளவும்:

- உங்கள் மூப்பரையும் சபை அங்கத்தவர்களையும் கூடுவதற்கு அழைப்புவிடுங்கள்.
- தேவனுக்கு முன்பாக வந்து உபவாசித்து மனந்திரும்புங்கள்.
- பெரிதான ஆவிக்குரிய அறுவடைக்குரிய தரிசனத்தை கொடுக்கும்படி தேவனிடம் கேளுங்கள்.
- தரிசனத்தின் நோக்கம் நிறைவேற ஐக்கியப்படுங்கள்.

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையாயின் "உ" எனவும், பொய்யாயின் "பொ" எனவும் கூற்றுக்கு முன்னால் கோடிட்ட இடத்தில் எழுதவும்.

அ. .................... "ஆனால் - ஏனென்றால்" என்ற கொள்கைக்கு உபாகமம் 28 ஓர் உதாரணமாகும்.

ஆ. .................... சாத்தான் ஆவிக்குரிய அறுவடையைக் குறித்து ஆர்வம் காட்டுவதில்லை.

இ. .................... சுயமுயற்சி ஆவிக்குரிய அறுவடைக்கு மிக முக்கியமானது.

ஈ. .................... ஆவிக்குரியரீதியில் விதைக்கு முன்னர் நீங்கள் சூழ்நிலைகளை அவதானிக்க வேண்டும்.

உ. .................... நற்காரியங்களை செய்வது ஆவிக்குரிய அறுவடையை முன்னெடுக்க போதுமான-தல்ல.

ஊ. .................... உங்களுடைய பிரச்சனைகள் மிக மோசமான நிலையிலிருக்கும்போது, ஆவிக்குரிய வல்லமைகள் அதன் பிண்ணனியில் இருக்கின்றது.

எ. .................... நற்காரியங்கள் பரிசுத்தமற்ற கரங்களால் செய்யபடும்போது அவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. நாம் எவ்விதமான துன்மார்க்கமான காரியங்களை விதைக்கின்றபோது, அக்கிரமான ஆவிக்குரிய அறுவடையை பெறுவோம்?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. இயேசு கிறிஸ்துவை அத்திபாரமாக கொண்ட இரண்டு கொள்கைகள் யாவை?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. பலனற்ற ஆவிக்குரிய அறுவடைக்கான ஒரு வேதவசனத்தை குறிப்பிடுக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. தலைகீழான பலனற்ற ஆவிக்குரிய அறுவடையை கொண்டுவரும் விதைப்பிற்கான ஒரு வேதவசனத்தை குறிப்பிடுக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

7. இந்த அதிகாரத்தில் கற்றுக் கொண்ட, அறுவடையை தடுக்கும் காரியங்களை பட்டியலிடுக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

பரிதாபத்திற்குரிய ஆவிக்குரிய அறுவடைக்கான காரணங்களை கண்டறிய பினவரும் வசனங்களை ஆராயவும்.

### பழைய ஏற்பாடு

லேவியராகமம் 19:19
உபாகமம் 22:9,28
யோபு 4:8
சங்கீதம் 105
நீதிமொழிகள் 6:12,14,19, 10:5, 16:28, 20:4, 22:8, 24:30
பிரசங்கி 11:4,
உன்னதபாட்டு 2:15
ஏசாயா 16:10, 17:10-11, 28:24-28, 32:9-20
எரேமியா 2:5:17-19, 8:13-14, 12:10-11
ஓசியா 8:7, 10:12-13
யோவேல் 1
ஆமோஸ் 4,5
மீகா 6
ஆகாய் 1

### புதிய ஏற்பாடு

மத்தேயு 13:1-23
மாற்கு 4:2-20
லூக்கா 8:4-15, 10:2, 22:31
2 கொரிந்தியர் 9:6
கலாத்தியர் 6:7-8
யாக்கோபு 5:4

### அதிகாரம் ஆறு

# ஆவிக்குரிய அறுவடையின் உபாயங்கள்

# பகுதி - 1

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

□ ஏராளமான ஆவிக்குரிய அறுவடையை தருகின்ற வேதாகம உபாயங்களை பயன்படுத்த முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.**
>
> **அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான். ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான். (சங்கீதம் 126:5-6)**

## அறிமுகம்

முந்தைய அதிகாரத்தில் ஆவிக்குரிய அறுவடையை தடுக்கும் விடயங்களை அடையாளங்கண்டோம். இந்த அதிகாரத்தில் ஏராளமான ஆவிக்குரிய அறுவடையை தரும் உபாயங்களைபற்றி விபரமாக கற்போம்.

ஒரு குறிப்பிட்ட இலக்கையடையும் பொருட்டு பின்பற்ற வேண்டியதாக உபாயத்தின் கொள்கைகள், முறைகள், திட்டங்கள் உள்ளன. அவைகள் தேவனுடைய வார்த்தையில் ஆவிக்குரிய சத்தியத்தை வெளிப்படுத்தும் இயற்கை சமாந்தர கொள்கைகளாக இருக்கின்றன.

## அறுவடையின் உபாயங்கள்

இங்கே அறுவடையின் உபாயங்கள் காணப்படுகின்றன:

### ஒவ்வொரு தாவரத்திற்கும் இனப்பெருக்க திறன் இருக்கின்றது:

பௌதீக உலகை தேவன் சிருஷ்டித்தபோது ஒவ்வொரு தாவரத்தையும் இனப்பெருக்க திறன் கொண்ட-தாக படைத்தார்:

> **அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்: அது**

**அப்படியே ஆயிற்று. (ஆதியாகமம் 1:11)**

பௌதீக உலகிலுள்ள ஒவ்வொரு தாவரத்திற்கும் இனப்பெருக்க திறன் இருப்பதுபோலவே, ஒவ்வொரு விசுவாசிக்கும் ஆவிக்குரிய இனப்பெருக்க திறன் இருக்கின்றது. உங்களால் இந்த ஆவிக்குரிய மீள் இனப்பெருக்கம் சாத்தியமாகும். ஆவிக்குரிய அறுவடைக்கு பெரிதாக ஆவிக்குரிய விடயங்களை அறிந்திருக்க வேண்டும் என்பதும் அவசியமில்லை. இந்த சத்தியத்தை இயேசு கிறிஸ்துவின் உவமை விளக்குகின்றது:

**பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து,**

**இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்குத் தெரியாதவிதமாய், விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.**

**பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான் என்றார். (மாற்கு 4:26,27,29)**

மனிதர்களுடைய இருதயங்களில் விதையாகிய தேவனுடைய வார்த்தையின் வளர்ச்சிக்காக இறையியலை புரிந்து கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. ஆழமான இறையியல் சத்தியங்களை புரிந்திருக்க வேண்டும் என நீங்கள் கேட்டக் கொள்ளப்பட மாட்டீர்கள்.

ஆவிக்குரிய அறுவடையின் சுழற்சியில் நீங்கள் பங்கு கொள்வதே மிக அவசியமாக இருக்கின்றது.

## அறுவடை செய்வதற்கு விதைப்பது அவசியம்:

பௌதீக உலகில் பயிரை அறுவடை செய்ய வேண்டுமானால் விதையை விதைக்க வேண்டும். ஆவிக்கு-ரிய உலகிலும் அறுவடையை பெறும் பொருட்டு விதைக்க வேண்டும். விதைப்பதற்கான ஆதாரங்களை தேவன் வழங்கியுள்ளார்:

**விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார். (2 கொரிந்தியர் 9:10)**

தேவன் உங்களது தாலந்துகளையும், திறமைகளையும் பெருக்கிக் கொள்ளும்படிக்கு செய்துள்ளார்.

உங்களது பொருளாதாரத்தை தேவன் பெருக்கும்படிக்கு அவரது பணியில் அதை முதலீடு செய்யலாம். நீங்கள் சொத்துக்களை குவித்துக் கொண்டிருக்கும்போது அவர் அதை பெருக்க மாட்டார். நீங்கள் மீண்டும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கென்று முதலீடு செய்யும்போது ஆசீர்வாதம் கிடைக்கும்.

## நீங்கள் விதைத்த அதே பருவகாலத்தில் அறுவடை செய்ய மாட்டீர்கள்:

ஆதியிலேயே தேவன் பௌதீக உலகத்தில் பருவகால கொள்கைகளை ஸ்தாபித்தார்:

**பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரி காலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை. (ஆதியாகமம் 8:22)**

அறுவடையின் பொருட்டு விதைத்தல் அவசியம்., ஆனாலும் விதைத்த அதே பருவகாலத்தில் அறுவடை

வருவதில்லை. சிலர் ஆவிக்குரிய தரிசனத்தை பெற்றப்பின்னர் அதன் கொள்கையை புரிந்து கொள்ளாத படியால் அதைரியமடைகின்றனர்.

மக்களின் இருதயங்களில் வார்த்தையை விதைக்க இதுதான் நேரமாக இருக்கின்றபோதும், வார்த்தை துளிர்விடும்வரை காத்திருக்க வேண்டும். அறுவடை செய்ய நேரமுண்டு. நீங்கள் விதைத்த அதே பருவத்திலேயே அறுவடை செய்ய முடியாது.

முதலாம் சங்கீதம் விசுவாசிகளின் வாழ்வின் செயல்முறைபற்றி பேசுகின்றது:

> **அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலை-யுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங்கீதம் 1:3)**

வாழ்க்கையில் பயனுள்ள பருவ காலங்கள் இருப்பதைப்போன்றே பயனற்றுத்தோன்றும் காலங்க-ளுமுண்டு. நிலத்தை பண்படுத்தவும், விதைக்கவும், அறுவடை செய்யவும் காலங்களுண்டு. ஆனாலும் பயனற்ற பருவகாலங்களிலும் அறுவடையைக் கொண்டுவருவது அவசியமாகும்.

அறுவடை செய்ய ஒரு முக்கியமான நேரக் கொள்கை உள்ளது. பயிர் வளரும்வரையும், விருத்-தியடையும்வரையும் நீங்கள் பொறுமையாக காத்திருக்க வேண்டும். பயிர் அழிந்துவிடும் முன்னதாகவே உடனடியாக செயல்பட்டு அறுவடை செய்ய வேண்டும்:

> **பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான் என்றார். (மாற்கு 4:29)**

சுருக்கமாக கூறினால்... அங்கே

> **நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு. (பிரசங்கி 3:2)**

## விதைப்பதையே அறுப்பீர்கள்:

பௌதீக உலகில் விதைகள் தங்கள் சொந்த இனத்தையே இனப்பெருக்கம் செய்யும். நீங்கள் ஆப்பிள் விதைகளை விதைத்தால் ஆப்பிளையே அறுவடை செய்வீர்கள். ஆவி உலகத்திலும் இதே சத்தியமே உண்டு:

> **மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். (கலாத்தியர் 6:7)**

மாம்சத்திற்கு என்று விதைத்தால் ஊழலை அறுப்பீர்கள், நீதிக்கென்று விதைத்தால் நல்லவற்றை அறுப்பீர்கள்.

## நீங்கள் சூழ்நிலைகளை பொருட்படுத்தாமல் விதைக்க வேண்டும்:

அறுவடையின் தரிசனத்தில் சூழ்நிலைகள் ஒருபோதும் ஒரு பகுதியாக மாறிவிடாது. பலவிதமான சூழ்நிலைகளான குளிர், காற்று, மேகம் என்றவற்றையெல்லாம் தோற்கடித்துதான் ஒரு விவசாயி வேலை பார்ப்பான்:

காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான். (பிரசங்கி 11:4)

உங்கள் வாழ்க்கையில் ஆவிக்குரிய அறுவடையின் முக்கிய உபாயம் என்னவெனில் சூழ்நிலையை பொருட்படுத்தாமல் விதைக்க வேண்டும்:

**என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும். ஆனாலும் காடு அழிய கல்மழை பெய்யும், அந்த நகரம் மகா தாழ்வாய்த்தாழ்ந்துபோம். மாடுகளையும் கழுதைகளையும் நடத்திக் கொண்டுபோய், நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள். (ஏசாயா 32:20)**

வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் நீங்கள் தண்ணீரண்டையிலேயே விதைக்க வேண்டும். ஆறுகள் பெருக்கெடுத்து ஓடும் கடினமான சூழ்நிலைகளிலும், நீங்கள் விதைப்பை தொடரவே வேண்டும். இது ஏராளமான அறுவடையைக் கொண்டு வரும் என தேவன் வாக்களித்துள்ளார்.

## நீங்கள் விதைக்கிற அளவிற்கு தக்கதாக அறுவடை இருக்கும்:

**பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். (2 கொரிந்தியர் 9:6)**

இக்கொள்கை உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் ஒவ்வொரு பகுதிக்கும் பொருத்தமானது. உங்கள் நேரத்தை, தாலந்துகளை, பொருளாதாரத்தை தேவனுடைய வேலைக்காக சிறிதளவு கொடுப்பீர்கள் என்றால் அறுவடையும் சிறிதளவாகவே இருக்கும். நீங்கள் உதாரணத்துவமாக விதைத்தால் அதிகமாக அறுப்பீர்கள். பல்வேறு நிலைகளிலுள்ள ஆவிக்குரிய அறுவடையைப்பற்றி யோவான் 15 விபரிக்கின்றது. நீங்களும் இதை முன்னெடுக்கலாம்.

- கனி: யோவான் 15:2
- அதிக கனி: யோவான் 15:2
- மேலதிகமான கனி: யோவான் 15:4
- நிலையான கனி: யோவான் 15:16

நீங்கள் நிலையான அதிக கனிகளை கொடுக்க வேண்டும் என்பதே தேவனுடைய வாஞ்சையாகும்.

நீங்கள் நற்கனிகளை உருவாக்கும்படியாக பேதுரு பயனுள்ள சில குணாதிசயங்களை அடையாளப் படுத்துகிறார்:

**இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்,**

**ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும்,**

**தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.**

**இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. (2 பேதுரு 1:5-8)**

இக்குணங்களை நீங்கள் அபிவிருத்தி செய்யாவிட்டால் நீங்கள் ஆவிக்குரிய தரிசனத்தை பெற மாட்டீர்கள் என பேதுரு எச்சரிக்கின்றார்:

> **இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப் பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான். (2 பேதுரு 1:9)**

## நீங்கள் அறுவடை செய்ய முடியாத இடத்தில் விதைக்க முடியாது மற்றும் விதைக்காத இடத்திலும் அறுவடை செய்ய முடியாது:

வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசித்து நீங்கள் நடாத திராட்சைத்தோட்டங்களின் கனியை புசிப்பீர்கள் என்று தேவன் இஸ்ரவேலருக்கு வாக்களித்தார். அவர்கள் விதைக்காதவற்றை அறுவடை செய்தார்கள்.

இதே உண்மையே ஆவிக்குரிய உலகிலுமுண்டு. மற்றவர்கள் விதைத்ததை நீங்கள் அறுப்பீர்கள்.

> **விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதி-னாலே விளங்குகிறது:**
>
> **நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார். (யோவான் 4:37-38)**

உலக அறுவடை வயல் நிலங்களில் பல நூற்றாண்டுகளாக விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையை விதைத்தார்கள். தேவனுடைய வருகை சமீபமாக இருக்கிறபடியால் அவர் வரும்போது உலக நாடுக-ளிலிருந்து பெருந்திரளான அறவடையை கொண்டு வருவார். நீங்கள் விதைக்காத இடத்தில் அறுக்கும்படி அவர்களுடைய வேலைக்குள் பிரவேசியுங்கள்.

விதைப்பின் பணியில் நீங்களும் பங்குதாரராக இருந்து அறுவடையை விடாதிருங்கள்.

இதைக் குறித்து பவுல் கூறுகின்றார்:

> **நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார்.**
>
> **அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்.**
>
> **மேலும் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள். அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப்பெறுவான்.**
>
> **நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம். நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள். (1 கொரிந்தியர் 3:6-9)**

## நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால் அறுவடை செய்வீர்கள்:

> **நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக, நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம் (கலாத்தியர் 6:9)**

**இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். (யாக்கோபு 5:7)**

நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால் தேவன் வாக்குப்பண்ணின அறுவடையை பெறுவீர்கள். அவர் உங்களுக்கு கொடுத்த வேலையை சோர்வடையாமல் செய்யுங்கள்.

## இனப்பெருக்கம் செய்வதற்கு விதை இறக்க வேண்டும்:

ஒரு விதை இறந்ததைப்போல் தெரியும். பச்சை இலைகள், இளந்தளிர்கள், கிளைகள் என்பன இருக்காது. இவைகள் வரும்போருட்டு விதை புதைக்கப்பட வேண்டும்.

இது ஆவிக்குரிய சத்தியத்திற்கிணையான இயற்கை சத்தியமாகும். ஆவிக்குரிய ஜீவியம் பலி மரணத்தில் தங்கியுள்ளது:

**புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. (1 கொரிந்தியர் 15:36)**

இக்காரியத்தை முன்னெடுக்க இயேசு சிலுவையில் மரிக்க வேண்டியது அவசியமாக இருந்தது. அவர் மரணத்திற்கு முகங்கொடுத்தபோது அவரது ஊழியம் முடிந்ததைப் போன்றிருந்தது.

ஏனென்றால் அது அவரது விதைப்பின் நேரம். நிலத்தில் விழுந்த கோதுமை மணியைப்போன்று அவர் மரித்து விதைக்கப்பட்டாலும் ஏராளமான அறுவடை விளைந்தது. அவருடைய மரணத்தின் பலனாக மில்லியன் கணக்கான மக்களுக்கு ஜீவன் கிடைத்தது.

ஆவிக்குரிய வாழக்கைக்கு பலியிடல் அவசியமாகும். பாவத்திற்கு மரிக்க வேண்டும். உலக ஆசைகள் இன்பத்திற்கும் மரிக்க வேண்டும்.

ஜிம் எலியட். ஈக்குவாடொரிலுள்ள அகுவா இந்தியர்களை நற்செய்தி அறிவித்து ஆதாயம் செய்ய சென்றபோது கொலை செய்யப்பட்டார், எனினும் அவர் தனது நாட்குறிப்பில் எழுதியிருந்தார் “அவர் முட்டாள் அல்ல, அவர் தந்தவற்றில் இழக்காமல் ஒன்றையும் வைத்திருக்க முடியாது”.

இயற்கை வாழ்வில் மரணம் முரண்பாடானதாக இருந்தாலும், அந்த மரணமே விசுவாசிக்கு நித்திய வாழ்க்கைக்கு கொண்டு செல்கின்றது. உண்மையான மரணத்தைப் பொன்று மதிப்பானது ஏதுமே இல்லை. நீங்கள் மரித்தாலும் வாழ்ந்தாலும் மதிப்புண்டு என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

சில சமயங்களில் கண்களுக்கு புலனாகாத அறுவடையின் சான்றுகள் இருக்கும். தரிசனத்திற்காக உங்கள் வாழ்வை இழந்ததுபோல தோன்றலாம்

ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்:

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். (யோவான் 12:24)**

இயேசு வீணாக மரிக்கவில்லை. அவரது மரணத்தின் மூலம் ஜீவன் வந்தது. அவரது மரணத்தின் மூலம், மற்றவர்கள் முன்வந்து நற்செய்தியை அகுவா இந்தியர்களுக்கு கொடுத்து இரட்சிப்புக்குள் வழிநடத்தினார்கள்.

விதை மரிக்கவில்லை. தேவனுடைய வல்லமை அதனுள் உண்டு. புதியதை பிறப்பிக்க அது இறக்க வேண்டும். இந்த முறையில் உங்கள் வாழ்க்கையை முதலீட செய்யும்படிக்கு ஓசியா பேசுகின்றார்.

> **நான் அவளை எனக்கென்று பூமியிலே விதைத்து, இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்கு-வேன். என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன். அவர்கள் என் தேவனே என்பார்கள் என்றார். (ஓசியா 2:23)**

இந்த வசனம் ஆவிக்குரிய அறுவடை உபாயங்களை செயல்படுத்தும் நோக்கத்தை சுருக்கமாக கொண்டுள்ளது. நீங்கள் வேலையாட்கள் என்றபடியால் தேவன் நீங்கள் என்னுடைய ஜனமல்ல என்று கூறாமல், “நீ என் ஜனமென்று சொல்லுவேன்; அவர்கள் என் தேவனே என்பார்கள்” என்றார்.

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. “உபாயங்களை” வரையறுக்கவும்.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இந்த அதிகாரத்தில் விவாதிக்கப்பட்ட ஆவிக்குரிய அறுவடையின் ஒன்பது உபாயங்களையும் பட்டியலிடுக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

## திராட்சைத் தோட்ட உவமை

வேதாகமத்தில் திராட்சை தோட்டம் தொடர்பான உவமைகள் அநேகமுண்டு, அவைகள் ஆவிக்குரிய அறுவடையைக் குறித்து அதிகளவான தகவல்களைத்தருகின்றன. விதைப்பவனின் உவமை, (மத்தேயு 13, மாற்கு 4, லூக்கா 8) இப்பாடத்தில் அடங்குகிறது. மேலதிக படிப்பினைக் காக ஏனைய திராட்ச தோட்ட உவமைகளின் பட்டியல் கீழே தரப்படுகின்றது.

**கோடை பழக்கூடை: ஆமோஸ் 8:1-2**

எவ்விதமான இயற்கை உதாரணத்தை தேவன் ஆமோசுக்கு காண்பித்தார்?-------------------------------------------

இந்த உதாரணத்தின் அர்த்தம் என்ன?--------------------------------------------------------------------------------------------------

தேவனுடைய வசனத்திற்கு கீழ்ப்படியாது இஸ்ரவேலர் இருந்தால் அவர்கள்மேல் இறுதி நியாயத்

தீர்ப்பாக என்னவிதமான பெரிதான பஞ்சத்தை அனுப்புவார்? (வசனம் 11-12)-------------------------------------------

**தேவனது திராட்சை தோட்டம்: ஏசாயா 5:1-7**

இவ்வுவமை இஸ்ரவேல் நாட்டை குறிக்கின்றது. இஸரவேலை தேவன் ஆவி உலகின் மீள் உருவாக் கத்திற்காகவும் அந்நாடுகளை ஆசீர்வதிக்கவும் தேவன் நாட்டினார். ஆனால் இஸ்ரவேல் கனி கொடுக்கவில்லை. எவ்விதமான ஆவிக்குரிய அறுவடை இஸ்ரவேலில் இருந்தது? (வசனம் 4)

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

திராட்சை தோட்டத்தின் தீர்ப்பு என்ன? (வசனம் 5-6)

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

வசனம் 7 இருக்கின்ற முரண்பாடு யாது? தேவன் ------------------------------------------------------------------------------

ஆனாலும் ------------------------------------------------------------ கண்டு பிடித்தார்.

அவர் ------------------------------------------------------------ எதிர்பார்த்தார், ஆனால் -------------------------------------------
கண்டு பிடித்தார் (அநீதி)

இஸ்ரவேலின் இந்த ஆவிக்குரிய நிலைக்கான காரணம் யாது? (வசனம் 13,20)

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**தேவனது திராட்சை தோட்டம்: மத்தேயு 21:28-41, மாற்கு 12:1-9, லூக்கா 20:9-16**

இந்த புதிய ஏற்பாட்டு உவமைகளும் திராட்ச தோட்டத்தைப்பற்றி குறிப்பிடுகின்றன. தேவன் இஸ்ரவேலுக்கு

தனது தீர்க்கதரிசிகளை அனுப்பியபோதும் அவர்களை ஏற்றுக் கொள்ளாதிருந்தமையும் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடைசியாக தேவன் தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பியபோதும், அவர்கள் அவரையும் நிராகரித்தனர்.

ஊழியக்காரர்கள் தேவனுடைய தோட்டக்காரருக்கு (இஸ்ரவேல்) என்ன பதில் அனுப்பினர்?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

குமாரனுக்கு அவர்களது பதில் என்ன? -----------------------------------------------------------------------------------------------

தேவன் அனுப்பிய நியாயத்தீர்ப்பு என்ன? ---------------------------------------------------------------------------------------------

**அத்திமரம்: லூக்கா 13:6-9**

திராட்சை தொட்ட உரிமையாளர் அத்திப்பழங்களை சேகரிக்க வந்தபோது, அவர் எதைக்கண்டார்?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

அவர் என்ன செய்ய வேண்டும்? -------------------------------------------------------------------------------------------------------

திராட்சை தோட்ட காப்பாளரின் பதில் என்ன? ---------------------------------------------------------------------------------------

அத்திமரம் இஸ்ரவேலை பிரதிபலிக்கின்றது. இந்த உவமையின் அர்த்தம் என்னவென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## திராட்சை தோட்டத்திலுள்ள தொழிலாளர்கள். மத்தேயு 20:1-16

ஆரம்ப நாளில் தொழிலாளரின் ஊதியம் எவ்வளவு? --------------------------------------------------------------------------

தாமதமாக நியமிக்கப்படும் தொழிலாளரின் ஊதியம் எவ்வளவு? ------------------------------------------------------

தொழிலாளர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனை என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இயேசுவின் இந்த உவமை எடுத்துக் காட்டும் கொள்கைகள் என்ன? ( வசனம் 16)

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## இரண்டு குமாரர்கள்: மத்தேயு 21:28-31

தகப்பனார் தனது இரண்டு குமாரரையும் தோட்டத்தில் வேலை செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

மூத்த மகனின் பதில் என்ன? ------------------------------------------------------------------------------------------------------------

மூத்த மகன் உண்மையில் செய்தது யாது? ----------------------------------------------------------------------------------

இரண்டாவது மகனின் பதில் என்ன? ------------------------------------------------------------------------------------------------

இரண்டாவது  மகன் உண்மையில் செய்தது யாது? ----------------------------------------------------------------------

அவ் உவமைக்கூடாக இயேசு கற்றுதரும் கொள்கை என்ன? -----------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**அறுவடை: மத்தேயு 9:37-38, லூக்கா 10:2, யொவான் 4:34-38, 12:24**

பல சந்தர்ப்பங்களில் ஆவிக்குரிய சத்தியங்களை விளக்கப்படுத்துவதற்காக இயேசு இயற்கையான உதாரணங்களை பாவித்துள்ளார். அறுவடை துறையின் மிகப்பெரிய தேவை என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இத்தேவைக்காக நாம் என்ன செய்ய வேண்டிய ஒரு காரியம் என்ன? (மத்தேயு 9:38)

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

யோவான் 12:24ல் இயேசு கற்பித்த அறுவடையின கொள்கை என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

யோவான் 4:36-38 ஆம் வசனங்களில் விதைக்கிறவர்கள் மற்றும் அறுக்கிறவர்கள் பற்றி நாம் கற்றுக் கொள்ளும் சத்தியம் யாது?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**களைகள் : மத்தேயு 13:24-30**

எவ்விதமான விதை வயலில் விதைக்கப்பட்டது? ---------------------------------------------------------------------------

தொழிலாளர்கள் நித்திரையாக இருக்கும்போது நடந்தது என்ன? ----------------------------------------------------

விதைக்கப்படுகின்ற வேளையில் வருகின்ற களைகளின் பிரச்சனைக்கு தீர்வு என்ன? (வசனம்30)

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

உரிமையாளர் எடுத்த தீர்வு என்ன?  (வசனம் 29)

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

கோதுமையிலிருந்து களையை பிரிப்பதற்கான எமது உத்தரவாதம் என்ன?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**கடுகு விதை: மத்தேயு 13:31-32, மாற்கு 4:31-32, லூக்கா 13:18-19**

கடுகு விதை மற்ற விதைகளைப் பார்க்கிலும் ---------------------------------------------------------------------- உள்ளது.

வளர்ந்த பின்னர் தாவரம் எவ்வகையை சார்த்தது? ----------------------------------------------------------------------------

கடுகு விதையின் உவமைக் கூடாக இயேசு எவ்விதமான ஆவிக்குரிய சத்தியத்தை விபரிக்கின்றார்?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மத்தேயு 17:20ல் இயேசு கடுகு விதையை விசுவாசத்திற்கு உதாரணமாக பாவிக்கின்றார். சிறிதளவான விசுவாசத்தின் விளைவுகள் என்ன?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## அதிகாரம் ஏழு

# ஆவிக்குரிய அறுவடையின் உபாயங்கள்

# பகுதி - 2

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- தாவரத்தின் இயற்கை வளர்ச்சிக்கு சமாந்தரமான ஆவிக்குரிய வளர்ச்சியை விளக்கவும்,
- ஆவிக்குரிய அறுவடையில் இந்த சமாந்தரமான உபாயங்களை பிரயோகிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **பூமி தன் பூண்டுகளை விளைவிப்பதுபோலவும், தோட்டம் தன்னில் விதைக்கப்பட்டவை-களை முளைவிப்பதுபோலவும், கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார். (ஏசாயா 61:11)**

## அறிமுகம்

இந்த அதிகாரம் ஆவிக்குரிய அறுவடைக்கான உபாயங்கள் தொடர்பான படிப்பை தொடர்கின்றது. இது அறுவடையின் இறுதியான கொள்ளையோடு கவனஞ்செலுத்தும்: குறித்த வெளியக காரணிகளே விதையின் அபிவிருத்திக்கு செல்வாக்கு செலுத்தும்.

இயற்கையான உலகத்திலே விதைகளின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் குறித்த காரணிகளே தேவைப்படும். இந்த இயற்கையான காரணிகளானது ஆவிக்குரிய அறுவடையை கொண்டுவருவதற்கான தேவனுடைய வார்த்தை என்னும் விதை அபிவிருத்தியின் ஆவிக்குரிய காரணிகளோடு சமாந்திரமாய் உள்ளது.

## வளர்ச்சிக்கான காரணிகள்

**ஜீவன்:**

ஜீவன் இல்லாமல் வளர்ச்சி என்பது சாத்தியமற்றது. விதையில் ஜீவன் இருக்கவேண்டும், அல்லது அது முளைக்காது. தேவனுடைய வார்த்தையில் வெளியரங்கமாக தெரியகூடியவர் இயேசுவே. அவர் விதையாக இருக்கின்றார். அவரில் ஜீவன் இருக்கின்றது:

> **அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. (யோவான் 1:4)**

**ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். (யோவான் 5:26)**

நீங்கள் பெருகி உங்களில் அவருடைய ஜீவனின் விதையை நடும்படியாக இயேசு வந்தார்:

**நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)**

அவருடைய ஜீவன் உங்களில் இருக்கின்றது. அவருடைய வார்த்தையென்னும் விதையை நீங்கள் நடும்போது நீங்கள் அறிந்துகொள்வதாவது.....

**மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச்செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,**

**அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். (ஏசாயா 55:10-11)**

## நல்ல மண்:

மாபெரும் அறுவடையை உழாத நிலம் ஏற்படுத்திவிடும் என்பதை இந்த பாடத்தில் நீங்கள் கற்றீர்கள். நல்ல அறுவடைக்கு நல்ல நிலம் அவசியம்:

**வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள். இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார். (மாற்கு 4:20)**

ஆவிக்குரிய உலகில் நீங்கள் அறுவடை செய்யும்போது உங்கள் கவனம் நல்ல நிலத்தின்மீது இருக்க வேண்டும். நீங்கள் நிலத்தை ஆயத்தம்செய்து, வசனம் என்னும் விதையை சரியாக நடவேண்டும். அறுவடை வருவதற்கு இவ்விரண்டும் அவசியமாகும் (ஓசியா 10:12, எரேமியா 4:3).

விதைக்கிறவனின் உவமையின்படி (மாற்கு 4:3-20) அறுவடைக்கு பின்னர் நிலம் மாற்றமடைந்திருக்கும். அறுவடையில் இது மிக முக்கியமான கொள்கையாகும். பலனற்ற தரை புறக்கணிக்கப்படாது.. யாராவது ஒருவர் மீண்டும் அதை பண்படுத்தி விதைத்து அறுவடையாளர்கள் வரும்நேரம் வரும்வரை காத்திருப்பார்கள். (லூக்கா 13:6-9) ஆனால் இந்த இடம் ஆவிக்குரிய படைகள் கவனம் செலுத்த வேண்டிய இடமல்ல. இயேசு ஒருபோதும் அறுவடையாளர்கள் அதிகம் அறுவடை குறைவு எனக் கூறவில்லை. ஆவிக்குரிய உழைப்பாளர்கள் அறுவடையைத்தரும் விளை நிலங்களில் அவதானம் செலுத்து அங்கேயே குவிந்திருப்பார்கள்.

அறுவடையில் நேரம் மிக முக்கியமானது. விதை விதைக்கப்படும்போது அல்லது பயிர் பச்சையாக இருக்கின்றபோது அறுவடையாளர்கள் அவசியமில்லை. சுருக்கமாக கூறினால், நன்கு முற்றியதை அறுவடையைச் செய்ய உத்திகள் உண்டு. இதுவே அடைவடையாளர்களுக்கு அவசியமானது. சகல தொழிலாளர்களும் அறுவடையற்ற, பலனற்ற ஆவிக்குரிய நிலங்களில் வேலைபளுவுடன் காணப்படுகின்றனர், அங்குள்ள வாய்ப்பு எப்போதோ இழக்கப்பட்டுவிட்டது.

**நீர்:**

பௌதீக உலகில் விதை முளைக்க தண்ணீர் அவசியம். தேவன் வாக்குபண்ணியுள்ளார்:

> **தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன். (ஏசாயா 44:3)**

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்கு தண்ணீர் அடையாளமாக இருக்கின்றது:

> **உனது சந்தானத்தின் மேல் எனது ஆவியை ஊற்றுவேன். (ஏசாயா 44:10)**
>
> **வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். (யோவான் 7:38)**

பரிசுத்தாவியாகிய நீர், பாவத்தில் மரித்துள்ள மனிதருடைய இருதயங்களில் தேவனுடைய வார்த்தை வேர் கொள்ள உதவுகின்றது:

> **ஒரு மரத்தைக்குறித்தாவது நம்பிக்கையுண்டு. அது வெட்டிப்போடப்பட்டாலும் திரும்பத் தழைக்கும், அதின் இளங்கிளைகள் துளிர்க்கும்.**
>
> **அதின் வேர் தரையிலே பழையதாகி, அதின் அடிக்கட்டை மண்ணிலே செத்தாலும்,**
>
> **தண்ணீரின் வாசனையினால் அது துளிர்த்து, இளமரம்போலக் கிளைவிடும். (யோபு 14:7-9)**

**ஒளி:**

இது பௌனதீக உலகில் தாவரத்தின் வளர்ச்சியை தூண்டுகின்றது. தேவனுடைய ஒளியான ஆவிக்குரிய அறுவடையின் வளர்ச்சிக்கு பயன்படுகின்றது:

> **அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. (யோவான் 1:4)**
>
> **மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார். (யோவான் 8:12)**

தேவனுடைய ஒளி ஆவிக்குரிய ஜீவனைக் கொடுக்கின்றது.

**காற்று:**

பௌதீக உலகில், தாவரத்தைச் சுற்றிலுமுள்ள காபனீர் ஒக்சைட் அதற்கு முக்கியமானதாகும். தாவரத்தின் வளர்ச்சிக்கு காற்றும் அவசியம். பரிசுத்த வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் காற்றுக்கு ஒப்பிடப்பட்டுள்ளார்:

> **காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிற தென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினாலும் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். (யோவான் 3:8)**

பரிசுத்தாவியானவர் சுவாசித்து தேவ வசனத்திற்கு ஜீவனை வழங்குகின்றமையால், ஆவிக்குரிய வளர்ச்சி ஏற்படுகின்றது.

### இடம்:

விதைக்கிறவன் உவமையில், சில தாவரங்கள் சில இடங்களில் விழுந்து இறந்துவிடுகின்றது:

> **முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான். (மத்தேயு 13:22)**

தேவனுடைய வசனமும் உலகத்தின் காரியங்களினால், ஆவிக்குரிய வளர்ச்சியை தடை செய்கின்றது.

## வேர்களின் அமைப்பு:

தாவரத்திற்கு ஊட்டச்சத்தை தொகுத்தளிக்க வேர்கள் அவசியம். உங்களது ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு இந்த வேரின் அமைப்பு அவசியம் என சங்கீதங்கள் கூறுகின்றன:

> **துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,**
>
> **கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**
>
> **அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங்கீதம் 1:1-3)**

### ஓய்வு:

தாவரங்கள் ஓய்வுற்றிருக்கும் காலத்தை உறங்குகிற காலம் அல்லது செயலற்ற காலம் என அழைப்பார்கள். தாவரத்திற்கு இக்காலமும் அவசியமாகும். விரைவான வளர்ச்சிக்கு முன்னதாக இக்காலம் அவசியம். தாவரம் இறந்ததுபோலிருக்கும். ஆனாலும் இறந்திராது. விதையில் ஜீவன் இருக்கும்.

நீங்கள் எப்போது தேவனுடைய வார்த்தையாகிய விதையை மனிதருடைய வாழ்வில் விதைக்கின்றீர்களோ, அவ்வேளையிலிருந்து அது வளராது இறந்ததுபோலிருக்கும். உங்கள் ஊழியத்தில் தோல்வியை தழுவிவிட்டீர்கள் என்று எண்ணுவீர்கள். ஆனாலும் விதை ஒருபோதும் மரிக்காது.

பௌதீக உலகத்தைப் போலவே, ஆவிக்குரிய அறுவடையிலும் வளர்ச்சிக்கு முன்னதாக உறங்கு நிலை காணப்படும். ஆனாலும் அறுவடைக்கு காத்திரு:

**இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். (யாக்கோபு 5:7)**

## கொடியில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்:

பௌதீக உலகில் கனி கொடுக்கும்படியாக கிளை தாவரத்துடன் இணைந்ததாக இருக்க வேண்டும். தாவரத்திலிருந்து கிளை முறிக்கப்பட்டிருந்தால், அதனால் கனி கொடுக்க முடியாது.

இயேசு கொடியாகவும் நாம் கிளைகளாகவும் இருக்கின்றோம்.. ஆவிக்குரிய கனி கொடுக்க, நீங்கள் அவருடனான உறவை பராமரிக்க் வேண்டும்:

**நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்.**

**என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார். கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார்.**

**நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக் கிறீர்கள்.**

**என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். (யோவான் 15:1-4)**

## கத்தரித்தல்:

பௌதீக உலகில் கனி கொடுத்து மீள் உருவாக்கம் நடை பெறுவதற்காக கத்தரித்தல் இடம் பெறும். ஒரு விவசாயி கனி கொடாத கிளைகளை கத்தரித்து விடுவான். அதாவது வளர்ச்சிக்கு தடையாக உள்ள கிளைகள் கனி கொடுக்கும்படிக்கு அதை கத்தரித்துப் போடுவான்.

கத்தரித்துப் போடுதல் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் அவசியமாகும். ஆவிக்குரிய கத்தரித்தலின்போது தேவன் நம்மை சீரமைக்கின்றார். வேதாகமம் அதனை வேதனை என அழைக்கின்றது. உனது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்ற சகலவற்றையும் தேவன் அகற்றிப் போடுகின்றார். இந்த செயல் முறையால்விக்குரிய கனியை அதிகமாக கொடுப்பீர்கள்.

**என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார். (யோவான் 15:2)**

சிலவேளைகளில் நீங்கள் சுத்திகரிக்கப்பட்டு நன்மைகளை அறுவடைசெய்யாதபோது சாத்தானை குற்றப் படுத்தாமல், உங்கள் வாழ்வின் சூழ்நிலைகளை சரிசெய்யுங்கள். தேவனுடைய சீர்திருத்தலின் நோக்கம் ஓசியா 6:1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள். நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார். நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். (ஓசியா 6:1)**

இந்த வேதனையான சீரமைப்பின் முடிவு தேவனிடத்தில் சேருவதாயிருக்கும். அவரிடத்தில் திரும்புவதி-னால் மாத்திரமே ஆவிக்குரிய மீள உருவாகும்.

**காலநிலை:**

பௌதீக உலகில் தாவரங்களுக்கு காலநிலை முக்கியமாகும். சில வேளைகளில் வெப்பமான வீட்டு கட்டிடங்களில், வெப்பநிலையை தாங்காத தாவரங்கள் வீட்டினுள் வைக்கப்படுகின்றன. அவைகள் உண்மையாகவே உலகத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றது. அவைகளை வீட்டுக்கு வெளியே எடுத்தால் விரைவில் மரித்துவிடும், ஏனென்றால் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் வாழவே அவை பழக்கப்பட்டிருக்கும். உண்மையான உலக சூழலை அவையால் தாங்கிக் கொள்ள முடியாது.

ஆவிக்குரிய ரீதியில் கிறிஸ்தவர்களாகிய எமக்கு கட்டுப்படுத்தப்பட்ட வெப்பமான வீடு வேண்டாம். அவர்கள் மெய்யான உலகத்திற்குள் வரும்போது அவர்களால் கனி கொடுக்க முடியாதுபோய்விடும். தேவனுடைய வார்த்தை உங்கள் சொந்த வாழ்க்கையில் விதைக்கபடும்போது நீங்கள் யாருக்கு ஊழியம் செய்ய வேண்டுமோ, அவர்களிடத்தில் ஆவிக்குரிய தட்ப வெப்ம் பாராமல், கடினமாக இருக்கின்ற போதும் ஊழியம் செய்யுங்கள்

**சுருக்கம்:**

இந்த அதிகாரம் ஆவிக்குரிய அறுவடையின் உபாயங்களை உள்ளடக்கியுள்ளது. இக்கொள்கைகளின் மீளாய்வுகளானது கீழ்வருவனவற்றின் இயற்கை உண்மைகளின் ஆவிக்குரிய சமாந்தரத்தை வெளிப் படுத்துகின்றது:

- -ஒவ்வொரு தாரவத்திற்கும் இனப்பெருக்கத்தின் தகுதி உள்ளது.
- -அறுவடைய செய்வதற்கு விதைத்தல் அவசியமாகும்.
- -நீங்கள் விதைத்த அதே காலத்திலேயே அறுவடை செய்யமுடியாது.
- -நீங்கள் குறிப்பிட்ட நியதிகளின்படி விதைக்க வேண்டும்.
- -நீங்கள் விதைத்த அளவின்படியே தான் அறுவடை செய்ய முடியும்.
- -அறுவடை செய்யாத இடத்தில் நீங்கள் விதைக்க முடியும், விதைத்த இடத்தில் அறுவடை செய்ய முடியும்.
- -குறிப்பிட்ட வெளிப்புற காரணிகளின் அடிப்படையில் விதையின் அபிவிருத்தி செல்வாக்கு செலுத்தும்

இந்த உபாயங்களை விளங்கிக்கொண்டு அதை பிரயோகிக்கும்போது அதன்விளைவு மிகப்பெரிதான ஆவிக்குரிய அறுவடையாகும். அடுத்த அதிகாரம் எவ்விதம் அறுவடை செய்ய வேண்டும் என்பதை காட்டும்.

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. இந்த அதிகாரத்தில் கற்ற ஆவிக்குரிய அறுவடையின் இறுதி கொள்கை என்ன?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இந்த அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வளர்ச்சிக்கு அவசியமான பத்து இயற்கை காரணிகள் பட்டியலிட்டு, ஆவிக்குரிய அறுவடையில் பிரயோகியுங்கள்.

---------------------------------------------------------------------- ----------------------------------------------------------------------

---------------------------------------------------------------------- ----------------------------------------------------------------------

---------------------------------------------------------------------- ----------------------------------------------------------------------

---------------------------------------------------------------------- ----------------------------------------------------------------------

---------------------------------------------------------------------- ----------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

கடைசி இரு அதிகாரங்களில் விதைத்தல் மற்றும் அறுவடைக்கான இயற்கை கொள்கைக்கான ஆவிக்குரிய சமாந்தரங்களை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இயேசு விதைத்தல் உவமையில் இதையொத்த கற்றலை வழங்கினார். மத்தேயு 13:3-9, மாற்கு 4:3-20, லூக்கா 8:5-15ல் இந்த மூன்று உவமைகளை ஒப்பிடுங்கள்.

1. விதைக்கப்பட்ட விதையின் இயற்கை மற்றும் ஆவிக்குரிய சமாந்திரம் என்ன?

   (லூக்கா 8:11)--------------------------------------------------------------------------------------------------------------

2. வித்தியாசமான நிலங்களின் அமைப்பானது தேவனுடைய வார்த்தையை கேட்கும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வித்தியாசமான நிலங்களையும், விதைத்த விதைகளின் பலனையும் கீழுள்ள அட்டவணையில் நிரப்புக.

   **நிலங்களின் விதம்** **இந்த நிலங்களின் விதைக்கப்பட்டதின் பலன்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. வசனத்தை கேட்கும் யாராவது ஒருவருக்கு அதை புரிந்து கொள்ள முடியாவிட்டால் நடப்பது என்ன?

   (மத்தேயு 13:19)-----------------------------------------------------------------------------------------------------------

4. கற்பாறையான இடங்களில் விழுந்த விதை மரிப்பதேன்?

   (மத்தேயு 13:20-21, லூக்கா 8:6,13) ---------------------------------------------------------------------------

5. வசனங்களை அடைத்து முட்களோடு ஒப்பிடப்படும் காரியங்கள் என்ன?

   (மத்தேயு 13:22, மாற்கு 4:18-19, லூக்கா 8:14)---------------------------------------------------------

6. முட்களினால் வார்த்தைகள் அடைக்கப்படும்போது என்ன நடைபெறுகின்றது? (மத்தேயு 13:22)

   அவர் மாறுகின்றார்-------------------------------------------------------------------

7. நல்ல நிலத்திலுள்ள விதை அறுவடைசெய்யப்படும்போது வித்தியாசமான விளைவுகள் ஏற்படுகின்றது என உவமை குறிப்பிடுகின்றதா? (மத்தேயு 13:23)

   ------------------------------------------------------ விளைவுகள் என்ன? ------------------------------------------

8. பாதையோரத்தில் விழுந்த விதைகளுக்கு என்ன நடைபெற்றது?

(மாற்கு 4:4, லூக்கா 8:5)---------------------------------------------------------------------------------------------------

இதற்கு ஆவிக்குரிய சமாந்திரம் என்ன? (மாற்கு 4:15) விதைக்கப்பட்ட வசனத்தை எடுக்கும்படியாக ------------------ விரைவாக வருகின்றது.

9. நல்ல நிலத்தைப்போலுள்ள மக்களுடைய மனங்களின் குணாதிசயங்கள் என்ன? (லூக்கா 8:15). அவர்களிடத்தில் ---------------------------- ------------------------- இருதயங்கள் உள்ளன.

10. நல்ல நிலத்தைப்போலுள்ள மக்களால் உருவான மூன்று பிரதியுத்தரவுகள் என்ன? (லூக்கா 8:15)

11. தேவனுடைய வசனத்தற்கான இந்த வித்தியாசமான பிரதியுத்தரவுகள் சுவிசேஷ செய்திகளை ஏற்றுக்கொள்ளுவதற்காக மட்டுமே பிரயோகிக்கப்படவில்லை. அவைகள் எமது வாழ்க்கையில் தேவன் விதைத்த வசனத்தின் ஏதாவது உண்மைகளுக்கு பிரயோகிக்கப் படவே ஆகும்.

உங்களுடைய வாழ்க்கையில் அறுவடைக்கான தரிசனமானது விதைக்கப்பட்டுள்ளது. அது நல்ல ஆவிக்குரிய நிலத்தில் விதைக்கப்பட்டுள்ளதா? அதன் விளைவு என்ன?

அது பாதையோரத்தில் விழுந்துள்ளதா? விழுந்ததாயின், சாத்தானால் அந்த தரிசனம் எடுத்துப்போகப்பட்டுள்ளது, ஏனென்றால் உங்களுடைய வாழ்க்கையில் அதற்கு முக்கியமான இடம் நீங்கள் கொடுக்கவில்லை.

அது கற்பாறையில் விழுந்துள்ளதா? நீங்கள் அறுவடையின் தரிசனத்தை மகிழ்ச்சியாக பெற்றுள்ளீர்கள், ஆனால் அது உண்மையில் உங்களுடைய இருதயத்தின் ஆழத்தில் செல்லவில்லை. கடினமான நேரங்கள் வரும்போது நீங்கள் அந்த தரிசனத்திலிருந்து விழுகின்றீர்கள். அது முட்களுக்குள் நடப்பட்டுள்ளதா? ஐஸ்வரியங்கள், இன்பங்கள், சிற்றின்பங்கள் ஆகியவற்றில் உங்கள் வாழ்க்கையில் அதிகப்படியான கவனங்களை செலுத்துகின்றீர்களா? இருக்குமாயின், நீங்கள் ஒருபோதும் அறுவடையை கொண்டுவர முடியாது. அறுவடையின் வெளிப்படுத்தலானது நல்ல நிலத்தில் விழுந்துள்ளதா? நீங்கள் தரிசனத்தை பெற்று அதை வைத்திருக்கின்றீர்களா? இருக்குமாயின், நீங்கள் பல கனிகளை கொண்டுவந்து, ஆவிக்குரிய பெருக்கத்தை அடைவீர்கள்

## அதிகாரம் எட்டு

# வெளிப்படுத்தல் மூலமான அறுவடை

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ பெருகுதலின் தேவனுடைய முறைகளை விரிவுபடுத்தவும்,
- ☐ வெளிப்படுத்தல் மூலமான அறுவடையை ஏற்படுத்தும் ஆவிக்குரிய கருவியை இனங்காணவும்,
- ☐ ஆவிக்குரிய வல்லமையின் அனுபவத்தால் ஆசீர்வாதத்திற்கு செல்லவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

### அறிமுகம்

ஆவிக்குரிய அறுவடையின் உபாயங்களை அறிந்திருந்தால் மாத்திரம் போதாது. நீங்கள் அறுவடையின் முறைகளையும், கருவிகளையும் விளங்கியிருத்தல் வேண்டும். முறை என்பது நீங்கள் கற்ற உபாயங்களை உபயோகிக்கும் வழிமுறை ஆகும். நீங்கள் தேவனுடைய வேலையை அவருடைய வழியில் செய்ய வேண்டும். அவருடைய வழியானது தெய்வீக வெளிப்படுத்தலும், ஆவிக்குரிய பெருக்கத்தின் விளைவுகளும் ஆகும்.

> **நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.**
>
> **அப்பொழுது நீ நிலத்தில் விதைக்கும் உன் விதைக்கு அவர் மழையையும், நிலத்தின் பலனாகிய ஆகாரத்தையும் தருவார். அது கொழுமையும் புஷ்டியுமாய் இருக்கும். அக்காலத்திலே உன் ஆடுமாடுகள் விஸ்தாரமான மேய்ச்சலுள்ள ஸ்தலத்திலே மேயும். (ஏசாயா 30:21,23)**

மனிதர்களுடைய வழிமுறைகளை விடவும் இதுவே தேவனுடைய வெளிப்படுத்தல் மூலம் அறுவடை செய்வதாகும்.

### இரகசியத்தின் மேற்பார்வையாளர்கள்

விசுவாசிகள் “தேவனுடைய இரகசியத்தின் மேற்பார்வையாளர்கள்” ஆவர். மேற்பார்வை என்பது

மற்றவர்கள் மேலுள்ள ஒருவித பொறுப்பாகும். இரகசியம் என்பது மற்றவர்களால் அறிப்படாத ஒன்றா-கும். தேவன் எமக்கு ஓர் அர்ப்பணிப்பை தந்துள்ளார்....

> **தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மா-னத்தின்படியே,**
>
> **உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக,**
>
> **இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதி காலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு... (எபேசியர் 3:9-11)**

தேவன் சபைக்கு இரட்சிப்பின் இரகசியத்தை இயேசு கிறிஸ்துவின் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார். சபையினூடாக இந்த இரகசியத்தை தேவன் உலகிற்கு தெரியப்படுத்துகின்றார்:

> **காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று,**
>
> **தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1:9-10)**

பாவமுள்ள மனித இனத்திற்கு தேவனுடைய இரகசியத்தை சபைக்கூடாக வெளிப்படுத்த சபையே கருவியாக உள்ளது. எமது இலக்கு ஒன்றானது "வெளிப்படுத்தலினூடாக அறுவடைய செய்தாலாகும்."

## வித்து அவரை சேவிக்க வேண்டும்

இயற்கையின் அறுவடை வட்டமானது பெருகுதலின் கொள்கையில் அடிப்படையாயிருத்தல் வேண்டும். விதை நடப்பட்டு அறுவடையை உருவாக்கும். அறுவடை செய்யப்பட்ட அந்த கனியே மேலதிக பெருக்கத்திற்கான வித்தாயிருக்கின்றது:

> **பூமியானது புல்லையும், தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது. (ஆதியாகமம் 1:12)**

இந்த விதைகள் பெருகி வேறொரு பல அறுவடையை கொண்டுவரும். இந்த சுற்றுவட்டம் முடிவற்றது. இந்த இயற்கையான வட்டத்தில் மாபெரும் ஆவிக்குரிய உண்மையுள்ளது. இதன் ஓா காரணமாக-வே உலகத்தை சுவிசேஷத்தினால் அடைவதற்கான தரிசனத்தை சித்தரிக்க இயேசு அறுவடையை உபயோகித்தார்.

அறுவடைசெய்யப்பட்ட ஒவ்வொரு விதையும் அல்லது கனியும் பெருகுவதற்கான தகுதி இயற்கையான உலகில் உள்ளதுபோல், ஆவிக்குரிய உலகிலும் அவ்வாறு உள்ளது.

இயேசு வித்துவாக குறிப்பிடப்படுகின்றார்:

> **பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும், ஜாதிகளுடைய**

**சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும்.**

**ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும், தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும். (சங்கீதம் 22:27,30)**

இயேசு கிறிஸ்து மனிதருடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்தபோது, அவரது வாழ்க்கையெனும் விதை நாட்டப்பட்டது. பெரிதான ஒரு அடைவடையால், திரளானவர்கள் பாவத்திலிருந்து மீட்கப்பட்ட தோடு, மரணத்திற்குள்ளிருந்து ஜீவனுக்குள் பிரவேசித்தார்கள். ஒவ்வொரு மறுபிறப்படைந்த விசுவாசியும் பௌதீக உலகில் ஒரு விதையாக காணப்படுகின்றான். ஒவ்வொருவருக்கும் ஜீவனும் மீள உருவாக்கும் திறனும் உள்ளது. இது இயற்கை மற்றும் ஆவிக்குரிய உலகம் இரண்டுக்கும் உள்ளது.

## உலகம் அடையப்பட்டது

இயேசு தனது தரிசனத்தின்படி தனது சீடர்களுக்கு பெரிதான சாவாலை கொடுத்தார். உலகின் அறுவடை நிலங்களில் சுவிஷேசம் பரவவேண்டும். அவர்களிடம் இப்பணியை செயல்படுத்த நவீன தொழில்நுட்பம் இருக்கவில்லை, அச்சகம் இருக்கவில்லை, வானொலி, தொலைகாட்சி பெட்டி, கணிணிகள் இருக்க வில்லை. பேருந்துகள், கார்கள், ரயில்கள், அல்லது விமானங்கள் போன்ற போக்குவரத்து சாதனங்களும் இருக்கவில்லை. ஆனாலும் குறுகிய காலத்திற்குள் இயேசு கிறிஸ்துவுக்காக உலகத்தை தலைகீழாக மாற்றினார்கள் என வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது:

**அவர்களைக் காணாமல், யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு வந்து: உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். (அப்போஸ்தலர் 17:6)**

தரிசனத்தை பெற்று, தேவனது செயல்முறையை புரிந்து கொண்ட மக்களால், ஆவிக்குரிய அறுவடை சாத்தியமாகியது.

உலகமெங்கிலும் ஆவிக்குரிய அறுவடை நிலங்களில் ஆத்துமாக்கள் இருக்கின்றபோதும் நவீன தொழில்நுட்பங்கள் இருக்கின்றபோதும் கெட்டுப் போகின்றவர்கள் அநேகமுண்டு. இதற்கு காரணம் அவர்களிடம் அழிந்து போகின்றவர்களைக் குறித்த புரிந்துணர்வு இல்லை என்பதாகும்.

## செயல்முறை

நவீன சபைகள் நற்செய்தியை பரப்பி அங்கத்தவர்களை அதிகரித்துக் கொள்ள பல முறைகளை கையாளுகின்றன. அவர்கள் மக்களை கவருவதற்காக கூட்டங்களில் போட்டிகளையும், பரிசுகளையும், விஷேட நிகழ்ச்சிகளையும் பயன்படுத்துகின்றார்கள். அவர்கள் மனிதர்களால் உருவாக்கப்பட்ட திட்டங்களை ஆவிக்குரிய வேலைக்காக பயன்படுத்துகிறார்கள். ஆவிக்குரிய வேலை ஆவிக்குரிய விதத்தில் செய்யப்பட வேண்டும். தேவன் தனது சீடர்களுக்குபெரிதான தரிசனத்தை நிறைவேற்ற செயல்முறை திட்டங்களை கொடுக்கவில்லை.

இயற்கையான முறையில் அறுவடை செய்யப்படும் கனியில், மீள் உருவாக்கும் திறமை உண்டு. இது 2 தீமோத்தேயு 2:2ல் சுருக்கமாக தரப்படுகின்றது.

**அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. (2 தீமோத்தேயு 2:2)**

இயேசுவின் பதினொரு சீடர்களால் மட்டும் உலகம் ஆதாயப்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு விசுவாசிக-

ளும் கிறிஸ்தவத்தை பெருக்குபவர்களாவர். விசேட ஊழியர்களாலும், மிஷனரிகளாலும் மாத்திரமே இன்றைய உலகம் ஒருபோதும் அடையவில்லை. அவர்கள் மாத்திரம் போதாது. தொன்னூற்று ஒன்பது சதவீதம் சபையானது இத்துறை சாராதவர்களால் உள்ளடக்கியுள்ளது. இவர்களே வேலையாட்களின் சுறுசுறுப்பான படையாகும், இதனால் இயேசு கிறிஸ்துவிற்காக மூன்று லட்சம் ஆத்துமாக்களை அடைய முடியும்.

எருசலேமின் ஆதிகால சபையிற்கு எதிராக வந்த மாபெரும் துன்புறுத்தலை வேதாகமம் பதிவுசெய்துள்ளது....

> **அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்.**
>
> **சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள். (அப்போஸ்தலர் 8:1,4)**

சபைத்தலைவர்களும், முழு நேர ஊழியர்களுமான அப்போஸ்தலர்கள் எருசலேமில் மீந்திருந்தார்கள். சிதறிய விசுவாசிகளே எங்கும் சென்று வார்த்தையை பிரசங்கித்தார்கள். ஒவ்வொரு விசுவாசிகளும் மற்ற விசுவாசிகளை உருவாக்கி, தேவனுடைய இராஜ்ஜியத்தின் சீஷர்களாக்கினர். சிதறிபோனவர்கள் மீனவர்களாகவும், கூடாரம் அமைப்பவர்களாகவும், தொழிலால் தையல் வேலை செய்பவர்களாகவும் இருந்தனர், ஆனால் அவர்களுடைய முக்கிய குறிக்கோள் தேவனுடைய செய்தியை பரப்புதல் ஆகும்.

ஆதிகால சபையை சவுல் துன்புறுத்திபோது, அவன் சபைக்குள் மாத்திரம் வரவில்லை ஆனால் "ஒவ்வொரு வீட்டிற்கும்" வந்து விசுவாசிகளை கைது செய்தான் என பதியப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 8:3). ஏனென்றால் ஆவிக்குரிய அறுவடையின் ஒவ்வொரு மையங்களும் வீடாகும். ஒவ்வொரு விசுவாசிகளும் பெருக, ஒவ்வொரு வீடுகளும் சுவிசேஷ மையங்களாக காணப்பட, சபையின் கதவுகளை அடைத்தல் சுவிஷேசம் பரவுதலைத்தடுக்காது.

ஆதிகாலசபையில் ஒவ்வொரு விசுவாசிகளும் பெருகினதைப்போல, ஒவ்வொரு வீட்டிற்கும் விஷேட குறிக்கோள் இருந்தது. உதாரணத்திற்கு, கீழ்வரும் காரியங்கள் விசுவாசிகளின் வீட்டில் நடைபெற்றது.

-அப்போஸ்தலர் 2:1,46: வீட்டின் மேல்மாடி அறையில் பெந்தேகொஸ்தே நாள் வந்தது. பெந்தேகொஸ்தே நாளுக்குபிறகு விசுவாசிகள் தினந்தோறும் கூடினார்கள்.

-அப்போஸ்தலர் 9:11,17: அனனியா யூதாவினுடைய வீட்டிற்கு சென்றதோடு, பவுலுக்கு ஊழியம் செய்தான். இது விளைவு புறஜாதிகளுக்கு சுவிசேஷம் பரவியது.

-அப்போஸ்தலர் 10-11: சீமோன் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது ஒரு தரிசனத்தை கண்டான். இதன் விளைவானது புறஜாதிகளுக்கு சுவிசேஷம் விரிவாக்கப்பட்டது.

-அப்போஸ்தலர் 12:12, 16:15, 21-24,40: மரியாள், லீதியாள் ஆகிய விசுவாசிகளின் வீட்டில் ஜெபக்கூட்டம் நடைப்பெற்றது.

-அப்போஸ்தலர் 20:20: பவுல் வெளியரங்கமாக பிரசங்கிக்கவில்லை, ஆனால் வீட்டில் பிரசங்கித்தான்.

-அப்போஸ்தலர் 21:8-14: பிலிப்பிவுடைய வீட்டில் பவுலுக்கு தரிசன வெளிப்பாடு கொடுக்கப்பட்டது.

-அப்போஸ்தலர் 28:30-31: வாடகை வீட்டில் பவுல் போதித்து உபதேசம் செய்தான்.

-ரோமர் 16:5, 1 கொரிந்தியர் 16:15,19, கொலோசெயர் 4:15, பிலேமோன் 2 ஆகிய வசனங்கள் சபைகள் ஆக்கில்லா, பிரிஸ்கில்லா, ஸ்தேவான், நிம்பா, அர்க்கிப்பை ஆகியோரின் வீட்டு சபைகளுக்கு ஏற்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு வீடும் ஆவிக்குரிய பெருக்கத்தின் மையங்களாக காணப்பட்டன. ஒவ்வொரு விசுவாசிகளும் பெருகினர்.

உங்களது வீடானது எதிரிகளின் தாக்குதலிலிருந்து எப்பொழுதும் தப்புவதற்காக ஆவிக்குரிய போரின் தற்காப்பு மையமாக இருக்க வேண்டிய அவசியமிலை. இது பலமுள்ள சுவிசேஷ செய்தியில் மேலதிக ஆவிக்குரிய போரை உண்டாக்குகின்றதாகவும், எதிரிகளை தேவனுடைய வலயத்திலுள் கொண்டுவருவ-தாயும் இருத்தல் வேண்டும்.

## ஒருவனை அடைய ஒருவனை போதியுங்கள்

இது இலகுவான முறை: ஒவ்வொரு விசுவாசிகளும் மற்ற விசுவாசிகளை பெருக்குதல், விசுவாசமுள்ள மனிதர்களுக்கு போதித்தல் ஆகியவை மற்றவர்களுக்கு போதிக்க உதவும். பௌதீக கனியின் அறுவடைய உதாரணத்தின் மூலம், இந்த சுழற்சி முடிவற்றது. ஆனால் இந்த திட்டத்தின் விளைவால் ஆதிகாலத்-தின் சபையானது சுவிசேஷ செய்தியால் “மேலிருந்த கீழாக மாறியமை” தொடர்பாக இதை விளங்கிக் கொள்ளுதல் இலகுவானதாகும்.

கீழ்வரும் பக்கத்திலுள்ள அட்டவணையை பாருங்கள். இந்த அட்டவணையானது ஒரு மனிதனுக்கு சுவிசேஷத்தை அடைவதற்கு தேவையான சராசரி நேரத்தையும், அவன் பெருக்கும் கிறிஸ்தவனாகும் படியான பயிற்சியையும், ஒரு வருட காலப்பகுதியை கொண்டிருக்கும். உண்மையில், இச்செயற்பாடு பங்குபற்றியுள்ள மக்களின் அளவின்மூலம் கூடிய நேரங்களோ, குறைந்த நேரங்களோ எடுக்கலாம்.

ஆனால் ஒரு வருடத்தை சராசரியாக எடுக்கும்போது, ஒரு விசுவாசி ஒரு மனிதனை மாத்திரம் அடைந்து, ஒவ்வொரு வருடத்திலும் அவர்களை சீஷராக்கி, அவர்களை அந்த ஒவ்வொரு வருடங்களிலிருந்து ஒரு மனிதனை சீஷராக்கும்படி அர்ப்பணித்தால், உலகமானது சுவிசேஷத்தின் செய்தியால் இலகுவாக அடையும். அட்டவணையானது ஓர் கிறிஸ்தவன் ஒரு விசுவாசியை சீஷராக்கும் முதலாவது வருட காலப்பகுதியை குறிக்கின்றது. வருட இறுதியின் முடிவில், இப்பொழுது இரண்டு விசுவாசமுள்ள மனி-தர்கள் இருக்கின்றார்கள் (விசுவாசி மற்றும் அவர் சீஷராக்கிய நபர்)

அடுத்த வருடத்தில், அவ்விருவரும் ஒருவரை அடைந்திருப்பார்கள். இரண்டாவது வருட முடிவில், மொத்தமாக நான்கு நபர்கள், அவர்கள் ஒவ்வொருவரும் பின்தொடர்ந்துவரும் வருடத்தில் ஒருவரை அடைந்திருப்பார்கள். அட்டவணையில் மேலுள்ள பகுதியை பார்த்து, ஒவ்வொரு வருடகாலங்களிலும் இந்த செயற்பாடு தொடரும்போதாக விளைவை கவனித்துப்பாருங்கள்.

நீங்கள் ஓர் உள்ளூர் சபையில் அங்கமாயிருந்தால் இருந்தால், உங்கள் சபையிலுள்ள மொத்த அங்கத்-தவர்களை கணக்கெடுத்து, அதை 131,072 இனால் பெருக்குங்கள். உங்கள் பதிலானது ஒவ்வொரு அங்கத்தவர்களும் பெருகினால் 17 வருடங்களிற்கு பிற்பாடு உங்கள் சபை அறுவடை செய்யக்கூடிய மக்களின் அளவாகும்.

| | **விசுவாசிகள்** | **விசுவாசிகள்** | | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| வருடம் 17 | 65,536 | 65,536 | = | 131,072 |
| வருடம் 16 | 32,768 | 32,768 | = | 65,536 |
| வருடம் 15 | 16,384 | 16,384 | = | 32,768 |
| வருடம் 14 | 8,192 | 8,192 | = | 16,384 |

| | | | | |
|---|---|---|---|---|
| வருடம் 13 | 4,096 | 4,096 | = | 8,192 |
| வருடம் 12 | 2,048 | 2,048 | = | 4,096 |
| வருடம் 11 | 1,024 | 1,024 | = | 2,048 |
| வருடம் 10 | 512 | 512 | = | 1,024 |
| வருடம் 9 | 256 | 256 | = | 512 |
| வருடம் 8 | 128 | 128 | = | 256 |
| வருடம் 7 | 64 | 64 | = | 128 |
| வருடம் 6 | 32 | 32 | = | 64 |
| வருடம் 5 | 16 | 16 | = | 32 |
| வருடம் 4 | 8 | 8 | = | 16 |
| வருடம் 3 | 4 | 4 | = | 8 |
| வருடம் 2 | 2 | 2 | = | 4 |
| வருடம் 1 | 1 | 1 | = | 2 |

தேவன் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக மனிதர்களை எப்பொழுதும் பயன்படுத்தினார். தேவனுடைய அறுவடையின் திட்டத்திற்கு மனிதர்கள் அவசியம். மனிதன் நல்ல மாதிரிகளை தேடுகின்றான், ஆனால் தேவனோ நல்ல மனிதர்களை தேடுகின்றார். உலகமானது தாலந்துள்ள மக்களை எடுத்து, அவர்களுக்கு ஓர் நிலையை கொடுக்க முற்படுகின்றது. நல்ல, விசுவாசமுள்ள மனிதர்களை எடுக்கும்படியாக தேவன் கூறுகின்றார், அவர் அவர்களை இயலுமையுள்ள மனிதர்களாக மாற்றுகின்றார். தேவனுடைய இரகசியத்தின் மேற்பார்வையாளர்களாக, நீங்கள் விசுவாசமாக இருப்பதே எல்லாவற்றிலும் தேவைப்படுகின்றது.

> **இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனு-டைய இரகசியங்களின் உக்கிராணக்காரனென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்.**
>
> **மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம். (1 கொரிந்தியர் 4:1-2)**

நீங்கள் கற்றவர்களாகவும், தாலந்துள்ளவர்களாகவும் இருக்க அவசியமில்லை. நீங்கள் விசுவாசமாக இருப்பதே எல்லாவற்றிலும் அவசியமாகின்றது.

விசுவாசமுள்ள மனிதர்கள் சுவிசேஷத்தை மற்ற விசுவாசமுள்ள மனிதர்களுக்கு கூறுதல், அவர்கள் மற்றவர்களுக்கு கூற வழிவகுக்கும்.... இதுவே அறுவடையை அறுக்கிறதிற்கான தேவனுடைய திட்டமா-கும்.

## கருவி

பௌதீக உலகில் அறுவடைக்கான உபாயங்களும், இந்த உபாயங்களை பயன்படுத்துதலும் மாத்திரம் காணப்படவில்லை, இந்த அறுவடைக்கான கருவிகளும் காணப்படுகின்றது. இந்த கருவிகளானது சாதாரண அரிவாள் தொடக்கம் பாரிய இயந்திரம் வரை காணப்படுகின்றது.

ஆவிக்குரிய அறுவடையின் கருவிகளை தேவன் ஏற்படுத்தியுள்ளார். இயேசு கூறினார்:

> **வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.**
>
> **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி,**

**நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். (மத்தேயு 28:18-20)**

இந்த பந்தியிலுள்ள “யாவையும்” என்னும் வார்த்தை நான்கு முக்கிய குறிப்புகள் உள்ளன. விசுவாசிகள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளனர்:

-சகல ஜாதிகளுக்கும் போதித்தல்
-யாவையும்

இந்த இரண்டு காரியங்களுமே எனது பொறுப்பாகும். அவைகளே அறுவடை தரிசனத்தின் சுருக்கங்களாகும்.

தேவனுடைய பொறுப்பானது:

-எம்முடைய இலக்கை நிறைவேற்ற அனைத்து வல்லமைகளையும் தருதல்.
-எப்பொழுதும் எம்மோடு இருத்தல் (எல்லா வழிகளிலும்)

இயேசு அவர்களுடைய சீஷர்களுக்கு சொன்னார்:

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப் பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

அறுவடை தரிசனத்தின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இயேசு அவர்களுடைய சீஷர்களுக்கு கொடுத்த கருவியானது பரிசுத்த ஆவியின் வல்லமையாகும். வல்லமையுள்ளதாக இருக்க, பெருகுதலின் முறையானது பரிசுத்த ஆவியால் வல்லமையாக்கப்பட்டிருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியால் அநேக ஆசீர்வாத அனுபங்கள் உண்டு. அவர்கள் அபிஷேகத்தை உணர்ந்து, அவர்கள் மகிழ்ந்து, அவர்கள் தெரியாத பாஷைகளை பேசுவார்கள். உண்மையான ஆதாரம் பரிசுத்த ஆவியின் வல்லமையே. இது அரசியல் வல்லமையோ, பௌதீக வல்லமையோ கிடையாது. இது ஆவிக்குரிய வல்லமை.

பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதங்களை அனுபவித்தலினால் மாத்திரமே நீங்கள் திருப்தியாக வேண்டாம். தேவனுடைய வல்லமையின் வெளிப்பாட்டின் ஆசீர்வாதத்திற்கு பின்னால் நீங்கள் செல்ல வேண்டும்.

## திசையாக்கப்பட்ட வல்லமை

திசையற்ற வல்லமை ஆபத்தானது. ஒரே திசையில் கொட்டும் நீரூற்றானது நீரையும், சக்தியையும் உற்பத்தி செய்யும். இந்த ஒட்டுமொத்த சூழ்நிலையானது ஒழுங்கமைக்கப்படாதுபோகுமாயின் இது அழிவுக்குட்படும்.

இயேசுவின் சீஷர்களோடு முடிவுள்ள இயேசுவோடுள்ள வல்லமை அவர்கள் உலகத்தின் சாட்சியா யிருப்பதற்கான வல்லமைக்கு வழிகாட்டும். தரிசனத்தை நிறைவேற்றுவதற்கு அவர்கள் உபயோகிக்கும் கருவி இதுதான்.

இந்த வல்லமைக்கு தேவனே காரணமாக இருக்கின்றார்:

> **தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன். வல்லமை தேவனுடையது என்பதே. (சங்கீதம் 62:11)**

இந்த வல்லமையை பெறுவதற்கு விசுவாசிகள் கட்டளையிடப்பட்டுள்ளார்கள்:

> **நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும்... (லூக்கா 24:49)**

“வரைக்கும்” என்னும் வார்த்தையின் அர்த்தமானது பெலனால் தரிப்பிக்கப்படுதல் ஆகும். தேவன் உலகத்திற்கு நீங்கள் சாட்சியாக இருக்கும்படியாக அவருடைய வல்லமையினால் ஆவியில் தரிப்பிக்கப்பட வேண்டுகின்றார்.

## வல்லமையின் குறிக்கோள்

பெலனுள்ள சாட்சியாக நீங்கள் மாறுவதற்கு பரிசுத்த ஆவியில் வல்லமையானது அவசியமாகும், ஏனென்றால் இது வல்லமையின் வார்த்தையாகும்:

வல்லமையானது நீங்கள் பேசும் வார்த்தைகளை எடுத்து, அவைகளை பெலனுள்ளதாக மாற்றும்:

> **அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தபடியால்... எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள். (லூக்கா 4:32,36)**

அவருடைய வல்லமை வார்த்தைகளை உறுதிப்படுத்தும்:

> **அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென். (மாற்கு 16:20)**

கீழ்வரும் அடையாளங்களினால் தேவன் அவரது வார்த்தைகளை உறுதிப்படுத்துகின்றார். தேவனுடைய வார்த்தைகளை பகிரும் முன்பதாக அற்புதமான அடையாளங்களுக்காக நீங்கள் காத்திருக்க முடியாது. நீங்கள் அவருடைய வார்த்தையை பகிர்ந்து, பிற்பாடு அவர் நீங்கள் பேசிய வார்த்தைகளை உறுதிப்படுத்துவதற்காக உங்களோடு செயற்படுவார்.

எல்லா விசுவாசிகளும் சாட்சியாயிருந்து சுவிசேஷ பரவுதலை அழுத்தும்போதும், அனைத்து ஊழியர்களும் பிரசங்கிக்கும்போதும், வார்த்தையானது எல்லாவிடத்திற்கும் செல்லுதற்கான உறுதிப்படுத்தலின் வல்லமையுள்ள அடையாளங்களையும், காண்பித்தலையும் எண்ணிப்பாருங்கள். இந்த வல்லமை இங்கு செய்வதாவது:

### அது குணமாக்குதலை கொண்டுவரும்:

குணமாக்கும்படியாக அவருடைய வல்லமை உங்களில் இருக்கும்:

> **அப்பொழுது பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாகக் கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று. (லூக்கா 5:17)**

## அது விடுதலையை கொண்டுவரும்:

உலகத்தின் அறுவடை நிலங்களுக்கு நீங்கள் நுழையும்போது தேவனுடைய வல்லமையானது துன்புறும் மனிதர்களுக்கான விடுதலையை கொண்டுவரும்:

> **அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (மத்தேயு 10:1)**

## அது பாதுகாப்பை கொண்டுவரும்:

அவருக்கு நீங்கள் வேலைசெய்யும்போது தேவனுடைய வல்லமை பாதுகாக்கும்:

> **இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும் அதிகாரங்கொடுக்கிறேன். (லூக்கா 10:19)**

## அது சுவிசேஷத்தை உறுதிப்படுத்தும்:

“உறுதிப்படுத்தல்” என்பதை எதேனுமொன்றை நிருபித்தலாகும். தேவனுடைய வார்த்தையின் தன்மையை பரிசுத்த ஆவியின் வல்லமை உறுதிப்படுத்தும்:

> **அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள். (யோவான் 6:2)**

திரளான மக்களை கொண்டுவந்த இயேசுவினுடைய வல்லமையுள்ள அற்புதங்கள் இவைகளே.

மனிதர்கள் சுவிசேஷத்திற்கு அமைப்புக்களினாலும், இனத்தினாலும், மாபெரும் பேச்சாளரினாலும் கொண்டு வரப்படுவதில்லை. உயிருள்ள தேவனுடைய வல்லமையின் நிரூபித்தலினால் அவர்கள் கொண்டுவரப்படுகின்றார்கள்.

## அது மக்களை தேவனுக்கு வழிநடத்தும்:

பவுல் எழுதியுள்ளார்:

> **உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**
>
> **என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது. (1 கொரிந்தியர் 2:4-5)**

பவுல் நன்கு கற்றிருந்ததோடு, மனிதனுடைய ஞானத்தினால் பேசினார். இருந்தாலும், அவர் தேவனுடைய வல்லமையினாலும், பரிசுத்த ஆவியின் நிரூபித்தனினாலும் ஊழியம் செய்தார்.

அவருடைய காரணம்? விசுவாசமுடைய மக்கள் மனிதர்களுடைய ஞானத்தினால் சார்ந்திராமல், தேவனுடைய வல்லமையில் சார்ந்திருக்கவேண்டும்.

## அனைத்து வல்லமை

இயேசு கூறினார்:

> **இதோ, சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன். (லூக்கா 10:19)**

அனைத்து அதிகாரங்களும் இயேசுவுக்கு கொடுக்கப்பட்டது (மத்தேயு 28:18). பரிசுத்த ஆவியின் மூலமாக அவர் விசுவாசிகளுக்கு அந்த வல்லமையை ஒப்படைத்தார். அறுவடை நிலங்களில் நீங்கள் நுழைந்ததும் பெருக்குதலே உங்களுடைய முறையாகும். உங்களுடைய கருவி வல்லமையாகும்.

## வல்லமையை செயற்படுத்துதல்

தேவனுடைய ஒவ்வொரு வாக்குறுதியும் இரண்டு பகுதிகளை கொண்டது. வாக்குறுதி மற்றும் வாக்குறுதியை செயற்படுத்துதல் ஆகும்.

இயேசு அனைத்து வல்லமையையும் வாக்குப்பண்ணினார். உங்களுடைய பொறுப்பு அந்த வல்லமையை ஏற்று செயற்படுத்தல் ஆகும். இதை செய்வதற்கு நீங்கள்:

### அது இன்றைக்கானது என அறிய வேண்டும்:

யோவான் 11ல் லாசருவை உயிரோடு எழும்பும்படி இயேசு வந்தபோது, மாத்தாள் அவரை சந்தித்து கூறினாள்:

> **ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். (யோவான் 11:21)**

இயேசு அவளுக்கு கூறினார்:

> **உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான். (யோவான் 11:23)**

மார்த்தாள் அவருக்கு கூறினாள்:

> **உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன். (யோவான் 11:24)**

இயேசு வல்லமையுள்ள கொள்கை அடங்கியுள்ள குறிப்பால் பதிலளித்தார்:

> **நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். (யோவான் 11:25)**

மார்த்தாள் இயேசு சரியான சமயத்தில் முன்னரே வந்திருந்தால் தனது சகோரதன் குணமாயிருப்பார் என விசுவாசித்தாள்.

அத்தோடு எதிர்கால உயிர்த்தெழுதலில் அவளுடைய சகோதரன் எழுந்திருப்பான் என நம்பினாள்.

மார்த்தாளுக்கு பதிலாக "நானே" என்னுடைய வார்த்தையை இயேசு உபயோகிக்கும்போது ஒரு முக்கியமான உண்மையை அவர் வெளிப்படுத்துகின்றார். அற்புதங்களில் கடந்த காலம் மற்றும்

நிகழ்காலம் என்று ஒன்றும் இல்லை. வல்லமையானது எல்லா காலத்திலும் தேவையுள்ள மக்களை சந்திக்கும். எல்லா காலங்களிலும் தேவன் (நானே) தேவைகளை சந்திப்பதற்கு ஏற்றராயிருக்கின்றார். “மார்த்தாள், இன்னே அற்புதத்தின் நாள். நானே (நிகழ்காலம்) உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக் கிறேன்.”

சிலர் அற்புதங்கள் கடந்தகாலத்திற்குரியது என கூறுவார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்-லமையை நம்புவதில்லை. அவர்களை வேதாகமம் எச்சரிக்கின்றது...

> **தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. (2 தீமோத்தேயு 3:5)**

அவர்கள் தெய்வீகம் உள்ளவர்களாய் ஆனால் “பலனிற்கு அறிமுகமற்றவர்களாக” இருப்பார்கள் என ஆம்பிபைட் என்னும் ஆங்கில வேதாகமம் மொழிபெயர்த்துள்ளது.

அவர்கள் தேவன் சபித்த அத்திமரத்தை போன்றிருப்பார்கள். அவர்கள் தெய்வீக தன்மையின் தோற்றமுள்ளவர்களாயிருப்பார்கள் ஆனால் எவ்வித கனியும் இராது. கனியை உற்பத்தி செய்து தராத அத்திமரத்தைபோல், அவர்கள் தேவனுடைய வல்லமையை தராமலும், ஆவியில்பெருகாமலும் இருக் கின்றார்கள்.

## ஆதாரத்தை விளங்கிக்கொள்ளுங்கள்:

வல்லமையின் ஆதாரம் தேவனே ஆகும்:

> **நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத் திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.**
>
> **நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். (யோவான் 15:5,7)**

நீங்களே கொடிகள். இயேசுவே திராட்சைசெடி. செடியிலிருந்தே ஜீவன் வருகின்றது. கொடிகள் கனி-களை கொடுக்கும். நீங்கள் கனிகளை உண்டாக்கவில்லை, நீங்கள் அதை கொடுக்கின்றீர்கள்.

கிரியைகளை நடப்பிப்பவர் இயேசுவே. “தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன-செய்ய வேண்டும்?” என்று இயேசுவிடம் கேள்விகேட்கப்பட்டபோது, அவர் தெய்வீக குணமாக்குதல் என்னும் பாடத்தை கொடுக்கவில்லை அல்லது எவ்வாறு அற்புதம் செய்யவேண்டும் என காட்டவில்லை. அவர் பதிலளித்தார்:

> **அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார். (யோவான் 6:29)**

அவரே தேவனுடைய கிரியையாயிருந்தார். அவரே வல்லமையின், அற்புதத்தின், குணமாக்குதலின் ஆதாரமாயிருந்தார்.

மனினுடைய செயற்பாட்டின் எதிலிலுமோ அல்லது மனிதனிலோ வல்லமை இல்லை. வல்லமையின் வாக்குறுதியின் நிறைவேறுதலானது தேவனிலும் அவருடைய வார்த்தையிலும் உள்ளது.

இயேசுவே உறுதியை தரும் திராட்சைசெடி. நாமே கிளையின் மக்களாயிருக்கின்றோம். திராட்சை செடியிலிருந்து வல்லமை புறப்பட்டு தரிசனத்தை நிறைவேற்றும்.

## அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்:

உங்களுக்கு ஏதேனுமொன்றை செய்யும்படி பொறுப்பாக கொடுக்கப்பட்டிருக்குமாயின் உங்களுக்கு அதை செய்ய அதிகாரம் உள்ளது.

இயேசு விசுவாசிகளுக்கு அறுவடையின் பொறுப்பை கொடுத்து, இந்த பொறுப்பை சுமப்பதற்கான அதிகாரத்தை கொடுத்தார், ஆனால் தனிப்பட்ட விதத்தில் இந்த அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசு சொன்னார் “அனைத்து வல்லமையும்” (அதிகாரம்) அவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவர் அந்த வல்லமையை (அதிகாரம்) உங்களுக்கு கொடுத்தார். நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு, சுவிசேஷத்தை விரிவாக்குவதற்கு அதை சரியாக பயன்படுத்த வேண்டும்.

விசுவாசிகள் இந்த வல்லமையை தங்களுடைய சபைக்கு தெரிவிக்க வேண்டும். இயேசுவால் கொடுக்கப் பட்ட உவமையில் அவர் கூறினார்:

> **நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய்ப் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டிக்கொண்டுவா என்றான்.**
>
> **நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா... (லூக்கா 14:21,23)**

அவருடைய வல்லமை காட்டுமிடமாக சபையே இருத்தல் வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாகும். பல சந்தர்ப்பங்களில் அது புதுப்பித்தலிற்கான இடமாகவும், விதைத்தலின் சுழற்சியாகவும், சமூக நிலையங்களாகவும் மாறிவிடுகின்றது.

எமது சபைகளில் தேவனுடைய வல்லமையானது ஊற்றப்படாவிட்டால் ஏழைகளும், குருடரும், பாவத்திலுள்ளவர்களும் எமது மாறாத வாசலினூடாக வெளியேறிவிடுவார்கள். அவர்கள் வந்த நிலையிலேயே அவர்கள் இருப்பார்கள்.

சபையானது தனிநபர்களினால் உருவாக்கப்பட்டுள்ளது. சபையானது தேவனுடைய வல்லமையுடைய ஊற்றை அனுபவிக்கும்போது, ஒவ்வொரு அதன் தனிநபரும் அந்த வல்லமையை தனிப்பட்ட ரீதியில் அனுபவிப்பார்கள்.

## பேதுரு முன்னும் பின்னும்

வெளிப்படுத்தப்பட்ட அறுவடையை செய்வது எவ்வாறு என்பதை அறுவடையாளர் அறியும்படிக்கு, தேவனுடைய வல்லமையே ஒரு கருவி என்பதை பலனற்ற அறுவடையாளர் சவாலாக ஏற்றுக்கொள்ள வேண்டும். உதாரணமாக அப்போஸ்தலனாகிய பேதுருவை எடுத்துக் கொள்ளுங்கள்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின்போது தூங்கும் ஒரு பேதுருவை நாம் காண்போம். (மாற்கு 14:32-34). இயேசுவை மறுதலித்த கோழையான பேதுருவையும் நாம் காண்போம். (மத்தேயு 26). மனிதர்களை பிடிக்க அழைக்கப்பட்ட ஒருவன் மீன் பிடிக்க திரும்பிச் சென்றதையும் நாம் காண்கின்றோம். தனது சுயநலத்தினால் மீனவனாக மாற முற்பட்டவனை காண்கின்றோம். (யோவான் 21).

ஆனால் தீடீரென்று பேதருவைப்பற்றிய புதிய பதிவுகள் வேதாகமத்தில் வருகின்றது. முதல் தடவையாக இம்மனிதன் தைரியமாக சுவிஷேசத்தை பிரசங்கித்தபோது 3000 பேர் இரட்சிக்கப்பட்டு

கின்றார்கள். அடுத்த முறை பிரசங்கித்தபோது 5,000 பேர் சபையில் சேர்க்கப்படுகின்றார்கள். ஆதி சபையிலே வல்லமையுள்ள ஒரு தலைவராக மாறுவதற்கு என்ன நடைபெற்றது?

பேதுரு வல்லமையின் அனுபவத்தை பெற்றார். இந்த வல்லமையின் நிமித்தம் முடவனான மனிதனிடம் சொல்லக்கூடியதாக இருந்தது:

> **எங்களை நோக்கிப்பார்... நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி, வலதுகையினால் அவனைப் பிடித்துத்தூக்கிவிட்டான், உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது. அப்போஸ்தலர் 3:4,6-7)**

துன்புறும் மனிதர்களிடத்தில் அவர்களுடைய ஏதோவொரு தேவை என்பது உங்களுக்கு தெரியும்வரை "எம்மை பார்க்கும்படி" நீங்கள் சொல்ல கூடாது. உங்களிலும் அதிகமான வல்லமை உங்களிலுள்ளது எனபதை நீங்கள் அறியும்முன் முடமான மனிதனை கைகளினாலோ மற்றும் அவனுடைய கால்களால் தூக்குதலோ கூடாது. பேதுருவிடம் தன்னில் ஒன்றும் இருக்கவில்லை, ஆனால் தேவனிலிருந்து தனக்கு ஊற்றும் வல்லமையை கொண்டிருந்தான். தேவனுடைய வல்லமை அவர்களுடைய கால்களை முடமாக்க வைக்கின்றது, அது அவர்களுடைய முடமான நிலையில் இருப்பதற்கு உதவவில்லை.

வல்லமையுள்ள அனுபவம் பேதுரு போன்ற மீனவர்களை மனிதர்களை பிடிக்கின்றவர்களாக்கும்படி மாற்றியது.

## விரிவாக்கப்படும் சுற்றுவட்டம்

வல்லமையுள்ள சுவிஷேச சாட்சியின் மூலமாக எப்பொழுதும் விரிவாக்கப்படும் ஒரு வட்டத்தின் விளைவின் மாதிரியை இயேசு மேலோட்டமாக காண்பித்தார்:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

அறுவடையின் உபாயமானது அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

-பெருகுதலே அதன் முறையாகும்.

-பரிசுத்த ஆவியின் வல்லமையே அதன் கருவியாகும்.

-அந்த வல்லமை வழிநடத்தப்பட்டுள்ளது. அது சீஷர்கள் சாட்சியாக மாறும்படியாக கொடுக்கப் பட்டுள்ளது.

-வல்லமையின் இலக்கானது உலக ஜாதிகளாகும், இது எப்போதும் பெருகும் ஓர் வட்டமாகும், எருசலேம், யூதேயா, சமாதியா, மற்றும் உலகத்தின் பூரணமான பகுதிகள்.

எங்கிருந்தோ தொடங்கி, வல்லமையின் கருவியையும் பெருகுதல் என்னும் முறையை பயன்படுத்தி, சுவிசேஷமானது உலகத்தின் முடிவுவரை விரிவாக்கப்படுகின்றது.

## வாக்குறுதியை செயற்படுத்துதல்

விசுவாசிகளால் வாக்குறுதி பெற்றுக்கொள்ளப்படுகிறது:

**உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:20)**

ஆனால் தேவனுடைய ஒவ்வொரு வாக்குறுதியிலும் அந்த வாக்கை செயற்படுத்த ஒரு நிபந்தனை உள்ளது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இந்த வாக்குறுதி விசேட விசுவாசிகளின் குழுக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது அறுவடையின் தரிசனத்தை நிறைவேற்றுபவர்களுக்காக கொடுக்கப்பட்டுள்ளது:

**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**

**நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:19-20)**

தரிசனத்தை காண விரும்புபவர்களுக்கு.... உலகத்தின் ஜாதிகளுக்கு வல்லமையுள்ள சாட்சியாக செல்ல விரும்புபவர்களுக்கு... அவர் வாக்குறுதி அளித்தார்... எல்லா வழிகளிலும் நான் உங்களோடே இருப்பேன்...

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. தேவனுடைய பெருக்கத்தின் செயல்முறைபற்றி வெளிப்படுத்தும் இரண்டு வசனங்களை தருக?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. அறுவடையின் கருவி என்ன?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. வல்லமையின் வாக்குறுதிகளை செயல்படுத்தும் மூன்று படிமுறைகளை பட்டியலிடுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

# மேலதிக படிப்பினைக்கு

2 தீமோத்தேயு 2:2ல் கொடுக்கப்பட்ட தேவனுடைய பெருகுதலின் முறை முதலாவது எருசலேமில் பிரயோகித்து, பிற்பாடு உலகம் முழுவதும் பரவுதலாகும். நீங்கள் எங்கிருக்கின்றீர்களோ அங்கு முதலாவது அறுவடையை அறுக்க வேண்டும், பிற்பாடு தேவன் உங்கள் தரிசனத்தையும், ஊழியத்தையும் விரிவாக்குவார். உங்களுடைய "எருசலேமில்" "வெளிப்படுத்தல் மூலம் அறுத்-தலை" கீழ்வரும் குறிப்புக்கள் பங்குகொள்ள செய்யும்.

1. யோசுவா புத்தகத்தை வாசியுங்கள். இஸ்ரவேலரை பாலஸ்தீன தேசத்தை அனுபவிக்கும் படியாக தேவன் யோசுவாவுக்கு கொடுத்த கொள்கைகளை பார்க்கவும். தேவனுடனான உங்களுடைய சொந்த தொடர்பை அனுபவிப்பதற்கு இந்த சில கொள்கைகளை நீங்கள் பிரயோகிக்க முடியுமா?

2. உங்களுடைய தொடர்பாளர்களோடு சுவிசேஷத்தினால் அடைவதற்கான குறிக்கோள்களை தயாரிக்க. குறிக்கோள்கள் என்பது உங்களுடைய இலக்கு அல்லது திட்டங்களின் காரியமாகும். நீங்கள் என்ன செய்ய போகின்றீர்கள்? எப்போது? சுவிசேஷம் அடைவ-தற்காக தற்போது மக்களை அடைய முடியமான குறிக்கோள்களை தேர்ந்தெடுங்கள். ரோமர் 15:20-21ல் பவுலின் முன்னுரிமை இதுவாகும். நீங்கள் கவனம் செலுத்தக்கூடிய சில குறிக்கோள்கள்:

   -உங்கள் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு வீடுகளையும் சந்தித்து, உங்கள் அயலவர்களோடு தனிப்பட்ட ரீதியில் சுவிசேஷ செய்தியை பகிருங்கள்.

   -உள்ளூர் மற்றும் சர்வதேச சுவிசேஷ முயற்சிகளுக்கு கொடுப்பதற்காக பொருளாதார இலக்குகளை ஏற்படுத்துங்கள்.

   -இன்னும் சுவிசேஷத்தினால் அடையப்படாத உங்கள் பகுதியில் குறைந்த குழுக்களை யுடைய இடத்தில் ஊழியத்தை நிறுவுங்கள்.

   -வீடுகளிலும், சிறைகளிலும், ஆஸ்பத்திரிகளிலும் விசேட ஊழியத்தை ஆரம்பியுங்கள். போதைக்கு அடிமையானவர்கள், ஏழைகள், குடிக்கு அடிமையானவர்கள், திருமண-மான தாய்மார்களுக்கான ஊழியத்தை நிறுவுங்கள். விசேட குழுக்களான ஆண், பெண், சிறுவர், திருமணமானோர், குடும்பங்கள், அல்லது இராணுவத்திற்கு ஊழியம் செய்யுங்கள்.

3. உங்களுடைய "எருசலேமிலிருந்து" உலக ஜாதிகளுக்கு உங்கள் ஊழியத்தை விரிவாக்குங்கள். உலகத்தை ஜெபத்தினூடாக ஏறெடுக்க தொடங்குங்கள்:

   -உலக வரைப்படத்தை எடுத்து, உலக ஜாதிகளுக்காக ஜெபியுங்கள். உங்கள் சொத்தாக புறசமயத்தவர்களை பெற்றுக்கொள்ளுங்கள் அத்தோடு ஜாதிகளுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படி உங்களை உருவாக்கினதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

   -உங்களுக்கு தினசரி செய்தித்தாள் கிடைக்குமாயின், பலதரப்பட்ட ஜாதிக-ளின் பிரச்சினைகளை காட்டும் தலையங்கங்களுக்காக ஜெபியுங்கள். அரசாங்க தலைவர்களுக்கும், மிஷனரிகளுக்கும், ஊழியர்களுக்கும், விசுவாச ஐக்கியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**பாகம் நான்கு: எதிர்ப்பார்ப்பு**
**தரிசனத்தின் ஒரு பகுதியாக நீங்கள் மாறுதல்**

## அதிகாரம் ஒன்பது

# நுகத்தை உடைத்தல்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ சாபகட்டின் மூன்று-படி நுகத்தை அடையாளம் காணவும்,
- ☐ தேவனுடைய மூன்று-படி நுகத்தை அடையாளம் காணவும்,
- ☐ சாபத்தின் கட்டிற்கும் தேவனுடைய கட்டிற்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தும் படிமுறைகளை பட்டியலிடவும்,
- ☐ சாபத்தின் நுகத்தை உடைத்து ஆவிக்குரிய விளைவை அடையாளம் காணவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

> **வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**
>
> **நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.**
>
> **என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத்தேயு 11:28-30)**

## அறிமுகம்

இந்த பாடம் பூர்த்தி செய்பவை:

| | |
|---|---|
| தரிசனம்: | தரிசனத்தை அடையாளம் காணுதல் |
| கொள்கை: | தரிசனத்தின் பின்னாலுள்ள குறிக்கோளின் கொள்கைளை விளங்குதல் |
| குறிக்கோள்: | தரிசனத்தை நிறைவேற்றுவதற்கான குறிக்கோள்கள் |

இப்பாடத்தின் கடைசி பகுதியில் கொள்கை ரீதியான எதிர்பார்ப்பானது நீங்கள் தரிசனத்தை நிறைவேறுதலில் ஒருபகுதியாக மாறுதல் என்பதாகும்.

எதிர்பார்க்கப்பட்ட முடிவொன்றை நீங்கள் கொண்டுவரும்படியாக தேவன் தீர்மானித்தார்:

**நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரேமியா 29:11)**

அந்த எதிர்பார்க்கப்பட்ட முடிவானது தரிசனத்தின் நிறைவேறுதலும், தேவனுடைய வேலைகளை செய்து முடிப்பதே ஆகும்:

**நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4:34)**

எந்தவிதமான புதிதான நிலைகளிலும் நீங்கள் பிரவேசிக்கும்போது, பழையவற்றை விட்டுவிடுதல் எப்பொழுதும் அவசியமாகின்றது. கருவறையின் பாதுகாப்பிலிருந்து விடுபடுதல் பிறப்பிற்கு அவசியமாகின்றது.

தேவன் விசுவாசத்தின் புதிய படிமுறைகளை எடுக்கும்படியாக கூறுகின்றார்:

**முந்தினவைகளை நினைக்கவேண்டாம். பூர்வமானவைகளைச் சிந்திக்கவேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றும். நீங்கள் அதை அறியீர்களா? (ஏசாயா 43:18-19)**

தேவனுடைய வல்லமை இக்காலத்திற்கும் நீடித்திருக்கவில்லை என்னும் கொள்கையால் நீங்கள் கட்டுண்டு இருக்கலாம். உலகத்தில் சுவிசேஷத்தை பரப்புதல் ஊழியர்கள் மற்றும் மிஷனரிகளுக் கேயான பொறுப்பாகும் என நீங்கள் நினைக்கலாம். தேவனுடைய அறுவடை வெளியில் கிறிஸ்துவின் சரீரமாகிய மீதியில் கைகொடுத்து சேராதப்படிக்கு உங்கள் கலாச்சாரத்தினாலும், பிரிவுகளினாலும் நீங்கள் கட்டுண்டு இருக்கலாம்.

ஆனால் தேவன் உங்களுக்கு புதிய தரிசனத்தை தருகின்றார். ஓர் குறிக்கோளோடு ஆவிக்குரிய விசுவாசி-களோடு கட்டுண்டவர்களாய் சேரும்போது நீங்கள் புதிய வலைப்பின்னலில் ஓர் அங்கமாகின்றீர்கள்.

## ஓர் புதிய வலைப்பின்னல்

வேதாகமமானது மிகப்பெரிதான ஆவிக்குரிய உண்மையை எடுத்துக்காட்டும் இயற்கையான உலகத்-தில் வலையை உபயோகம் குறித்து இரு வேறுப்பட்ட சம்பவங்களை பதிவுசெய்துள்ளது.

முதலாவது சம்பவமானது கிறிஸ்துவினுடைய பூலோக ஊழியத்தின் ஆரம்பத்தில் சம்பவித்தது. இது லூக்கா 5ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. சீஷர்கள் இராமுழுவதும் மீன்பிடித்தும் ஒன்றும் அகப்படவில்லை. இயேசு அவர்களுக்கு கூறினார்:

**ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள். (லூக்கா 5:4)**

சீமோன் கூறினான்:

**ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான். (லூக்கா 5:5)**

அவர்கள் வலையை போட்டபோது அது கிழிந்து போகதக்கதாக அதிகளவான மீன்களை பிடித்தார்கள், அத்தோடு இன்னொடு படகை கொண்டுவந்து தமக்கு உதவும்படி மற்ற சீஷர்களை அழைக்க வேண்டிய தாயிற்று. மீன் பிடித்தல் இரு படகுகளையும் நிரப்பத்தக்கதாக மிகவும் நன்றாக இருந்ததோடு அவர்கள்

அமிழ்ந்து போகவும் தொடங்கினார்கள். இதைகுறித்து சீமோன் ஆச்சரியப்பட்டான் ஆனால் இயேசு அவனிடம் கூறினார்:

**பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். (லூக்கா 5:10)**

பௌதீக உலகத்தில் சீமோன் பெற்ற மீன்பிடித்தலின் அனுபவமானது ஆவிக்குரிய உலகில் அவன் மனிதனை பிடிக்கின்றவனாகி செய்த மிகப்பெரிய அறுவடையோடு சம்பந்தப்பட கூறவில்லை.

யோவான் 21ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் இறுதி ஊழியத்தில் இதையொத்த சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சீஷர்கள் இராமுழுவதும் மீன்பிடித்தும் ஒன்றும் அகப்படவில்லை. கிறிஸ்து கட்டளையிட அவர்கள் வலையை வீசினார்கள், மறுபடியும் வலை மீன்களால் நிறைந்தது. ஆனால் இந்த தடவை முதல் தடவையிலும் பார்க்க வித்தியாசமானதாயிருந்தது. வலை பிய்ந்து போகவில்லை:

**சீமோன்பேதுரு படவில் ஏறி, நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான். இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. (யோவான் 21:11)**

இந்த இரு சம்பவங்களும் இயற்கையான உலகில் சாதாரணமாக நடைபெற்றவையாகும், ஆனால் மா பெரும் ஆவிக்குரிய உண்மைக்கு இவைகள் ஒன்றுபடுகின்றதா? முதல் தடவை வலை கிழிந்துபோயிற்று ஆனால் இரண்டாவது தடவையில் கிழிந்துபோகவில்லை. இந்த வித்தியாசத்தை ஏற்படுத்தியது எது?

முதலாவது வலை சம்பவமானது மனிதனுடைய பிரயாசத்திற்கு உதாரணமாக இருக்கின்றது. வர்த்தக ரீதியாக சீமோன் மீன்பிடிப்பவராவார். அவருக்கு இயற்கையான வழிமுறைகளும், மீனவத்தின் பாரம் பரியங்களும் தெரியும். கிழிந்த வலையினூடாக தேவனுடைய வேலையையும், தரிசனத்தையும் மனிதன் பிரயாசத்தினூடாக நிறைவேற்ற முடியாது என இயேசு காட்டினார்.

தேவன் தன்னை சிறந்த வேலைக்கு அழைக்கின்றார் என சீமோன் உணரும்போது அவன் கூறினான்:

**ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப்போகவேண்டும் என்றான். (லூக்கா 5:8)**

சீமோன் மனிதனை பிடிக்கின்றவனானான். பழைய வலைபின்னலானது மாபெரும் ஆவிக்குரிய அறுவடைய ஏற்படுத்தவில்லை. மனினுடைய பாரம்பரியத்திற்கு சீமோன் கீழ்ப்படிகின்றவனாயிருக்கலாம். யூதருக்கும், புறஜாதிக்குமிடையில் அவர் ஓர் கோடு இட்டிருக்கலாம். பழைய வலைப்பின்னலானது உடைப்பட்டு, அவர் புதிய வலைப்பின்னலில் ஓர் பகுதியாக வேண்டும்.

இயேசு பழையதை அழிக்க வரவில்லை, புதியதிற்கூடாக அதை நிறைவேற்றவே வந்தார். அவர் நியாயப்பிரமாணத்தை அழிக்கவில்லை, ஆனால் புதியதொரு அர்த்தத்தை சேர்த்தார். அவர் பாவத்திற்கான இரத்தப்பலியை நீக்கவில்லை, ஆனால் அவருடைய சொந்த இரத்தத்தை சிந்துவதற்கூடாக பாவத்திற்கான புதிய குறிக்கோளை நிறைவேற்றினார்.

இயேசு புதிய திராட்சரசத்தை பழந்துருத்திகளில் வார்ப்பதை குறித்து எச்சரித்தார். பழந்துருத்தியானது புதிய திராட்சரத்தை ஏற்காததைப்போல வலையும் மீன்களை தாங்கமுடியாதிருந்தது. ஆவிக்குரிய உலகில் புதிய வலையைதவிர வெறெந்தவொன்றும் மாபெரும் அர்ப்பணிப்பிற்கான சவாலை செய்து விடமுடியாது.

முதலாவது மற்றும் இரண்டாவது மீன்பிடித்தலின் சம்பவங்களுக்கிடையில், ஓர் புதிய வலையமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இயற்கையான மீன்பிடித்தலின் சம்பவங்கள் ஆவிக்குரிய உலகில்

நடைபெற்ற காரியங்களுக்கு சமாந்திரமாக உள்ளது.

இந்த புதிய ஆவிக்குரிய வலையமைப்பானது இயேசு தந்த தரிசனத்தை செய்ய உதவுகின்றது. ஆனால் இதற்குள் நுழைவதற்கு, ஒருவர் பழையதிலிருந்து புதியதிற்குள் காலடி வைக்க வேண்டும். பழைய நுகம் உழைக்கப்படவேண்டும். புதிய வலையானது தாங்குவதற்கு பழைய வலையானது கிழிந்து போக வேண்டும்.

## நுகம்

நுகமானது அனைத்து பழைய உலகில் மிருகங்களை ஒன்றுசேர்த்து அறுவடை வயல்களிலே வேலை செய்வதற்காக உபயோகிக்கப்பட்டது. இன்னும் பல தேசங்களிலே இந்த குறிக்கோளுக்காக இன்றும் பாவிக்கப்படுகின்றது.

இயேசு தாம் பேசும்போது நுகத்தை குறித்து சொன்னார்:

> **வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**
>
> **நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.**
>
> **என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத்தேயு 11:28-30)**

அறுவடைக்கான நிலத்தின் தரிசனத்தை அவர் தந்தார். இன்று இந்த நிலமானது சுவிசேஷ செய்தியை ஒருபோதும் பெற்றுக்கொள்ளாத மூன்று பில்லியன் மக்களை குறிக்கின்றது... இந்த சவாலானது "மெதுவாயும்" "இலகுவாயும்" உள்ளதென அவர் எமக்கு கூறுகின்றார்?

நிச்சயமாக அதை தான் அவர் கூறுகின்றார்.. ஆனால் பழைய வலைப்பின்னல், பழைய நுகம், தரிசனத்தை செய்யமுடியாது. நீங்கள் உங்களாலேயே அதை நிறைவேற்றமுடியாது. மனிதனுடைய பிரயாசத்தின் மூலமாக நீங்கள் அதை செய்யமுடியாது. நீங்கள் புதிய வலைப்பின்னலிலே ஒரு பகுதியாக மாறி, அவரோடு கூட நுகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## பாவகட்டுக்களின் நுகம்

ஏதேனும் சில காரியங்களின் நுகத்தின் கீழ் நாம் கட்டப்பட்டிருக்கின்றோம். நீங்கள் பாவத்தின் கட்டுக்க-ளிலோ அல்லது தேவனுடைய கட்டுக்களின் கீழேயோ இருக்கலாம்.

பாவத்தின நுகமானது மூன்று படிகளை கொண்டுள்ளது. நீங்கள் பாவம், சுயம் மற்றும் மனிதர்களின் கட்டுக்களில் இருக்கலாம்:

### பாவத்தின் நுகம்:

> **நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராதபடிக்கு, நான் அவர்கள் தேசத்திலிருந்து உங்களைப் புறப்படப்பண்ணி, உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவியராகமம் 26:13)**

எகிப்திய நுகம் என்பதின் அர்த்தமானது பாவத்தின் நுகமாகும். இயேசுவினுடைய நுகத்தின் கீழ் நீங்கள் வரவேண்டுமாயின் உங்களுடைய வாழ்க்கையானது பாவத்தின் நுகத்திலிருந்து உடையப்படவேண்டும்.

### சுயத்தின் நுகம்:

கட்டுக்களின் நுகமானது சுயத்தின் நுகமாகவும் இருக்கலாம்:

> **எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை. நான் விரும்புகிறதைச் செய்யா-மல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். (ரோமர் 7:15)**

சுயநலம் மற்றும் பெருமை ஆகியவை சுயத்தின் நுகத்திற்கான உதாரணங்கள் ஆகும்.

### மனிதர்களின் நுகம்:

மனிதர்களின் நுகத்தின் கட்டானது மற்றவர்களால் உங்கள்மீது போடப்பட்டிருக்கலாம்:

> **சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள். தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள். (மத்தேயு 23:4)**

மனிதர்களின் நுகமானது பாவகட்டு, பாரம்பரியம், இனம் அல்லது மற்றவர்களால் செய்யமுடியாத நடத்தைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றை உள்ளடக்கலாம்.

நுகத்தின் மூன்று படிகள் பாவத்தின் கட்டு, சுயம், மற்றவர்களால் செய்யமுடியாத நடத்தைகளை மேற்கொள்ளுதல், சுமைகளை சுமத்தல் மற்றும் அமைதியற்றல் ஆகும்.

## தேவனுடைய மூன்று-படி நுகம்

தேவனுடைய நுகமானது சுமக்கமுடியாத வேலையாளிலிருந்து ஒற்றுமையாக வேலையாளை பேசுகின்றது. இது பாரத்தையன்றி இலகுவை பேசுகின்றது. இது அமைதியற்றதிலிருந்து அமைதியா-குதலிற்கான நுகமாகும்.

தேவனுடைய மூன்று-படி நுகமானது இலகுவானதும், மெதுவாயும், அமைதலாயுமுள்ளது:

> **வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**
>
> **நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.**
>
> **என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத்தேயு 11:28-30)**

## இடைவெளியை தொடர்புபடுத்தும் மூன்று படிமுறைகள்

பாவத்திற்கும் கட்டிற்கும், தேவனுடைய கட்டிற்கும் இடையில் இடைவெளியை தொடர்புபடுத்தும் மூன்று

படிமுறைகளை இயேசு முன்வைத்தார். அது பழையதிலிருந்து புதியதிற்கு வருதலாகும்.

**வாருங்கள்:** நீங்கள் அவரிடத்திற்கு மனப்பூர்வமாக வரவேண்டும். இது பாவத்தின் நுகத்தை அழிக்கும்.

**ஏற்றுக்கொள்ளுங்கள்:** நீங்கள் அவருடைய நுகத்தை ஏற்கவேண்டும். அதை செய்வதினூடாக மனிதனுடைய நுகம் அழியும்.

**கற்றுக்கொள்ளுங்கள்:** நீங்கள் அவரை கற்றுக்கொள்ளுவதினூடாக சுய நுகத்தை உடைக்கும்.

## நுகத்தை உடைத்தல்

தேவனுடைய திட்டமானது அனைத்து பாவத்தின், சுயத்தின், மனிதனின் நுகத்தை உங்கள் வாழ்வில் உடைத்தலாகும். தரிசனத்தை நிறைவேற்றுதல் உங்களுக்கு அவசியமாகும்.

பழைய ஏற்பாட்டின் ஓர் பதிவில், இஸ்ரவேலானது அதன் எதிரியாகிய அசீரியாவின் சேனைகளால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. தேவன் இஸ்ரவேலருடன் பேசி அறிவித்ததாவது:

> **நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும், நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும் என்று சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார்.**
>
> **அசீரியனை என் தேசத்திலே முறித்து, என் மலைகளின்மேல் அவனை மிதித்துப்போடுவேன். அப்பொழுது அவனுடைய நுகம் அவர்கள்மேலிருந்து விலகி, அவனுடைய சுமை அவர்கள் தோளிலிருந்து நீங்கும். (ஏசாயா 14:24:25)**

தேவனக்கு இஸ்ரவேலின் கழுத்தில் இருந்த நுகத்தை உடைக்க வேண்டியதாயிற்று. ஆனால் அவருடைய குறிக்கோளானது இஸ்ரவேலிலிருந்து மற்ற தேசத்திற்கு விரிவுபடுத்தலாக இருந்தது:

> **தேசமனைத்தின்மேலும் நிர்ணயிக்கப்பட்ட யோசனை இதுவே. சகல ஜாதிகள்மேலும் நீட்டப்பட்டிருக்கிற கையும் இதுவே என்றார். (ஏசாயா 14:26)**

தேவனுடைய குறிக்கோள் என்ன? அவருடைய குறிக்கோளானது உலகத்தின் ஜாதிகளிலிருந்து அதன் நுகத்தை உடைத்தல் ஆகும்.

ஒரு சில அதிகாரங்களுக்கு பின் இவ்வாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது:

> **அப்பொழுது கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான். அதிகாலமே எழுந்திருக்கும்போது, இதோ, அவர்களெல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள். (ஏசாயா 37:36)**

தேவன் இந்த செத்த பிரேதங்களைப்போல அனைத்து கட்டுக்களையும் உங்கள் வாழ்வில் மற்றம் செய்ய விரும்புகின்றார். அவர் அவைகளை உடைத்து அவருடைய நுகத்தின் கீழ் உங்களை வரும்படி செய்கின்றார்.

## அது எவ்வாறு உடையும்?

> **உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும். அபிஷேகத்தின் நுகம் முறிந்துபோம். (ஏசாயா 10:27)**

-அது ஆழமான போதனையிற்கூடாக உடைக்கப்படமாட்டாது. -அது கல்வி மற்றும் சாஸ்திரங்களால் உடைக்கப்படமாட்டாது. - அது ஆலோசனையிற்கூடாகவும், அமைப்புக்களினூடாகவும், இனங்களிற் கூடாகவும் உடைக்கப்படமாட்டாது.

-அது தேவனுடைய வல்லமையான பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கூடாக உடைக்கப்படும்.

ஆனால் நுகத்தை உடைக்கும் தேவனுடைய குறிக்கோளானது உங்களுடைய வாழ்க்கையிலிருந்து உலகத்தின் ஜாதிகள் வரையும் விரிவாக்கப்பட்டுள்ளது. அவர் உலக ஜாதிகளின் நுகத்தை உடைத்து தரிசனத்தை நீங்கள் நிறைவேற்றுவதற்காக உங்கள் வாழ்க்கையிலுள்ள பாவக்கட்டின் நுகத்தை உடைக்க விரும்புகின்றார்:

> **தேசமனைத்தின்மேலும் நிர்ணயிக்கப்பட்ட யோசனை இதுவே. சகல ஜாதிகள்மேலும் நீட்டப்பட்டிருக்கிற கையும் இதுவே என்றார்.**
>
> **சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்? (ஏசாயா 14:26-27)**

## நுகத்தை உடைத்தலில் விளைவு

தேவன் கூறினார்:

> **அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும்... (ஏசாயா 58:6)**

பின்பு நுகத்தை உடைத்தலில் விளைவுகளை அவர் பட்டியலிடுகின்றார்:

> **அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார், நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார். நுகத்தடியையும், விரல் நீட்டுதலையும், நிபச் சொல்லையும், நீ உன் நடுவிலிருந்து அகற்றி,**
>
> **பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப்போலாகும்.**
>
> **கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமா-வைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்: நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.**
>
> **உன்னிடத்திலிருந்து தோன்றினவர்கள் பூர்வமுதல் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள். தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய். திறப்பானதை அடைக்கிறவன் என்றும், குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய். (ஏசாயா 58:9-12)**

பாவக்கட்டின் நுகத்தை உடைத்தலில் விளைவுகளானது:

-நீங்கள் தேவனுடைய சத்தத்தை அறிவீர்கள். நாம் கூப்பிடுவோம், கர்த்தர் பதில் தருவார், "இதோ, நான் இருக்கின்றேன்." (வசனம் 9)

-நீங்கள் உங்களுடைய தரிசனத்திலே நிறைவேற்றுவதில் சித்தியடைவீர்கள். அந்தகாரத்தில் உங்களுடைய வெளிச்சம் உதித்து, முன்னேற்றங்களை பேசும். (வசனம் 10)

-தேவன் உங்களை தொடர்ந்தும் நடத்துவார். (வசனம் 11)

-அவர் உங்களை திருப்பியாக்குபவராக இருப்பார். (வசனம் 11)

-நீ பெருகுவாய். (வசனம் 11-12)

-நீ கனிகளை தரும் நீர்ப்பாச்சலான தோட்டத்தைப்போலிருப்பாய். நீ பெருகி, ஆவிக்குரிய உலகத்தில் நீ உருவாக்குபவர்களும் பெருகுவார்கள். அவர்கள் சரியான அஸ்திபாரத்தில் பழைய கட்டமைப்புக்களை கட்டி எழுப்புவார்கள்.

இயற்கையான உலகில் தேவன் இஸ்ரவேலருக்கு வாக்குறுதியளித்தார்:

**வெளியின் விருட்சங்கள் தங்கள் கனியைத்தரும். பூமி தன் பலனைக் கொடுக்கும். அவர்கள் தங்கள் தேசத்தில் சுகமாயிருப்பார்கள். நான் அவர்கள் நுகத்தின் கயிறுகளை அறுத்து, அவர்களை அடிமைகொண்டவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கும் போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள். (எசேக்கியேல் 34:27)**

ஆவிக்குரிய உலகில் இதே நிலையும் உண்மையானது. நுகமானது உடைக்கப்படலே ஆவிக்குரிய பெருகுதலின் விளைவாகும்.

பழைய வலைப்பின்னல் போதாது, உடைந்து, வெறுமையாயிருக்கின்றது. மாபெரும் அறுவடையை அதனால் ஏற்படுத்தமுடியாது. பழைய நுகமாகிய பாரம்பரியம், இனம், சுய-பிரயாசம், கவலைகள் உடைக்கப்படல் வேண்டும். பாவமுள்ள மனிதனுக்கும், நீதியுள்ள தேவனுக்கும் இடையில் இடைவெளியை குறைப்பதற்கு புதிய அஸ்திபாரங்கள், புதிய நுகங்கள், புதிய வலைப்பின்னல் அவசியமாகின்றது. இந்த தரிசனத்தை நுகத்தை உடைக்கும் அபிஷேகத்தை அனுபவித்த மனிஷர் மற்றும் மனுஷிகளினாலேயே மாத்திரமே நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. பாவக்கட்டின் மூன்று நுகங்கள் என்ன?

--------------------------------------------------- --------------------------------------------------- ---------------------------------------------

3. தேவனுடைய நுகத்தை விபரிக்கும் மூன்று வார்த்தைகளை பட்டியலிடுங்கள்.

--------------------------------------------------- --------------------------------------------------- ---------------------------------------------

4. தேவனுடைய நுகத்திற்கும், பாவக்கட்டின் நுகத்திற்கும் இடையிலான இடைவெளியை அதிகரிப்பதற்கு நீங்கள் மேற்கொள்ள வேண்டிய மூன்று படிமுறைகள் என்ன?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. நுகத்தை உடைத்தலின் மூலம் ஏசாயா 58 அதிகாரத்தில் பதியப்பட்டுள்ள ஐந்து விளைவுகளை பட்டியலிடுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

தேவனுடைய வேலையை செய்வதிலிருந்து உங்களை தவிர்த்த பாவக்கட்டுக்களின் நுகங்கள் எவை?

.................. பாவம்

.................. இனம்

.................. பயம்

.................. இயற்கையான தாலந்துகள் மற்றும் இயலுமைகள் இன்மை

.................. சட்டம்

.................. சுய-பிரயாசம்

.................. வேறு:..........................................................................................

இந்த பகுதிகளை வாசியுங்கள்: ஏசாயா 14:24-27

இந்த வாக்குத்தத்தத்தை எடுத்துக்கொள்ளுங்கள்: ஏசாயா 10:27

இந்த ஜெபத்தை செய்யுங்கள்:

கர்த்தாவே, என்னுடைய ஆவியில் பிறப்பித்த ஆவிக்குரிய அறுவடையின் தரிசனத்திற்காக நான் நன்றி செலுத்துகின்றேன்.

என்னுடைய வாழ்க்கையிலுள்ள அனைத்து பாவக்கட்டையும் உடைக்கும்படி நான் உம்மிடம் கேட்கின்றேன். இயேசுவின் நாமத்தினால் இந்த ................ .................... ................ மற்றும் .................... நுக கட்டுக்களை உடைத்தருளும். (உங்களுடைய வாழ்க்கையில் காணப்படும் நுகங்களை குறிப்பிடுக).

இயேசுவோடுகூட என்னில் நுகத்தை ஏற்படுத்தும். மாபெரும் அறுவடையை என் வாழ்வில் கொண்டுவரும் புதிய வலையமைப்பை உருவாக்கும்.

அனைத்து பாவகட்டுக்களை உடைத்த அபிஷேகத்திற்காக இப்பொழுது நான் உமக்கு நன்றி செலுத்துகின்றேன்.

இயேசுவின் நாமத்தினாலே,

ஆமேன்

## அதிகாரம் பத்து

# ஜாதிகளை ஆசீர்வதித்தல்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ ஜாதிகளை ஆசீர்வதிக்கும்படி ஆபிரகாமிற்குள் ஏற்படுத்தப்பட்ட ஆவிக்குரிய தராதங்களை இனங்காணவும்,
- ☐ நீங்கள் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் வாரிசு என்பதை உணர்ந்து கொள்ளவும்,
- ☐ வாரிசு என்னும் ரீதியில் உலகத்தின் தேசங்களை ஆசீர்வதிக்கும் உங்களுடைய பொறுப்பை விளங்கிக்கொள்ளவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின் படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். (கலாத்தியர் 3:29)**

## அறிமுகம்

பல ஜாதிகளுக்கு தகப்பனாக இருக்கும்படிக்கும் தேவனால் ஆபிரகாம் தேர்தெடுக்கப்பட்டான். அவனுக்கூடாக பூமியிலுள்ள அனைத்து ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்:

> **நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிக-ளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். (ஆதியாகமம் 22:18)**

ஆபிரகாமிற்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் சந்ததியானது அனைத்து விசுவாசிகளிற்கும் உரியது என புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகின்றது. “சந்ததி” என்பது அவனிலிருந்தான சந்ததி என அர்த்தப்படும்:

> **ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக.**
>
> **மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது.**
>
> **அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். (கலாத்தியர் 3:7-9)**

நீங்கள் இந்த சந்ததியாயிருக்கின்றீர்கள், ஏனென்றால் இயேசு கிறிஸ்துவிற்கூடாக நீங்கள் ஆபிரகாமின் வித்தாயிருக்கின்றபடியினாலே ஆகும்:

> **நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். (கலாத்தியர் 3:29)**

ஆபிரகாமின் வித்தின்மூலம் இரட்சிப்பென்னும் வாக்குத்தத்தத்தின் சந்ததியாய் நீங்கள் இருக்கின்றீர்கள். ஆனால் இந்த சந்ததியோடு நற்செய்தியாகிய சுவிசேஷத்தோடு உலக ஜாதிகளை ஆசீர்வதிக்கும்படி நீங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளீர்கள்.

உம்முடைய சுதந்திரத்தை பெற்றுக்கொள்ளும்படியாக உமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது:

> **என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன். (சங்கீதம் 2:8)**

ஆபிரகாமிற்கூடாக தேசத்தின் ஜாதிகள் ஆசீர்வதிக்கப்படல் வேண்டும். இயேசுவிற்கூடாக ஜாதிகளும் உங்களுடைய சுதந்திரம் தான்.

## ஆவிக்குரிய தராதரங்கள்

ஜாதிகளை ஆசீர்வதிக்கும்படியாக ஆபிரகாமிடமிருந்து ஆவிக்குரிய தராதங்களும், இந்த தராதரங்கள் ஆவிக்குரிய அறுவடையின் தரிசனத்திற்கு எவ்விதம் தொடர்புபடுகின்றது எனவும் கீழே தரப்பட்டுள்ளன:

### அவன் விசுவாசத்தில் வல்லவனானான்:

ஆபிரகாம் தேவன் காட்டிய தரிசனத்தை நம்பினான். அவன் தனக்கூடாக தேவன் உலகத்தின் ஜாதிகளை ஆசீர்வதிப்பார் என முழுமையாக விசுவாசித்தான்:

> **தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனைமகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். (ரோமர் 4:21)**

அறுவடையின் தரிசனம் உண்மையாகுவதற்கு, நீங்கள் முழுமையாக விசுவாசிக்க வேண்டும். தேவன் அபரிதமான அறுவடையை வாக்குப்பண்ணியுள்ளார். அவர் பல உபாயங்களையும், வழிகளையும் உருவாக்கியிருக்கின்றார். நீங்கள் உலக ஜாதிகளை ஆசீர்வதிக்கும்படியாக வேலையாட்களாய் அழைக்கப்பட்டுள்ளீர்கள்.

### அவன் ஆவிக்குரிய காரியங்களை மூலாதாரமாக கொண்டார்:

ஆவிக்குரிய உலகில் புலனாகாததொன்றில் ஆபிரகாம் தனது முழு வாழ்க்கையையும் மூலாதாரமாக கொண்டார்.

தேவன் ஆபிரகாமிற்கு அழகான தேசத்தை வாக்குபண்ணியிருந்தார், இன்னும் தான் அந்த நாட்டில் கால் வைக்காதிருந்த நிலையில்:

> **இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப்பிள்ளையில்லாதிருக்கும்போது: உனக்கும் உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும்**

**இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணினார். (அப்போஸ்தலர் 7:5)**

ஆபிரகாமிற்கு காணாத தேசம் வாக்குப்பண்ணப்பட்டது. தனக்கு கிடைக்காத மகனிற்கு அது வாக்குப் பண்ணப்பட்டது. இன்னும் ஆபிரகாம் தேவனை சந்தேகப்படவில்லை. தன்னுடைய எதிர்கால சந்ததியிலே தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும்பொருட்டு தேவனுடைய திட்டத்தில் தன் வாழ்க்கையை மூலாதாரகமாக கொண்டார்.

அறுவடையின் தரிசனமானது இயற்கையில் நித்தியமானது. கண்ணிற்கு புலனாகாத அதில் உங்களுடைய முழு வாழ்க்கையையும் மூலாதாரமாக அதில் செலவழிப்பீர்கள். ஆனால் விளைவானது நித்தியமானது. நீங்கள் தரிசனத்தை நிறைவேற்றும்போது, சந்ததியானது ஆசீர்வாதம்பெறும்படிக்கு வருவார்கள்.

## அவன் அழைப்பிற்கு கீழ்ப்படிந்தான்:

பிற்காலத்தில் சுதந்திரமாக கிடைக்கப்போகும் இடத்திற்கு வரும்படியாக ஆபிரகாம் தேவனால் அழைக்கப்பட்டபோது, அவன் கீழ்ப்படிந்தான்:

**விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். (எபிரெயர் 11:8)**

அறுவடையின் தரிசனத்திற்கு அழைக்கப்பட்டால் மாத்திரம் போதாது. அந்த அழைப்பிற்கு கீழ்ப்படிவாக நீங்கள் உத்தரவு அருளவேண்டும்.

**நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிக-ளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். (ஆதியாகமம் 22:18)**

## அவன் தனிமையாக நின்றான்:

ஆபிரகாமோடு தேவன் பேசினார்:

**உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப்-பாருங்கள். அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வ-தித்து, அவனைப் பெருகப்பண்ணினேன். (ஏசாயா 51:2)**

ஆபிரகாம் தனிமையாக அழைக்கப்பட்டான். அழைப்பிற்கு பதிலளிப்பதற்கு அவன் தன் நாட்டையும், தன் குடும்பத்தையும் விட்டுவிடவேண்டியதாயிற்று.

நீங்கள் தேவனால் இரட்சிப்பிற்கு அழைக்கப்படும்போது அது ஓர் தனிப்பட்ட காரியம். ஒவ்வொரு மனிதர்களும் தனிப்பட்டரீதியில் அவ்வழைப்பிற்கு பதிலளிக்க வேண்டும். அந்த அழைப்பானது அறுவடை நிலத்தோடு ஒத்ததாகும். ஆபிரகாமைப்போல நீங்களும் தனியாக அழைக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் ஒரு தீர்மானம் எடுக்கவேண்டும். தரிசனத்திற்கு பதிலளித்தலானது வீட்டையும், குடும்பத்தையும் விடுதலோடு சம்பந்தப்படுகின்றது. இறுதியாக இன்னும் தரிசனமில்லாத விசுவாசிகளிடத்திலிருந்து காலடியெடுத்து வைக்கும் செயற்பாட்டுடன் சம்பந்தப்படுகின்றது.

## அவனுக்கு ஆவிக்குரிய தரிசனம் இருந்தது:

ஆபிரகாமிற்கு ஆவிக்குரிய தரிசனம் இருந்தது:

> **ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான். (எபிரெயர் 11:10)**

அவனுடைய தரிசனமானது ஆவிக்குரிய காரியங்களில் சார்ந்திருந்தது. அவனுடைய தரிசனத்தின் நகரத்தை கட்டுபவர் தேவனே ஆவார். அது அவரை கஷ்டமான பூமியின் மத்தியில் இருக்கவும், கூடாரங்களில் வசிக்கவும், அவனுடைய வீட்டையும் குடும்பத்தையும் பிரிக்கவும் ஏற்படுத்தியது. தரிசனமானது அவனுடைய வாழ்க்கையை மாற்றியது.

அறுவடையின் தரிசனமானது உங்களுடைய வாழ்க்கையை மாற்றுகின்றது. நீங்கள் மீண்டும் இதைப் போலவே இருக்கப்போவதில்லை. வாழ்க்கையில் நிலையற்ற காரியங்களில் நீங்கள் உள்ளடங்கப் போவதில்லை. நீங்கள் நித்திய நிலையை எதிர்பார்க்கின்றீர்கள்.

## அவன் தேவனை அறிந்த சிநேகிதனாயிருந்தான்:

ஆபிரகாம் "தேவனுடைய சிநேகிதன்" என அழைக்கப்பட்டான்:

> **அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று, அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். (யாக்கோபு 2:23)**

தரிசனத்தை நீங்கள் நிறைவேற்றுவதற்கு தேவனோடு தனிப்பட்ட நெருங்கிய உறவு இருத்தல் அவசியமாகும். அவருடைய வழிகளை நீங்கள் கற்று, அவருடைய வார்த்தையை கேட்க வேண்டும். தேவனோடு சிநேகிதனாக இருக்க வேண்டும்.

## அவன் முழுவதுமாக நம்பிக்கையாயிருந்தான்:

பவுல் ஆபிரகாமைக்குறித்து பேசுகின்றார்:

> **உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். (ரோமர் 4:18)**

மகன் இல்லாத நிலையிலும் கூட, அநேக ஜாதிகளுக்கு தகப்பனாவாய் என்னும் வாக்குத்தத்தத்தை ஆபிரகாம் பெற்றான். இயற்கை வழியாக காணும்போது அது நம்பிக்கையற்று உள்ளது. ஆனால் நம்பிக்கையற்ற நிலையிலும்கூட ஆபிரகாம் நம்பிக்கையோடு விசுவாசித்தான்.

உங்கள் நிலை எதுவாக இருந்தாலும் சரி, உங்களது நிலை எவ்வளவு நம்பிக்கையற்றிருந்தாலும் சரி, அறுவடையின் நிலத்திற்கு தேவன் உங்களை அழைத்தால், அது பூர்த்தியாகும் என அறியுங்கள்.

நம்பிக்கையற்ற நேரங்களில் "அவர் அளித்த வாக்குத்தத்தங்களை, அவரால் நிறைவேற்ற முடியும்" என நம்பிக்கைகொள்ளுங்கள் (ரோமர் 4:21).

## அவனுக்கு பலமான நம்பிக்கையிருந்தது:

> **தேவனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனைமகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். (ரோமர் 4:20-21)**

தரிசனத்தை கண்டு அது நடைபெறும்முன்னே தேவனின் நிறைவேற்றுதலை மகிமைப்படுத்தும் விசுவாசம் ஆபிரகாமிற்கு இருந்தது. தேவன் வாக்குப்பண்ணியதை அனைத்தையும் செய்ய அவரால் முடியும் என அவன் உறுதியாக நம்பினான் (ரோமர் 4:20).

உங்களை அழைத்த தேவனுடைய மிகப்பெரிதான தரிசனமானது உதவிசெய்தலாகும்... மூன்று மில்லியன் மக்கள் இன்னும் சுவிசேஷ செய்தியை பெறவில்லை. அவர்கள் புறஜாதிகள். அவர்கள் உன்னுடைய சுதந்திரவாளிகள். உனக்கூடாக அவர்கள் ஆசீர்வதிக்கப்படவேண்டும்.

தேவனுடைய வாக்குத்தத்தத்தைகுறித்து தளரவேண்டாம். உங்களுக்கு முன்னாலுள்ள மிகப்பெரிதான கடமையை பார்க்கவேண்டாம், ஆனால் தேவனுடைய கிருபையை பாருங்கள். தேவன் அபரிதமான ஆவிக்குரிய அறுவடைய வாக்குப்பண்ணியுள்ளார். ஆபிரகாமைப்போல் இருங்கள், அவன்...

> **நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். (ரோமர் 4:18)**

## அவன் நீதிமானாக இருந்தான்:

ஆபிரகாம் தேவனை விசுவாசித்ததால்:

> **ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. (ரோமர் 4:22)**

இந்த பாடத்தில் நீங்கள் ஏற்கனவே படித்த பிரகாரம், உங்களுடைய அறுவடை வேலைநிலையின் அஸ்திபாரம் நீதியாக இருக்கவேண்டும்.

## அவன் தாழ்மையாக இருந்தான்:

ஆபிரகாம் தேவனை மகிமைப்படுத்தினான் என பவுல் குறிப்பிடுகின்றார் (ரோமர் 4:21)

ஆபிரகாம் தேவனுக்கூடாகவே தரிசனம் நிறைவேறும் என அறிந்திருந்தான். அவன் தனியாக மகிமை-யை பெற்றான்.

உலக ஜாதிகளான அறுவடை நிலங்களில் மாபெரும் தரிசனத்தை தேவன் உங்களுக்கு கொடுத்-துள்ளார். ஆனால் அந்த நிறைவேறுதல் அவருக்கூடாகவே வரும். அறுவடையில் விளைவாகவும், தரிசனத்திற்காகவும் நீங்கள் மகிமையை பெறமுடியாது. தரிசனம் நிறைவேறும்போது மகிமை தேவனுக்கே செல்லுதல் வேண்டும்.

## அவன் சமாதானம் பண்ணுகின்றவனாயிருந்தான்:

ஆதியாகமம் 13 ம் அதிகாரத்தில் ஆபிரகாம் மற்றும் லோத்தின் வேலையாட்களுக்குள் நீரைக் குறித்தான பல முரண்பாடுகள் காணப்பட்டன. ஆபிரகாம் இப்பிரச்சினையிற்கு சமாதான தீர்வுகளை கொண்டுவந்தார்.

இயேசுவினுடைய பிறப்பின்போது தேவதூதனால் சொல்லப்பட்ட செய்தி சமாதானத்தில் ஒன்றாகும். சமாதானத்தின் செய்தியாக நீங்கள் ஜாதிகளுக்கு சுவிசேஷம் செல்லும்போது அது தேவனிற்கூடாக மட்டுமே உண்மையான சமாதானம் கிடைக்கும்.

## அவன் தேவனுடைய சித்தத்தை செய்ய முற்பட்டான்:

தனக்கும் தேவனுக்கும் இடையிலான உடன்படிக்கையின் அடையாளமாகிய விருத்தசேதனம் குறித்து

தேவன் ஆபிரகாமோடு பேசும்போது, வேதாகமம் கூறுகின்றது தேவன் பேசிய அதே நாளில், அவன் வீட்டு மனுஷர்கள் எல்லாரும் விருத்தசேதனம்பண்ணப்பட்டார்கள் (ஆதியாகமம் 17).

சில காலத்திற்கு பின் ஆபிரகாமிற்கும், அவன் மனைவி சாராளுக்கும் பிள்ளையுண்டாயிருக்கும் என்னும் அவருடைய வாக்குத்தத்தத்தை தேவன் நிறைவேற்றினார். ஈசாக்கு பிறந்தபின், தேவன் ஆபிரகாமை சோதித்தார். அவர் அவனது மகனை பலியிடுமாறு கூறினார் (ஆதியாகமம் 22).

ஈசாக்கிற்கூடாகவே எதிர்காலத்தில் தேவனுடைய வாக்குத்தத்தம் உண்டாயிருக்கும். ஆபிரகாமின் பரம்பரக்கு வரப்போகின்றவர்களுக்கு அவனே சுதந்திரவாளியாக இருப்பான். உலகத்திற்கு ஆசீர்வா-தமாக இருப்பதற்கு ஈசாக்கு இஸ்ரவேல் ஜாதியிற்கு கொண்டுவரப்படல் வேண்டும். இவ்வாறிருந்தும் தனது மகனை பலியிடும்படி தேவன் ஆபிரகாமை கேட்டார்.

வேதாகமம் ஆதியாகமம் 22:3ல் பதியப்பட்டுள்ளதாவது, ஆபிரகாம் தேவனுடைய செய்தியை பெற்றபின், "அதிகாலையில் எழுந்து" கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தான். தேவனுடைய சித்தம் கடினமாக இருந்த போதும், ஆபிரகாம் கீழ்ப்படிய தாமதிக்கவில்லை. தேவன் பேசியவுடன் அவன் உடனடியாக செயல்பட்டான். அவனுடைய கீழ்ப்படிதலால், தேவன் இன்னொரு பலியை ஏற்படுத்தினதோடு, ஈசாக்கினுடைய வாழ்க்கை விடுவிக்கப்பட்டது.

அறுவடை நிலத்திலுள்ள வேலையாள் வேலைக்காரனாக மட்டுமல்ல, தேவன் பேசியவுடன் செயல்பட வேண்டும். நீங்கள் கீழ்ப்படிதலினூடாக உங்கள் காலடிகளை எடுத்துவைக்கும்போது, தேவன் உங்களுக்கு சார்பாக எப்பொழுதும் செயற்படுவார்.

ஈசாக்கை பலியிடுமாறு கூறிய தேவனுடைய கட்டளை சம்பந்தமாக ஆபிரகாம் ஒருபோதும் எதுவும் கேட்கவில்லை என்பது சுவாரசியமான குறிப்பாகும். அவன் அதை துதித்தல் என அழைத்தான். துதியின் மிகவும் உச்சகட்ட நிலை ஈசாக்கை பாராமல், தேவனுக்கு நாம் அன்பு செலுத்துவதாகும்.

தேவன் உங்களுக்கு ஓர் தரிசனத்தை கொடுத்தார், அது உங்கள் வாழ்க்கையை மாற்றியது. ஆனால் எப்பொதாவது தரிசனம் தேவனிலும் மிக முக்கியமானதாக மாறமுடியுமா? உங்களுடைய முதலாவது கடமை அவரில் உறவு வைத்திருக்கவேண்டும்.

உயர்நிலை தியானத்தில் ஈசாக்கின் காரியங்களினாலா அல்லது தேவனுடைய காரியங்களினாலா உண்டாயிருக்கின்றது என்று அறிய தேவன் ஆபிரகாமை சோதித்தார். உங்களுடைய தியானங்களில் தேவனே எப்பொழுதும் உண்டாயிருக்கவேண்டும். தரிசனம் தந்தவரின் இடத்தில் தரிசனத்தை வைத்-தலாகாது.

## அவன் தேவனோடு தொடர்பாயிருந்தான்:

தேவனோடு பரிபூரணமாய் தொடர்புபட்டிருப்பதற்கு ஏதுவான சாதாரண வாழ்க்கையில் ஆபிரகாம் வாழ்ந்-தான். அவன் தேவனது கட்டளையை உடனடியாக செயற்படுத்தினான் (ஆதியாகமம் 12).

## அவன் ஒருபோதும் பின்னினட்டு பார்க்கவில்லை:

ஆபிரகாம் தான் விட்டுவந்த பழைய வாழ்க்கையை நினைத்து பார்க்கவில்லை, ஆனால் தேவனால் செய்யக்கூடியதான புதிய காரியங்களை பார்த்தான்:

> **விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். (எபிரெயர் 11:6)**

### அவன் வெளிப்படுத்தப்பட்ட அறிவோடு நடந்தான்:

ஆபிரகாமின் மனிதனுக்கேற்ற காரியங்களுக்கு பதிலாக தேவனுடைய வெளிப்படுத்தலுக்கேற்ப கிரியை செய்தான்:

> **நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? (ஆதியாகமம் 18:18)**

### அவன் தனக்குரிய இயற்கையின் இயலுமைகளை பார்க்கவில்லை:

"சரீரஞ்செத்தவனென்ற" ஒருவனாலேயே ஜாதிகள் பெருகும் என தேவன் வாக்குப்பண்ணினார். இயற்கையில் தேவனுடைய திட்டத்தை செயற்படுத்த ஆபிரகாமுக்கு இயலுமை இருக்கவில்லை:

> **ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப் போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள். (எபிரெயர் 11:12)**

### அவன் தேவனை பார்த்தான்:

ஆபிரகாம் பலிபீடத்தை கட்டி தேவனுடைய நாமத்தை தொழுதுகொண்டான் என ஆதியாகமம் 12ம் அதிகாரத்தில் பதியப்பட்டுள்ளது.

### அவன் மற்றவர்களுக்கான பொறுப்பை எண்ணினான்:

ஆதிகாயமம் 14ம் அதிகாரத்தில் ஆபிரகாம் மற்றும் லோத்தினுடைய கதைகளை வாசியுங்கள். "உலக கிறிஸ்தவர்களாக" நீங்கள் இருக்கவேண்டுமாயின், உங்களை சுற்றியுள்ளவர்களின் தேவைகளுக்கான பொறுப்பை நீங்கள் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

### அவன் தாராள மனமுடையவனாயிருந்தான்:

ஆபிரகாம் தனக்கிருந்த எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்தினான்:

> **உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். (ஆதியாகமம் 14:20)**

### அவன் சுதந்திர தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்தான்:

> **விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான். (எபிரெயர் 11:9)**

அவன் மற்றவர்களுடைய கலாச்சாரங்களை மதித்தான். உதாரணத்திற்கு, தன்னுடைய பூமியிற்கு முன்னால் இருந்த மனிதர்களுக்கு வந்தனம் செலுத்தினான்:

> **அப்பொழுது ஆபிரகாம் அத்தேசத்தாருக்கு வந்தனம் செய்து, (ஆதியாகமம் 23:12)**

## அவன் தன்னைப்போல் அர்ப்பணிப்புள்ள மனிதர்களை உருவாக்கினான்:

இது அவனுடைய வேலையாள் எலெயாசாரின் வாழ்க்கையில் காணப்பட்டது (ஆதியாகமம் 24).

## அவன் தேவனுக்கு மகிமையை செலுத்தினான்:

> **சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான்.**
>
> **அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு, நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று,**
>
> **வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்.**
>
> **வாலிபர் சாப்பிட்டதுபோக, என்னுடனே வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்னும் புருஷருடைய பங்குமாத்திரமே வரவேண்டும்ளூ இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக் கொள்ளட்டும் என்றான். (ஆதியாகமம் 14:21-24)**

எப்பொழுதும் நினைவிற்கொள்ளுங்கள், மகிமையானது எப்பொழுதும் தேவனுக்கே செல்லவேண்டும்.

## தரிசனம் நிறைவேறப்பெற்றது

ஆபிரகாம், ஆவிக்குரிய தரிசனத்தை பெற்ற ஓர் மனிதன்... உலக ஜாதிகளெல்லாம் அந்த மனி-தருக்கூடாகவே தான் ஆசீர்வதிக்கப்பட போகின்றது. அத்தோடு தரிசனமும் நிறைவேறப்பெற்றது:

> **ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப் போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள். (எபிரெயர் 11:12)**

ஆபிரகாமிற்கு தரிசனம் கொடுக்கப்பட்டபோது, அவனுடைய இறந்தகாலமும், நிகழ்காலமும் பெருகாதபடி இருந்தது. ஆனால் அவன் தன்னுடைய சொந்த சரீரத்தையும், சாராளுடைய சரீரத்தையும் செத்ததென்று ஏற்றுக்கொள்ளவில்லை.

சிலவேலை உங்களுடய கடந்த காலம் ஆவிக்குரிய ரீதியில் பெருகாதபடிக்கும், உங்களுடைய தற்காலம் கனிகொடாமலும் இருக்கலாம். ஆனால் இப்பொழுது அறுவடைக்குரிய தரினசத்தை பெற்றுள்ளீர்கள்.

ஆபிரகாமைப்போல, “வாக்குப்பண்ணிய அவர் அதை நிறைவேற்ற வல்லவராயிருக்கின்றார்” என்னும் விசுவாசத்தின் கண்களோடு எதிர்காலத்தை அறிந்து பாருங்கள்.

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. விசுவாசிகள் ஆபிரகாமின் சுதந்திரவாளிகள் என காட்டும் இரண்டு வசனங்களை தருக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. நாம் வாக்குத்தத்தத்தின் சுதந்திரவாளிகளாக ---------------------------------------- இருக்கின்றோம்.

4. நாம் ---------------------------------------- பொறுப்பின் சுதந்திரவாளிகளாக இருக்கின்றோம்.

5. உலக ஜாதிகளின் ஆசீர்வாதமாக இருந்து தரிசனத்தை நிறைவேற்ற ஆபிரகாமிற்கு இருந்த ஆவிக்குரிய தராதரங்களை பட்டியலிடுக.

| | |
|---|---|
| ------------------------------------------------------------------------ | ------------------------------------------------------------------------ |
| ------------------------------------------------------------------------ | ------------------------------------------------------------------------ |
| ------------------------------------------------------------------------ | ------------------------------------------------------------------------ |
| ------------------------------------------------------------------------ | ------------------------------------------------------------------------ |
| ------------------------------------------------------------------------ | ------------------------------------------------------------------------ |
| ------------------------------------------------------------------------ | ------------------------------------------------------------------------ |
| ------------------------------------------------------------------------ | ------------------------------------------------------------------------ |
| ------------------------------------------------------------------------ | ------------------------------------------------------------------------ |
| ------------------------------------------------------------------------ | ------------------------------------------------------------------------ |

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. உலகத்தின் ஜாதிகளை ஆசீர்வதிக்கும் ஆபிரகாமின் ஆவிக்குரிய தராதரங்களின் விளைவுகள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன. ஜாதிகளை ஆசீர்வதிக்கும் தரிசனத்தை நீங்கள் முழுமையாக நிறைவேற்றினால், உங்கள் வாழ்க்கையில் இதேவிதமான ஆவிக்குரிய தராதரங்களை வளர்த்துக்கொள்ளுவீர்கள். ஒவ்வொரு ஆவிக்குரிய தராதரங்களையும் பரீசீலிக்க. உங்களுக்குரிய சொந்த ஆவிக்குரிய வாழ்வில் நடைப்பெற்ற தராதரங்களின் நிகழ்வுகள் எந்தளவு என விளக்குக:

**தராதரங்கள்** | **உங்களுடைய சொந்த வாழ்வில் இந்த ஆவிக்குரிய தாராதரங்களின் அளவுகள் எவ்வளவு?**

விசுவாசத்தில் வல்லவனாயிருத்தல்

______________________________

ஆவிக்குரிய காரியங்களை மூலாதாரமாக கொண்டிருத்தல்

______________________________

கீழ்படிவு

______________________________

தனிமையாக நிற்றல்

______________________________

ஆவிக்குரிய தரிசனம்

______________________________

தேவனை அறிந்திருத்தல்

______________________________

நம்பிக்கை

______________________________

விசுவாசம்

______________________________

நீதி

______________________________

தாழ்மை

சமாதானம்

தேவனுடைய சித்தத்தை செய்தல்

தேவனோடுள்ள தொடர்பு

பின்னிட்டு பார்க்காமை

வெளிப்படுத்தப்பட்ட அறிவோடு நடத்தல்

இயற்கையின் இயலுமைகளை பார்க்காமை

தேவனை பார்த்தல்

மற்றவர்களுக்கான பொறுப்பை எண்ணுதல்

தாராள மனம்

தன்னைப்போல் அர்ப்பணிப்புள்ள மனிதர்களை உருவாக்குதல்

தேவனுக்கு மகிமையை செலுத்துதல்

பரதேசியைப்போலச் சஞ்சரித்தல்

2. இந்த ஆய்வின் அடிப்படையில், உங்களிடம் இல்லாத ஆவிக்குரிய தராதரங்களை அபிவிருத்தி செய்ய கீழ்காணும் இடங்களில் நீங்கள் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் என்ன?

என்னுடைய நாளாந்த வேதாகம படிப்பு:

என்னுடைய நாளாந்த ஜெப வாழ்க்கை:

என்னுடைய வீடும் குடும்பமும்:

என்னுடைய ஆலயம்:

என்னுடைய எதிர்கால திட்டங்கள்:

என்னுடைய அறுவடை தரிசனத்தின் பங்கு:

என்னுடைய நிதி:

## அதிகாரம் பதினொன்று

# தரிசனம் உண்மையாக மாறுதல்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

☐ அறுவடையாளர்களாக தேவன் அழைத்த தனிப்பட்டவர்களின் விதங்களை அடையாளம் காணவும்,

☐ அபரிதமான ஆவிக்குரிய அறுவடையின் தேவனுடைய வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்ளவும்,

☐ உங்கள் வாழ்வில் தரிசனத்தை உண்மையாக மாற்றிக்கொள்ளவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக: நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். (கலாத்தியர் 6:9)**

### அறிமுகம்

இந்த பாடத்தை தொடங்கியதில் இருந்து நீங்கள் தரிசனத்தை உண்மையாக மாற்றுதலுக்கான செயலின் அனுபவத்தை பெறதொடங்கியிருப்பீர்கள்.

அறுவடையின் தரிசனத்தின் பிறப்பிலிருந்து உலகத்தை தேவன் கண்ணோக்கும் விதமாக பார்த்து உலக ஜாதிக்கான அவருடைய குறிக்கோளை விளங்கியிருப்பீர்கள். அறுவடைய ஏற்படுத்துதல், உபாயங்கள், மாதிரிகள் மற்றும் அறுவடைக்கான வல்லமையுள்ள கருவிகள் போன்ற காரியங்களை நீங்கள் கற்றீர்கள். நீங்கள் பாவ மற்றும் பாரம்பரியத்தின் கட்டுக்களை உடைத்து, தேவனுடைய வல்லமையின் புதிய அனுபவத்தை பெற்றிருக்கின்றீர்கள்.

இந்த கடைசி அதிகாரத்தில் தரிசனமானது உண்மையாக மாறி அதன் நிறைவேறுதலில் நீங்கள் ஒரு பகுதியாக இருப்பீர்கள்.

## தேவன் யாரை உபயோகிப்பார்?

அறுவடையின் தரிசனத்தை நிறைவேற்ற தேவன் யாரை உபயோகிப்பார்? உலக ஜாதிகளுக்கிடையே சுவிசேஷத்தை விரிவாக்குவதற்கு எவ்விதமான மனிதர்களை அவர் அழைப்பார்?

உங்களுடைய வேதாகமத்தில் மாற்கு 16ம் அதிகாரத்தை வாசியுங்கள். இந்த கேள்விகளுக்கான விடைகள் இந்த அதிகாரம் கொண்டுள்ளது. இந்த அதிகாரத்தில் இயேசுவை பின்பற்றிய பெண்கள் அவருடைய இறந்த சரீரத்தை அபிஷேகிப்பதற்காக கல்லறைக்கு செல்லுதல் ஆகிய காரியங்களை கவனிப்போம். அவர்கள் கல்லறைக்கு வந்தபோது அவர்கள் கண்டார்கள்....

**அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து, வெள்ளையங்கி தரித்தவனாய் வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபனைக் கண்டு பயந்தார்கள்.**

**அவன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனா-கிய இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் உயிர்த்தெழுந்தார், அவர் இங்கேயில்லை, இதோ, அவரை வைத்த இடம். (மாற்கு 16:5-6)**

அந்த பெண்கள் நல்ல செய்தியை சீஷர்களோடு பகிர்வதற்கு சென்றார்கள். மகதலேனா மரியாளுக்கு இயேசு தரிசனமாக தோன்றியிருந்தாலும்கூட, அவர் உயிர்த்தெழுந்தார் என சீஷர்கள் நம்பவில்லை (மாற்கு 16:11) பிற்பாடு அந்நாட்டில் நடைபிரயாணம் போய்கொண்டிருந்த இரண்டு சீஷர்களுக்கு இயேசு காட்சியளித்தார். அவர்கள் மற்றவர்களுக்கு இதுகுறித்து சொல்லும்போது, அவர்கள் அதை நம்ப வில்லை (மாற்கு 16:12-13)

இறுதியாக இயேசு சீஷர்களுக்கு காட்சியளித்து....

**அதன்பின்பு பதினொருவரும் போஜனபந்தியிலிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்தும் இருதய கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார். (மாற்கு 16:14)**

அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்து இயேசு பேசியபின் அவர் கூறியதாவது:

**பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (மாற்கு 16:15)**

உண்மையிலேயே அவர்கள் தவறை செய்துவிட்டார்கள்! இந்த மக்களே அவருடைய உயிர்த்தெழு-தலை கொண்டாடுவதற்கு பதிலாக அவருடைய இறந்த உடலை அபிஷேகம் பண்ண சென்றவர்கள். இந்த மக்களே அவருடைய மாபெரும் வியாகுலத்தின் நேரத்தில் தூங்கி, மறுதலித்து பயத்தின் நேரத்தில் விட்டு ஓடியவர்கள்.

இந்த மனிதர்களே இயேசு தம்முடைய மரணத்திற்காகவும், உயிர்தெழுதலிற்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டவர்கள், ஆனாலும் அவர்கள் துன்பநேரத்தில் அவரை கைவிட்டு, அவருடைய உயிர்த்தெழுதலின் கண் சாட்சியை நம்ப மறுத்துவிட்டார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தின் காரண-மாக ஒரு நிமிடம் இயேசு அவர்களை திருத்தினார். அடுத்தது, உலக ஜாதிகளின் ஆவிக்குரிய அறுவடை நிலத்தின் தரிசனத்தை அவர்களுக்கு சவாலாக கொடுத்தார்.

இந்த சீஷர்களின் கரங்களில் சுவிசேஷத்திற்கான எதிர்காலத்தை அவர் எவ்வாறு கையளித்தார்?

ஏனென்றால் அவர்களுடைய நிலையைப்போல் அவர்களை அவர் பார்க்கவில்லை. அவர் அவர்களுடைய கடந்தகால செய்கைகளையோ அல்லது அவர்களுடைய எதிர்கால நிலைகளையோ பார்க்கவில்லை. அவர் அவர்களை பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரம்பியிருக்கும் போதான நிலையில் பார்த்தார்.

## தேவன் பயன்படுத்தும் மனிதர்கள்

தேவன் வரலாற்றில் அவருடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்திய மனிதர்களை நாம் பார்ப்போம்.

### யாக்கோபு:

சேஷ்ட புத்தரபாகத்தை மிகவும் அதிகமாக விரும்பி அதை தந்திரமாக பெற்ற யாக்கோபிலிருந்தும், அதை கொஞ்சமாக விரும்பி பயற்றங்கூழுக்காக அதை இழந்தவனுமாகிய ஏசாவிலிருந்தும் தேவன் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் அவர் யாக்கோபை உபயோகித்து இஸ்ரவேல் ஜாதியை கொண்டுவந்தார்.

### ஆபிரகாம்:

ஆபிரகாம் அநேக ஜாதிகளுக்கு தகப்பனாக இருந்தான். அவன் இந்த வெளிப்படுத்தலை தேவனிடமிருந்து பெற்றபோது, அவன் முகங்குப்புற விழுந்து தன்னுடைய அவிசுவாசத்தின்நிமித்தம் நகைத்தான் (ஆதியாகமம் 17:1-3). பிற்பாடு, விசுவாசத்தின் தந்தையாகிய இவன் எதிரிகளிடம் பொய் பேசி, தன்னுடைய உயிருக்கு பயந்ததின் நிமித்தம் சாராள் தன் சகோதரி என கூறினான். இவ்வாறிருந்தும், ஆபிரகாம் “தேவனுடைய சிநேகிதன்” என அழைக்கப்பட்டு, அநேக ஜாதிகளுக்கு தகப்பனானான்.

### மோசே:

அவனுடைய கீழ்ப்படிவின்மை வாக்குத்தத்த தேசத்திலிருந்து பிரித்தது, எவ்வாறாயினும் அவன் இரண்டு மில்லியன் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரமாக கொண்டுவந்து, தேவனுடைய திட்டத்தின்படி வனாந்திரத்திற்கூடாக வழிநடத்தினான்.

### தாவீது:

மற்ற மனிதனுடைய மனைவியை எடுத்து, தன்னுடைய பாவத்தை மூடுவதற்கு அவனை கொன்றான், எவ்வாறாயினும் அவன் “தேவனுடைய இருதயத்திற்கு அடுத்தவன்” என அழைக்கப்பட்டான், அவனுக்கு தேவன் இராஜ்ஜியத்தை கொடுத்தார்.

### கிதியோன்:

தேவன் இஸ்ரவேலரை விடுவிக்கும்படிய அழைத்த சமயத்தில் எதிரிகளுக்கு பயந்து கிதியோன் மறைவாக கோதுமையை போரடித்தான். (நியாயாதிபதிகள் 6).

## சாதாரண மக்கள்

தேவன் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற சாதாரண மக்களை பயன்படுத்தினார். இயேசு தனது முதலாவது அற்புதமான தண்ணீரிலிருந்து திராட்சைரசத்தை மாற்றும்போது, சாதாரண நீர் குவளைகளில் நிறைக்கும்படி சாதாரண மக்களையே கேட்டார். அவர் அப்பத்தையும் மீனையும் பெருக்கும்போது அதிக மக்களை போஷிக்கும்படியாக அதை சாதாரண மக்களுக்கே கொடுத்தார். லாசருவை உயிரோடு எழுப்புதல் என்னும், அவருடைய ஊழியத்தில் மாபெரும் அற்புதத்தை இயேசு செய்யும்போது, கல்லறையின் நுழைவாயிலிலிருந்த கல்லை அகற்ற சாதாரண மனிதரையே நாடியிருந்தார். லாசருவை உயிரோடு எழுப்பிய அந்த தேவனுக்கு வாசலிலிருந்த கல்லை அகற்றும்படியான வல்லமை இருக்க வில்லையா?

ஆம், ஆனால் தேவன் தன்னுடைய திட்டம் நிறைவேற்றுவதற்கு எப்பொழுதும் மனிதர்களை உபயோகித்தார். அவருடைய வழிகள் மனிதர்களாக இருந்தது. தேவன் சாதாரண மக்களை அழைத்து, அசாதாரண காரியங்களை செய்தார். அவர் மனிதர்களையும் மனுஷிகளையும் காண்போரிடமிருந்த பிரித்து, அவருடைய திட்டத்தில் பங்கேற்றினார்.

-சாதாரண மக்கள் தேவன் உம்மை உபயோகப்படுத்தமாட்டார் என உம்மை குறித்து எண்ணுகின்றார்கள்...
-அற்புதத்தின் ஒருபகுதியாக நீங்கள் இல்லை என சாதாரண மக்கள் உம்மை குறித்து எண்ணுகின்றார்கள்...
-அவரை விட்டு இழந்த அனைவர்களும்...

தேவன் உங்களுடைய நிகழ்கால மற்றும் இறந்தகால கிரியைகளை பார்ப்பதில்லை. நீங்கள் உங்களை பார்ப்பதுபோல் அவர் உங்களை பார்ப்பதில்லை. உலகத்தின் அறுவடை நிலத்திற்கான சவாலை நீங்கள் ஏற்றுக்கொண்டதின் பின் நீங்கள் உங்களை பார்க்கின்ற விதமாக அவர் உங்களை பார்க்கின்றார். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நீங்கள் நிரம்பியிருக்கின்றதான நிலையில் அவர் உங்களை பார்க்கின்றார்.

தேவன் உங்களுடைய விசுவாசம், கல்வி, தாலந்து மற்றும் ஆவிக்குரிய உங்களது நிலைகளின் அளவுகளில் அவர் சார்ந்திருக்கவில்லை. உங்களுடைய எவ்விதத்திலாகிலும் அவர் சார்ந்திருக்க வில்லை. உங்களுடைய வாழ்க்கையை முழுவதுமாக அவருடைய சித்தத்தாலும், குறிக்கோளாலும் சுற்றியிருக்கும்போது உங்களால் முடியுமென அவர் அறிந்தவற்றிலேயே அவர் சார்ந்திருக்கின்றார்.

மாபெரும் போதனைகளால் உலகத்திற்கான பூலோக சபைகள் அடையவில்லை. அறுவடையின் தரிசனத்தை பெற்று, தங்கள் சொந்த தோல்வியிலிருந்து தங்கள் கண்களை திறந்த மனிதர்களால் அது அடையப்பெற்றிருக்கின்றது. அவர்கள் இயற்கையில் பலவீனர்களாக இருந்தபோதிலும், ஆவியில் பலவான்களாயிருக்கின்றார்கள் என அறிந்திருக்கின்றார்கள். தேவன் வாக்குப்பண்ணினார்:

> **அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். (2 கொரிந்தியர் 12:9)**

## மாபெரும் அறுவடை

தரிசனத்தை பிடித்து, வேலையையும் தேவனுடைய சித்தத்தையும் நிறைவேற்றுபவர்களுக்கு, மாபெரும் அறுவடை வாக்குப்பண்ணப்பட்டுள்ளது:

> **விதைப்புச் சமாதானமுள்ளதாயிருக்கும், திராட்சச்செடி தன் கனியைத் தரும். பூமி தன் பலனைத் தரும், வானம் தன் பனியைத் தரும். இந்த ஜனத்தில் மீதியானவர்கள் இதையெல்லாம் சுதந்தரிக்கக் கட்டளையிடுவேன். (சகரியா 8:12)**

அவர் வனாந்திரங்களை பசுமையான சோலைகளாக மாற்றுகின்றார்:

> **அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த்தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றுகளா-கவும் மாற்றி, பசித்தவர்களை அங்கே குடியேற்றுகிறார். அங்கே அவர்கள் குடியிருக்கும் நகரத்தைக் கட்டி, வயல்களை உண்டாக்கி விதைத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டுகிறார்கள், அவைகள் வரத்துள்ள பலனைத்தரும். (சங்கீதம் 107:35-37)**

கொஞ்சமாய் கனிகொடுக்கும் பிரதேசத்திலும் தேவன் அறுவடையை கொண்டுவருவார்:

> **பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒரு பிடி தானியம் விதைக்கப்பட்டிருக்கும். அதின் விளைவு லீபனோனைப்போல அசையும். பூமியின் புல்லைப்போல நகரத்தார் செழித் தோங்குவார்கள். (சங்கீதம் 72:16)**

அவருடைய திட்டத்திற்கு வயது தடை இல்லை:

**அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள். (சங்கீதம் 92:15)**

இந்த தரிசனத்தின் பிறப்பிற்காக நீங்கள் வெளியில் சென்று அழலாம், ஆனால்...

**கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.**

**அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான். ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான். (சங்கீதம் 126:5-6)**

இந்த மாபெரிய இறுதி நேர அறுவடையை உங்களால் கிரகித்துக்கொள்ள முடியாது:

**களஞ்சியத்தில் இன்னும் விதைத்தானியம் உண்டோ? திராட்சச்செடியும் அத்திமரமும் மாதளஞ்செடியும் ஒலிவமரமும் கனிகொடுக்கவில்லையே. நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லுகிறார் என்றான். (ஆகாய் 2:19)**

தேவன் அறுவடையை குறித்து பேசுகின்றபடியால் அது மாபெரிதாக தொடர்கின்றது:

**இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், திராட்சப்பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனையும் தொடர்ந்துபிடித்து, பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிறதும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஆமோஸ் 9:13)**

இன்னொரு அறுவடை வரும்வரைக்கும் உங்கள் அறுவடையை இன்னும் போரடித்து முடிக்கவில்லை.

இதன் காரணமாகவே வேலையாட்கள் சீக்கிரமாக தேவைப்படுகின்றனர். அறுக்கின்றவனை விதைக்கின்றவன் முந்தி விடுகின்றான். அறுவடையின் தரிசனம் உங்கள் முன்னால் உள்ளது.

-மாபெரும் அறுவடையின் வாக்குறுதியை பெற்றுக்கொள்ளுங்கள்.
-உங்களுடைய சொத்தாக பிற சமயத்தவர்களை பெற்றுக்கொள்ளுங்கள்.
-அறுவடைக்கான உலகம் உங்கள் முன்னாலுள்ளது. உங்கள் கண்களை உயர்த்தி பாருங்கள்.

## இறுதியான அறுவடை

தேவன் அவருடைய தூதர்களை கட்டளையிடும்போது இறுதியாக அறுவடை செய்யும் நாள் வரும்:

**அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும். (வெளிப்படுத்தின விசேஷம் 14:15)**

இந்த உலகின் எங்கிலும் இச்செயற்பாடு வரும்.

ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, ஆசியா, வடதென் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் கடலிலுள்ள தீவுகளிலிருந்து அறுவடை வரும்... அறுவடையாளர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தின் அறையில் சேர்ப்பார்கள்.

மனிதர்களிடத்தில் ஏற்பட்ட தரிசனமானது உண்மையானது.... தரிசனத்தை மையமாக கொண்டு

வாழ்பவர்கள் இருப்பதற்காக காரணம் அவர்களே. இந்த வாக்குறுதிகளோடு இறந்தவர்கள் பூமியில் அறுத்த குருத்தோலையுடன் அங்கு வருவார்கள்:

**இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.**

**அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்பற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு:**

**ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக ஆமென், என்றார்கள்.**
**(வெளிப்படுத்தின விசேஷம் 7:12)**

## சுய பரீட்சை

1. மனன வசனத்தை எழுதுக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. மாபெரும் அறுவடையை வாக்குறுதியளிக்கும் வேதாகத்தின் மூன்று வசனங்களை பட்டியலிடுக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இந்த அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்ட தமது தோல்வியிலும் கூட தேவன் பயன்படுத்திய ஐந்து மனிதர்களின் பெயர்களை தருக.

------------------------------------------------------------------ ----------------------------------------------------------------------

------------------------------------------------------------------ ----------------------------------------------------------------------

----------------------------------------------------------

4. தேவனுடைய தூதர்களால் உலகத்திற்கு நடைபெறும் இறுதி அறுவடையை கூறும் வசனம் என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## சுய பரீட்சைக்கான விடைகள்

**அதிகாரம் ஒன்று:**

1. தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள். (நீதிமொழிகள் 29:18)

2. ஆவிக்குரிய தரிசனம் பௌதீக உலகைத்தாண்டி ஆவிக்குரிய உலகத்தை பார்ப்பதைக் கொண்டிருக்கும். அது உங்களது வாழ்வில் தேவனுடைய தெய்வீக நோக்கத்தை புரிந்து கொள்ள உதவிசெய்யும். ஆவிக்குரிய தரிசனம் நீங்கள் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகின்ற காரியத்தைக் குறித்த தெளிவான படத்தை வழங்கிய பின்னர், கிறிஸ்தவ வாழ்க்கையின் படியை நோக்கிய இலக்கையடைவதற்கு வழிநடத்துகின்றது.

3. 2,3,1,4.6,5

4. 3,1.4,2

**அதிகாரம் இரண்டு:**

1. அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். (யோவான் 4:35)

2. இயற்கையானது ஆவிக்குரிய சத்தியத்திற்கு இணையானது என்னும்போது தேவன் ஆவிக்கு-ரிய சத்தியத்தின் பொருளை விளங்கப்படுத்த இயற்கையான உதாரணங்களை பாவிக்கின்றார் என்பதாகும்.

3. அறுவடையின் உதாரணம்

4. நிலம் உலகம். மத்தேயு 13:38

5. நீங்கள் பின்வரும் காரியங்களை பட்டியலிடலாம். அறுவடையின் உதாரணத்தை சீடர்களால் இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.
   - இஸ்ரவேலரின் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது.
   - இஸ்ரவேலருடைய சமய பண்டிகையும் அறுவடையை மையமாக கொண்டது.
   - வருடம் முழுவதும் அறுவடையின் நடவடிக்கைகள் இடம்பெறும்.
   - விதைப்பு மற்றும் அறுப்பின் பௌதீக கொள்கைகள் ஆவிக்குரிய அறுவடையிலும் பிரயோகிக்கக்கூடியவையாகும்.
   - சீடர்கள் இயற்கையான அறுவடையின் உதாரணத்தின் பிரதிநித்துவத்தை இனங்கண்டார்கள்.

6. யோவான் 4:35

   நீங்கள் சொல்லாதிருங்கள் : அறுவடையை பற்றி இப்போது பேச வேண்டாம்.
   இன்னும் நான்கு மாதங்கள்இருக்கின்றது: தாமதமாக வேண்டாம்.
   நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: இயேசு சொன்னதை கவனியுங்கள்.

கண்களை ஏறெடுங்கள்: கவனச்சிதறல்களிலிருந்து திரும்புங்கள்.
வயல்நிலங்களை பாருங்கள்: தேவனுடைய கண்களால் உலகை பாருங்கள்.

**மூன்றாம் அதிகாரம்:**

1. அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக்கிறது. (சங்கீதம் 66:7)

2. 3 பில்லியன் மக்கள்

3. 2,000 அதிகமான மொழிகள்

4. உலகத்தை பார்க்கின்றபோது ஆவிக்குரிய அறுவடையின் நிலங்களில் வேலையாட்களின் அவசியமுண்டு

5. பாவம்

6. அ. பொ. ஆ.பொ. இ. உ.

7. உலகக் கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்வின் ஒவ்வொரு நாளையும் சுவிஷேசத்தினால் உலகை, ஆதாயப்படுத்த ஆர்வம் கொள்வார்கள்.

**நான்காம் அதிகாரம்:**

1. காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று,

   தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1:9-10)

2. அ. பொ. ஆ. உ இ. உ. ஈ. உ

3. உங்களுடைய பதில்களில் பின்வரும் குறிப்புகள் வசத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

   ஆரம்ப காலத்திலிருந்தே தேவனது தெய்வீக நோக்கம் வானத்தையும் பூமியையும் இயேசு கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்படுத்தி வருகின்றது. அவரது தரிசனம் உலகலாவியது. (எபேசியர் 1:9-10)

   யாரும் கெட்டுப்போவது அவருடைய சித்தமல்ல, சகல ஜாதியினரும் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவைப்பற்றி அறிகின்ற அறிவில் வளரவேண்டும். (2 பேதுரு 3:9)

**ஐந்தாம் அதிகாரம்:**

1. மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான். (கலாத்தியர் 6:7-8)

2. அ. உ, ஆ. பொ, இ. பொ, ஈ. உ, உ. உ, ஊ. உ

3. ஆகடியம், அநியாயம், மாறுபாடு, மாம்சம்

4. மீட்கப்பட்ட மனிதன் மீட்கப்பட்ட வாழ்க்கை வாழுதல்.

5. ஏசாயா 60:10, யோவேல் 1:10-12,16

6. யோவேல் 1:13-14, 2:12-13

7. இவ்வதிகாரத்தின் உப தலைப்புகளை மீயாய்வு செய்தல்

தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமை.
தேவனை மறத்தல்.
முறையற்ற விதைப்பு.
அவதானமின்மை.
சுய முயற்சி.
சபிக்கப்பட்ட இனப்பெருக்க முறை.

வாழ்வின் சூழ்நிலைகள்.
அக்கறையின்மை.
பூச்சிகளும் நோய்களும்.
முறையற்ற அறுவடை.
விவசாயம் செய்யப்படாத நிலம்.
அநீதியான அத்திபாரம்.
சொற்பமான வேலையாட்கள்.

**ஆறாம் அதிகாரம்:**

1. கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.

அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான். (சங்கீதம் 126:5-6)

2. ஒரு குறிப்பிட்ட இலக்கையடையும் பொருட்டு பின்பற்ற வேண்டியதாக உபாயங்கள் கொள்கைகள், முறைகள், திட்டங்கள் உள்ளன.

3. இந்த உபாயங்களில் எதையாவது தவறவிட்டிருந்தால், இவ்வதிகாரத்திலுள்ள உப தலைப்புகளை மீளாய்வு செய்யுங்கள்.

-ஒவ்வொரு தாவரத்திற்கும் இனப்பெருக்க திறன் இருக்கின்றது.
-அறுவடை செய்வதற்கு விதைப்பது அவசியம்.
-நீங்கள் விதைத்த அதே பருவகாலத்தில் அறுவடை செய்ய மாட்டீர்கள்.
-விதைப்பதையே அறுப்பீர்கள்.
-நீங்கள் சூழ்நிலைகளை பொருட்படுத்தாமல் விதைக்க வேண்டும்.
-நீங்கள் விதைக்கிற அளவிற்கு தக்கதாக அறுவடை இருக்கும்.
-விதைக்காத இடத்தில் அறுக்கவோ, அறுக்க முடியாத இடத்தில் விதைக்கவோ முடியாது.
-நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால் அறுவடை செய்வீர்கள்.
-இனப்பெருக்கம் செய்வதற்கு விதை இறக்க வேண்டும்.

**அதிகாரம் ஏழு:**

1. பூமி தன் பூண்டுகளை விளைவிப்பதுபோலவும், தோட்டம் தன்னில் விதைக்கப்பட்டவைகளை முளைவிப்பதுபோலவும், கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார். (ஏசாயா 61:11)

2. விதைகள் விருத்தியாவதின் பலனாக வெளியான நிலையான ஏற்படுகின்றது.

3. இந்த வளர்ச்சியின் நிலைகளில் ஏதையாவது தவறவிட்டிருந்தால், உப தலைபண்புகளை மீளாய்வு செய்யவும். ஜீவன், நல்ல நிலம், தண்ணீர், வெளிச்சம், காற்று, இடம், வேர் தொகுதி, ஓய்வு, கொடியோடு இணைந்திருத்தல், கத்தரித்தல், கால நிலை.

**அதிகாரம் எட்டு:**

1. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)

2. 2 தீமோத்தேயு 2:2

3. வல்லமை

4. அதை இன்றைக்கே அடையாளங்காணுங்கள்: ஆதாரத்தை விளங்கிக் கொள்ளுங்கள்: அதிகார-த்தை தனிப்பட்ட முறையிலும், சபையாகவும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

**அதிகாரம் ஒன்பது:**

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத்தேயு 11:28-30)

2. பாவம், சுயம், மனிதன்.

3. இலகுவானது, பாரமற்றது, இளைப்பாறுதலானது

4. அவரிடத்தில் வாருங்கள், அவரது நுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள், அவரைப்பற்றி கற்றுக் கொள்ளுங்கள்.

5. நீங்கள் தேவனுடைய சத்தத்தை அறிந்தால், உங்கள் தரிதனத்தை நிறைவேற்றுவதோடு வெற்றியும் காண்பீர்கள். தேவன் உங்களை தொடர்ந்தும் வழிநடத்துவார், நீங்கள் அவரது சொத்தாகவும்,

அவரது மீள்உற்பத்தியாளராகவும் இருபீர்கள்.

**அதிகாரம் பத்து:**

1. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். (கலாத்தியர் 3:29)

2. கலாத்தியர் 3:10, கலாத்தியர் 3:29

3. இரட்சிப்பு

4. உலகின் ஜாதிகள் ஆசீர்வதிக்கப்படுதல்

5. முழுமையான அறிவுறுத்தல்
ஆவிக்குரிய காரியங்ககளில் முதலீடு செய்தல்
அழைப்புக்கு கீழ்ப்படிதல்
தனியாக நிற்க விருப்பம்
தரிசனம்பெற்ற மனிதன்
தேவனை நெருக்கமாக அறிந்திருத்தல்

தேவனுடன் தொடர்பு
வெளிப்படுத்தப்பட்ட அறிவில் நடத்தல்
மற்றவர்களுக்கு பொறுப்பாக இருத்தல்
உப்புக்கொடுத்தவர்களை மீள உருவாக்கல்

அவரது தனிப்பட்ட திறமையை பார்க்க வேண்டாம்
பூமியில் பரதேசியாய் ஜீவிக்க விருப்பம்.

முழுமையான நம்பிக்கை
விசுவாசத்தில் உறுதி
நீதி
தாழ்மை
சமாதானத்தின் மனிதன்
தேவனுடைய சித்தம் செய்ய ஆயத்தம்
திரும்பி பாராமை
தேவனை தேடியமை
தாராள மனப்பான்மை
தேவனுக்கு மகிமையை செலுத்துதல்.

**அதிகாரம் பதினொன்று**

1. நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். கலாத்தியர் 6:9

2. பின்வரும் எந்தவொரு வசனத்தையும் பாவிக்கலாம். சங்கீதம் 72:16, சங்கீதம் 92:4, சங்கீதம் 107: 33-37, சங்கீதம் 126:5-6, ஆமொஸ் 9:13, ஆகாய் 2:19, சகரியா 8:12

3. யாக்கோபு, ஆபிரகாம், மோசே, தாவீது, கிதியோன்.

4. வெளிப்படுத்தல் 14:15